www.padippakam.com



# முறுவல்

எஸ்.பொன்னுத்துரை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

எஸ். பொ.

# முறுவல்

சுய மரபுத் தேடலிலே
ஒரு தமிழ் நாடகம்

மித்ர வெளியீடு

375-10, ஆற்காடு சாலை,
சென்னை-600 024 இந்தியா

படிப்பகம்

www.padippakam.com

முதற் பதிப்பு : நவம்பர் 1994
மித்ர : 8
உரிமைப் பதிவு
விலை

*MURUVAL*

(A Tamil Drama
in search of Tradition)
by

S. PONNUTHURAI

First Edition :
1st November, 1994

Printers :
Kokila Sree Printers
Madras-600 094

Price :

Pages :
120

Cover Design :
T. SOUNTHER,
TVEDVEJ -133, 6, 603
6000 Kolding
Denmark

Published by :
Dr. PON. ANURA

*MITHRA* PUBLICATIONS
375-10, Arcot Road
Madras-600 024 INDIA

தொகுப்பு : இளம்பிறை எம். ஏ. ரஹ்மான்

www.padippakam.com

# பதிப்புரை

புலம் பெயர்ந்து வாழும் நம் தமிழ் மக்கள் எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இவற்றுள் முக்கியமானது நமது இனத்துவ தனித்துவ அடையாளங்களை வெளிப்படுத்துதலும், அவற்றுக்கு ஓர் அங்கீகாரமும் கௌரவமும் சம்பாதித்தலுமாகும். நீண்ட காலத்திற்கு நாம் முகமற்றவர்களாக வாழவும் இயலாது. முகம் வேணும் என்கிற அவதியிலே, போலியான முகமூடிகளை அணிந்து கேலிக்குரியவர்களாக மாறிவிடவும் கூடாது.

நமது இனத்துவ தனித்துவ அடையாளங்களைத் தக்க வைப்பதற்கு தமிழ் மொழியே ஏற்ற கருவி என்பதை யாரும் மறுக்க இயலாது. கலை-இலக்கியங்கள் மூலமாகவும் தமிழ் நமது வாழ்க்கையின் உயிர்ப்புள்ள அம்ஸமாக பிணைந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆனால், கலைத்துறையிலே—குறிப்பாக நாடகத் துறையிலே—நமது தனித்துவத்தை நிலை நாட்டும் படைப்புகளை அளிக்கும் அக்கறை திருப்தியாக இல்லை. நாம் மண்ணின் மைந்தர்களாக வாழ்ந்த காலத்திலேகூட, தமிழ் நாடக மரபு ஒன்றினை வளர்த்தெடுக்கத் தவறிவிட்டோம். சினிமாவின் தாக்கத்தினாலும் நாடகம் நலிந்தது. புதிது என்கிற நினைப்பில், மேலைநாடுகளின் பாணிகளையும் உத்திகளையும் தழுவினோம். புதியவற்றின் தாக்கத்தினை ஏற்றுக் கொள்ளும் அதே வேளையில், நமது மரபின் மீள் உயிர்ப்பும் அவசியம். இல்லாவிட்டால் நமது நாடகப் படைப்புகள் மலிவான Imitationsகளாகத் தாழ்ந்து விடும். பரதநாட்டியம் கற்கும் சிறுமிகளை வைத்துக்

www.padippakam.com



குழு நடனங்களை மேடையேற்றி தமிழ் மேடையின் தனித்துவத்தைப் பாதுகாக்கலாம் என்று நினைப்பதும் பேதமையே.

புலம் பெயர்ந்த நாடுகளின் மேடை வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தி, தமிழ் நாடக மரபுகளுக்குப் புதிய ஜீவன் அளிக்கும் நாடகப் பாணி ஒன்று உருவாக்கப்படுதல் வேண்டும். இது இலகுவான பணியல்ல.

சுயமரபுத் தேடல்களாக அமையும் நாடக நூல்கள் பல நூலுருவில் வெளிவருதல் வேண்டும். அப்பொழுதுதான், நாடகத்துறை சார்ந்த கலைஞர்களுக்குப் புதிய தயாரிப்புகளுக்கான பிரதிகள் கிடைக்க வழி சமையும். இவற்றையும் உள்வாங்கி, மித்ர வெளியீடு தன்னுடைய பிரசுர அக்கறைகளை அகலித்துள்ளது என்பதை அறியத் தருவதில் மகிழ்கின்றேன்.

தமிழ் நாடக வடிவாக்கத்திலே, பல புதுமைகளைச் சாதித்து வரும், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் நாடகத் துறைத் தலைவரும், பேராசிரியருமான செ. இராமானுஜம் அவர்கள் இதற்கு வழங்கியுள்ள முன்னுரையில் நாடகக் கலைஞர்களுக்கு பல ஆக்கபூர்வமான யோசனைகளை வழங்கியுள்ளார். இந்நூலும் தமிழ் பற்றிய அக்கறைகளை அகலிக்க உதவுமென நம்புகின்றேன்.

31-10-94 டாக்டர் பொன். அநுர

MITHRA PUBLICATIONS

1/23, Munro Street
Eastwood 2122
AUSTRALIA

✆ (02) 868-2567

www.padippakam.com

## நாடகப் பணி:

# ஓர் ஆவணம்

இளம்பிறை
எம்.ஏ. ரஹ்மான்

'**சிறுகதை** மன்னர், நாவலாசிரியர், கவிஞர், விமர்சகர், பிரச்சினைகளை அறுவடை செய்யும் உரத்த சிந்தனை யாளர்' என்கிற எஸ்.பொ மான்மியம் பழசு. அவருடைய அரை நூற்றாண்டுத் தமிழ் ஊழியமும், மானுஷீகத் தேடலும் ஈழத்து இலக்கியத்தை மட்டுமல்லாமல், உலகளாவியதாக அகலித்துள்ள கலை-இலக்கிய முனைப்புகளையும் செழுமைப்படுத்தியுள்ளன. அவரு டைய தமிழ் ஊழியத்தின் பிறிதொரு பரிமாணத்தைத் தரிசிப்பதற்கு 'முறுவல்' உதவும். அவர் ஒரு பரமார்த்த நாடகக் கலைஞர் என்பதைச் சிலர் வசதியாக மறந்து விட்டார்கள்; அல்லது மறைத்து விட்டார்கள். இந்த அவலங்களை 'முறுவல்' அறுக்கும்.

நடிப்பின் மூலமே எஸ்.பொ. நாடகக் கலைக்குள் நுழைந்தார். துவக்கத்தில் ஆங்கில மொழி நாடகங்கள். பின்னர் தமிழ் நாடகங்களிலே வில்லன் வேஷம். 1953 ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற சமாதான மகாநாட்டில் அவர் எழுதி—நெறிப்படுத்தி—நடித்த 'சாவு' என்னும் நாடகம் எம்.ஜி.ஆர். தலைமையில் அரங்கேறியது. **கிருஷ்ணமூர்த்தி, முகவை இராஜ மாணிக்கம்** முதலியோர் இதற்கு ஊக்கிகளாகச் செயற் பட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எஸ்.பொ. நாடக உலகின் தொடர்புகளையும் ஞானங் களையும் விரிவுபடுத்திக் கொண்டார். இருப்பினும், நாடகத் துறையிலே முனைப்பாக ஈடுபடும் வாய்ப்பு மட்டக்களப்பிலேதான் வாய்த்தது.



படிப்பகம்

www.padippakam.com



மட்டக்களப்பின் நாடாளுமன்றப் பிரதிநிதியாகவும், பின்னர் அமைச்சராகவும் ஈழத்திலே பிரபலம் பெற்றவர் **செ. இராஜதுரை.** நல்ல மேடைப் பேச்சாளர்; பத்திரிகைகளுடன் தொடர்புடைய எழுத்தாளர். அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோரின் செல்வாக்கிற்குள் உட்பட்டு மேடை வித்தைகள் பயின்றவர். அவருடைய இலட்சியக்கனவுகளுள் ஒன்றாய்ப்பிரசித்தம் செய்யப்பட்ட 'சங்கிலியன்' நாடகம் 1957இல் அரங்கேற்றப்பட்டது. கதை - வசனம் - நெறியாள்கை-கதாநாயகன் எல்லாம் அவரே. அவரும் கதாநாயகியாக ஓர் இளம் பெண்ணும் நடித்தமை புதுமையாக இருந்தது. விளம்பரங்கள் தூண்டிய எதிர்பார்ப்புகளைச் 'சங்கிலியன்' நிறைவேற்றவில்லை. அக்காலத்தில், கிழக்கிலங்கையில், தமிழரசுக் கட்சிக்கு எதிரான மார்க்ஸிஸ பிரசார அணிக்கு எஸ்.பொ தலைமை தாங்கினார். எனவே, 'சங்கிலியன்' நாடகப் பிரதியிலும் நெறியாள்கையிலும் நிரம்பி வழிந்த குளறுபடிகளைப் பகிரங்கமாக விமர்சனஞ் செய்தல் தவிர்க்க முடியாததாக அமைந்தது. எஸ்.பொ.வின் விமர்சனங்கள் காரமானவை. 'சங்கிலியன்'காரருக்கு மகா எரிச்சல். நாடகத்தைத் தயாரிக்கத் தாம் பட்ட சிரமங்களை விலாவாரியாக விளக்கி, 'பிழை காண்பது எளிது. சங்கலியனிலும் பார்க்க நல்லதொரு நாடகத்தைப் பொன்னுத்துரையால் தயாரிக்க முடியுமா? இந்தச் சவாலை அவர் ஏற்பாரா?' என்று இராஜதுரை மேடைகள் தோறும் முழங்கினார்.

அந்தச் சவாலை எஸ்.பொ ஏற்றார். அவருடைய நாடக அக்கறைகள் மீளுயிர்ப்புப் பெற்றன. 'முதல் முழக்கம்' எஸ். பொ. எழுதி-நெறிப்படுத்த, மெதடிஸ்த கல்லூரி மாணவர்கள் நடிக்க, அதே ஆண்டில் அரங்கேறியது. பின்னர் பொது வாழ்வில் பங்களிப்புச் செய்த **கவிஞர்**

www.padippakam.com



காசி ஆனந்தன், செழியன் பேரின்பநாயகம், நவரத்தி னம், புண்ணியமூர்த்தி, பாக்கியராஜா, சின்னலெப்பை, காலித், ஆதம்லெப்பை, கணபதிப்பிள்ளை, இஸ்மாயீல், மத்யூ ஆகியோர் இதில் நடித்தவர் களே. அரங்க அமைப்பிலும், ஒளியமைப்பிலும் புதிய பாணிகள் அறிமுகமாயின. 'முதல் முழக்கம்' பல வெற்றி களைச் சாதித்தது. இலங்கைக் கலைக் கழகப் பரிசினை முதல் தடவையாக மட்டக்களப்பு மண்ணுக்குச் சம்பா தித்துக் கொடுத்தது. அந்தக் காலத்தில் பதினோரா யிரம் ரூபாய் நிகர லாபம் சம்பாதித்ததும் சாதனையே! மட்டக்களப்பு மண்ணிலே வட்டக்களரியில் ஆடும் கூத்து மரபு நீண்டகாலமாக நிலைத்து, பண்பாட்டுப் பெரு மைக்கு அணி செய்கிறது. விபுலாநந்த அடிகளார் 'மதங்கசூளாமணி' மூலம் முகப்பு அரங்க மேடையை இலக்கிய ரீதியாக அறிமுகப் படுத்தினார். அவர் அறிமு கம் அரங்க நிகழ்வாக நிலைக்கவில்லை. எஸ். பொ. வின் 'முதல் முழக்கம்', 'அந்த நாள்', 'தலைக்கு மேல்', 'கூண்டுக்கு வெளியே', 'வலை' ஆகிய நாடகங் கள் முகப்பு நாடக மேடையை மாற்று நாடக மரபாக மட்டக்களப்பு மண்ணிலே நிலைபெறச் செய்தது. ஆறு மாதங்கள் இலங்கை வானொலியின் தொடர் நாடக மாக 'சானா'வினால் தயாரித்தளிக்கப்பட்ட எஸ். பொ. வின் 'மட்டக்களப்பு மாப்பிள்ளை' மட்டக்களப்பின் அனைத்து வட்டார வழக்குகளையும் அழகுடன் அறிமுகப்படுத்தியது. நாடக மேடைக்கு மட்டக்களப்புத் தமிழ் ஆகுமானது; செழுமையானது என்பதை எஸ். பொ.வின் நாடக ஊழியமே முதன் முதலில் நிறுவியது. மற்றவை எஸ். பொ. ஏற்படுத்திய தாக்கத் தின் பின்விளைவுகளே. ஈழத்து நாடக வரலாறு எழுது வோர் இந்த உண்மைகளைப் பிரசித்தப்படுத்தத் தயங்குதல் நியாயமல்ல.

எழுபதுகளின் அரம்பத்தில் மேனிலை வகுப்புகளுக்கான தமிழ்ப்பாட நூல்களை ஆக்கும் குழுவின் உப

www.padippakam.com



தலைவராய் எஸ். பொ. நியமனம் பெற்றார். புதிய நூல்களின் மொழிநடை குறித்து அவர் சமர்ப்பித்த கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஏட்டு மொழிக்கும் வீட்டு மொழிக்கும் அர்த்தபூர்வமான நெருக்கத்தினை ஏற்படுத்தும் யஞ்ஞத்திலே எஸ்.பொ. குதித்தார். கொழும்பில் என்னுடனேயே தங்கினார். சதா வாசிப்பு-எழுத்து-சிந்தனை. அவர் அக்காலத்தில் மேடையேறிய நாடகங்கள் அனைத்திலும் பார்வையாளனாய்ப் பங்கு பற்றுவதிலே புதிய ஆர்வங் காட்டினார். **சுஹேர் ஹமீதும், தாசீஸியஸும்** முகப்பு அரங்க மேடைக்குப் புதிய ஜீவன் ஊட்ட முந்தி நின்ற காலம் அது. ஹமீது புகுத்திய எளிமையும், ஆரவாரமற்ற அர்த்தம் நிறைந்த பாணியும் எஸ். பொ.வைக் கவர்ந்தன. ஹமீதின் நட்பினை அவர் சம்பாதித்தார். நாடகப் பிரதிக்கும் அரங்கக் கலைக்குமுள்ள இணக்கங்கள்-முரண்பாடுகள் குறித்து அவர்கள் நடாத்திய சம்பாஷணைகள் சுவாரஸ்யமானவை. ஹமீது ஏராளமான நாடக நூல்களைக் கொண்டு வந்தார். எஸ். பொ. பழைய தமிழ் நாடக மரபுகளை அறிவதற்கான நூல்களை **மகாவித்துவான் நடராஜா**, கலாநிதி **தனஞ்செயராஜசிங்கம்** ஆகியோரிடம் பெற்றார். நாடகம் அவர் தியானத்தில் முக்கியத்துவம் பெற்றது. தமிழ் நூல்களில் இடம் பெறவேண்டிய நாடக அலகுகளை உருவாக்குவதுடன் சம்பந்தப்பட்டது இத்தியானம் என்பதைப் பின்னர் அறிந்தேன். தமிழ் கற்றலிலே எஸ். பொ.வின் ஆளுமை வேரூன்றுவதை ஆலோசனைக்குழு உறுப்பினராய் இருந்த கலாநிதி **கைலாசபதி** விரும்பவில்லை. அவர் மேலிடத்துச் செல்லப்பிள்ளையாகிக் கொண்டிருந்த காலம் அது. அவருடைய செல்வாக்கினால் எஸ். பொ. பாடநூல் குழுவிலிருந்து நீக்கப்பட்டதுடன், அவர் வகுத்த கொள்கையும் கிடப்பிலே போடப்பட்டது! தோல்விகள் என்றுமே அவரைத் துவளச் செய்ததில்லை. அவற்றை

www.padippakam.com



வெற்றிப் படிகளாக்கி முன்னேறியதுதான் அவர் வரலாறு. நாடகம் பற்றிப் புதிதாக உள்வாங்கிய சங்கதிகளின் பெறுபேறாக 1974 இல் 'முறுவல்' நாடகப் பிரதியை எழுதி முடித்தார். நெறியாள்கைக்கு சுஹோர் ஹமீது சம்மதித்தார். புனித மத்தேயு கல்லூரி யின் மாணவர்களுடைய நடிப்பு ஆற்றல்களையும் பயன்படுத்தி 26-7-74 இல் கொழும்பு வை. எம். பீ. ஏ. மண்டபத்தில் அரங்கேறியது. இப்பொழுது கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவராக இருக்கும் கலாநிதி **சி. மௌனகுரு** மழைக்காட்சியை அமைப்பதில் உதவினார்.

'முறுவல்' அரங்கேற்றத்தின் வெற்றி தோல்விகள் குறித்து ஹமீதும் எஸ். பொ.வும் நிறையவே விவாதித் தார்கள். இதன் பயனாக 'முறுவல்' புதுக்கி எழுதப் பட்டது. ஸ்ரீலங்கா—இந்தியப் பண்பாட்டுறவுக் கழகம் முறுவலை மேடையேற்ற ஆர்வங் காட்டியது. அதன் செயலாளர் **மாத்தளைக் கார்த்திகேசு** நாடறிந்த நாடகக் கலைஞர். கனதியான ஒரு நாடகத்தினை அரங்கேற்றும் பொழுது, சிறு சிறு நாடகக் குழுக்களிலே சிதறிக் கிடந்த நடிப்பாற்றல்களை ஒன்று திரட்ட முடியுமென்று நம்பினார். இவ்வாறு தயாரான 'முறுவல்' 3-8-75இல் கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில், எஸ். பொவின் முப்பதாண்டுத் தமிழ் ஊழியத்தைப் பாராட்டும் முகமாகவும் அரங்கேறியது.

இந்த நாடகத்தில் விஸ்வாமித்திரன் வேடத்திலே, **எம். ஏகாம்பரம்** அவர்களும் 'நான்' என்னும் சத்தியக் கலைஞனாக **விஸ்வநாதன் மோகன்ராஜும்** சிறப்பாக நடித்தனர் என்பதும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



**எம். செல்வராஜா**; ஒப்பனை: **'சனா' விஜயவர்த்தனா** ஒளியமைப்பு: **காமில்**. இதிலே பங்கு பற்றிய அனைவரும் புதியதோர் நாடக அநுபவத்திலே பங்கு பற்றிய தான திருப்தியைத் தெரிவித்தார்கள்.

அவுஸ்ரேலியாவில் 'பரதேசி'யாக வாழும் எஸ்.பொ, புலம் பெயர்ந்த நாடுகளிலே வாழும் தமிழர்களுடைய இனத்துவ-தனித்துவ அடையாளங்களை நிலைநாட்டும் புதிய ஊழியத்திலே மூழ்கியுள்ளார். இந்தத் தனித்துவ அடையாளத்தினைத் தமிழ் மூலமே வென்றெடுத்தல் சாத்தியம் என நம்புகிறார். பல்லின மக்கள் வாழும் சூழலிலே, தனித்துவ அடையாளத்தை வென்றெடுப்பதற்கு நாடகக் கலை சக்திமிக்க சாதனம் என இனங் காணுகின்றார். புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள நவீன மேடைகளின் வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தி, நமது கலாசார மரபுகளை உள்வாங்கிய, புதிய அமைப்பினைக் கொண்ட நாடகங்கள் உருவாக்கப்படுதல் வேண்டும் என்கிற தேவையைப் பிரசித்தஞ் செய்துள்ளார். இப்பணியின் திருட்டாந்தமாக எஸ்.பொ புதுக்கியமைத்துள்ள 'முறுவல்' உங்கள் கரங்களிலே வைக்கப்பட்டுள்ளது.

இந்நாடகத்தின் தனித்துவத்தையும் சிறப்பியல்புகளைப் பாராட்டுவதற்கும், இதன் எல்லைக்கட்டுகளை விமர்சிப்பதற்கும் என்னைப்பார்க்கிலும் **பேராசிரியர் செ. இராமாநுஜம்** அவர்களே முற்றிலும் தகுதிவாய்ந்தவர். அவர் வழங்கியுள்ள முன்னுரை உண்மையில் முறுவலுக்குப் பெருமை சேர்ப்பதுடன், உண்மையின் பல்முகத்தான தோற்றங்களையும் தரிசிக்கவும் உதவுகின்றது. இந்நூல் உருவாகிய வரலாற்றுக்கு நான் ஒரு சாட்சியாய் வாழ்வதினால், அவற்றை நேர்மையாக ஆவணப்படுத்துவதற்கான உரித்தினை மட்டும் இத்தால் எடுத்துக் கொண்டேன். ❑

www.padippakam.com

சுய மரபுத் தேடல்:

# முறுவல்

பேராசிரியர்
செ. இராமானுஜம்
நாடகத்துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

**கோவையில்** சுபமங்களா நடத்திய நாடக விழாவில் எஸ். பொவுக்கும் எனக்கும் அறிமுகம் ஏற்பட்டது. உதட்டிலும் கையிலும் முறுவல்கள் தவழ அவர் என்னைச் சந்தித்தார். மனத்துள் ஒருவகை மரியாதை யுடன் முன்னுரை அளிக்க இசைவைத் தந்து அவர் கையிலிருந்த 'முறுவல்' கையெழுத்துப் பிரதியைப் பெற்றுக் கொண்டேன். இருந்தும் உள்ளத்துள் ஒரு கிலேசம் இருந்தது. நாடகம் என்னுள் பாதிப்பு எதையும் ஏற்படுத்தாவிட்டால் எப்படி முன்னுரை எழுதுவது. ஒப்புக்கு முன்னுரை எழுதுவதோ, பாதிப்பு ஏற்படுத்தாத காரணங்களை விமர்சித்தோ முன்னுரை எழுதுவது இக்கலையோடு எனக்குள்ள சுயதர்மத்திற்கு உடன்படாதவை. ஒரு வேளை புதிய இளம் எழுத் தாளர்களை ஊக்குவிப்பதற்கு அவ்வாறு எழுதுவது பயன் தரலாம். வித்துவமிக்க கலைஞரான எஸ். பொ வுக்கு அப்படியொரு முன்னுரை பற்றிச் சிந்திப்பதே அவர்பால் நான் கொண்ட மரியாதையைக் கேள்விக் குறியாக்குவதாகும். சில மணித்துளிகள் அவருடன் நடத்திய உரையாடலின்போது சுயமரபை அதற்குரிய அடையாளங்களுடன் தேட வேண்டும் என்ற அவரது ஆதங்கத் துடிப்புக்கள் என் இதயத் துடிப்புகளோடு நீண்ட நாள் பழகியுள்ளவை என்ற உணர்வு எனக்குத் தோன்றியது. 'முறுவ'லை முதலில் வாசித்தபோது அவ்வுணர்வுகள் மீண்டும் என்னுள் எதிரொலித்தன. முதல் வாசிப்பிலேயே நாடகத்தை முற்றும் படிக்கும்படி வைக்கும் ஈர்ப்புத்தன்மைக்கப்பால் எப்போதோ பரிச்சய மாகி அது தொடர்ந்து நிலவும் தன்மை பெற்ற

www.padippakam.com



எஸ். பொ.வாக என்னுள் வேர்களைப் பதித்துக் கொண்டிருந்தார். 'கலா சத்தியத்தை உணர்த்தத் தன்னையேப் பலிப்பொருளாக நியமித்துக் கொண்ட 'நான்' என்னும் கலைஞன், என்னோடு நெடுநாள் பழகியவன் என்ற உணர்வு என்னுள் உறுதிப்பட்டுக் கொண்டிருந்தது.

முறுவலைப் பற்றிக் கூறும்போதெல்லாம் எஸ்.பொ. வைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. முறுவல் நாடகத்துள் எஸ். பொ தன்னை எஸ். பொ.வாகவே அறிமுகப்படுத்தி 'நான்' என்னும் கதாபாத்திரத் திற்குள் சங்கமித்துக் கொண்டிருப்பவர். அத்துடன் நடி, விடன், சூத்திரதாரன், மேனகை, நீதிதேவன், சண்டாளன் ஆகிய கதாபாத்திரங்களோடும் தன்னை இழைத்துக் கொண்டிருப்பவர். முறுவல் நாடகத்தின் மையமே 'நான்.' அதாவது எஸ். பொ என்ற கலைஞரின் சிருஷ்டி நிலை சக்திக்கும், ஏகன் என்ற இறைநிலை சிருஷ்டி சக்திக்கும் உள்ள சமத்துவப் போராட்டம்தான். ஏகனுக்கு 'சத்தியம் பற்றிய ஒரு எண்ணக் கருவினை நிலை நிறுத்தவேண்டி 'கோர சங்கார' நாடக மொன்று ஆட மாமாங்கங்கள் மட்டுமன்றி, யுகங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் நான் என்ற கலைஞனின் வித்துவப் படைப்பில் கருவினை நிறுவும் நாடகச் சிருஷ்டியை ஆடிமுடிக்கக் குறிப்பிட்ட மணித்துளிகள் போதும். ஏகனின் படைப்புத் தோற்றுவிக்கும் எக்காள முறுவல், எஸ். பொ.வின் வித்துவச் செருக்கில் எழும் பெருமித முறுவலுக்குள் ஒடுங்கி ஏகனைச் சாட்சியாக நிற்கும்படியும் செய்து விடுகிறது. இதுவே முறுவல் நாடகத்தின் தலை நிகழ்வும் கூட. இங்கு எஸ். பொ தன்னைக் கலைஞர் களின் பிரதிநிதியாக நிலை நிறுத்திக் கொள்கிறார்.

மேற்கூறிய தலைநிகழ்வின் பின்புலத்தில் சிந்தனை யோட்ட நிகழ்வுகளும், திருஷ்டாந்த நிகழ்வுகளும்

www.padippakam.com



பின்னிப் பிணைந்திருக்கும் கட்டமைப்பே முறுவல் நாடகத்தின் வடிவாக்கமாகும். இதன் வடிவத்துள் இந்து நாடகக் கூறுகளான வந்தனை, கொலு, பிரஸ்தாவனை, அர்ப்பாயம், வியாயோகம், பிரகசனம் ஆகியவற்றோடு கூச்சம், பேய்க்காரம், முடிவுரை என்னும் உள்நிகழ்வுத் தொனிக்கும் தலைப்புக்களும் இணைந்து காட்சிகளாகப் பரிணமிக்கின்றன. இதன் பொருள் முறுவல் இந்து நாடகக் கூறுகளை அப்படியே அடியொற்றி ஆக்கப்பட்டதல்ல. முறுவல் இன்றைய சூழலில் எழுதப்பெற்ற நவீன நாடகம். இந்து நாடகக் கூறுகள் நாடக ஆக்கத்திற்கான உள்வாங்கல்கள் மட்டுமே. எப்படியெனில் இந்து மரபுப்படி மேற்கூறிய கூறுகளும் வந்தனை கொலு போன்றவையும், பிரஸ் தாவனையும் நாடக ஆக்கத்தின் கட்டமைப்புக் கூறு களாகும். வியாயோகம், பிரகசனம் ஆகியவை தனித் தனியான நாடக வகைகளாகும். இங்கு அவைகள் காட்சிகளின் உள்ளடக்கத்தைத் தொனிப் பொருளாகச் சுட்டி நிற்கும் தலைப்புக்களாகவே கையாளப்பட் டுள்ளன. இந்திய நாடகங்களில், குறிப்பாக சமஸ்கிருத நாடகங்களில், பிரஸ்தாவனைக்குள் நாடகவகைச் சூத்திரங்கள் தரப்படுவதில்லை. எந்த வகையைச் சார்ந்தது என்ற சுட்டுதலே காணப்படும். காரணம் அத்தகைய கூறுகளும், வகைகளும் வழக்கத்திலிருந் தவைகள். எனவே, எல்லோரும் அறிந்தவைகளாக இருந்தன. இன்று இவை மறைந்தும் மாய்ந்தும் விட்டதால் அவை பற்றி விளக்கம் தரவேண்டிய நிர்ப் பந்தம் எஸ்.பொவுக்கு ஏற்பட்டுள்ளது. இத்தகைய நிர்ப் பந்தம் சுயமரபுத் தேடலின் முயற்சியில் ஈடுபட்டுள்ள கலைஞனின் தவிர்க்க முடியாத தொன்றாகும். நாடகம் ஒன்றின் வடிவ அமைப்பு நாடக ஆசிரியரின் தேவைக்கும் சுதந்திரத்திற்கும் உட்பட்டதாகும். தச ரூபங்களுக்குள் ஒடுங்காத தேவை வந்தபோது

www.padippakam.com



பதினெட்டு உபரூபங்கள் தோன்றின. அதுபோன்று எஸ். பொ தற்காலப் பின்னணியில் மேலும் ஒரு ரூபத்தை ஆக்கித்தர முனைந்து முயற்சித்துள்ளார்.

நாடகமொன்றின் வடிவாக்கத்தை நிர்ணயிப்பது அந்நாடகம் எடுத்துக் கொண்ட விசாரணைப் பொருள்களும் அவ்விசாரணைப் பொருள்களுக்கான நாடக உள்நிகழ்வுகளுமேயாகும். முறுவல் நாடகத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவை சமத்துவம் பற்றிய நிலவும் சுடலைச் சமத்துவம், கலவிச் சமத்துவம், சமுதாயச் சமத்துவம் ஆகிய மூன்று முரண்பாடுகளை அவற்றின் பகைப்புலத்தில் காண்பதாகும். அத்துடன் தர்மம் என்ற நியாயத்தில் எழுகிற அதர்ம நெறிகளை ஆய்வதுமாகும். இவை விவாதத்திற்குரியவைகள். நாடகத்தில் விவாதங்கள் தவிர்க்க முடியாது என்ற நிலையில் அமையும் நிகழ்வுகளின் வெளிப்பாடாக அமைதல் வேண்டும். முறுவலில் மைய விசாரணையே விவாதங்களாகித் தவிர்க்க முடியாதவைகளாகின்றன.

நாடகத்தின் நிகழ்வுகள் என்பது பிரச்சினைகளை எதிர்கொள்ளுதலும் அதற்கு எதிர்வினையாற்றுதலுமாகும். இவற்றைப் புலப்படுத்திக் காட்டுவதே நடிகர்களின் கடமையாகும். முறுவல் நாடகத்தின் முதல் பிரச்சினை பார்வையாளர்களை சமத்துவ விசாரணைக்குத் தயார் செய்தலாகும். இந்தப் பிரச்சினையை எதிர் கொள்ளும் பொறுப்பு நடி, விடன், சூத்திரதாரன் ஆகியோரதாகும். இன்றையத் தலையான சமுதாயச் செயலான வாழ்க, ஒழிக என்னும் கோஷத்திற்குள் தங்களை ஆட்படுத்தி எதை வாழவைப்பது எதைச் சாகடிப்பது என்பதைத் தேர்ந்தெடுக்கும் செயலில் இறங்குகிறார்கள். அதற்கு உந்துதலாகக் கொசுக்கடி அமைகிறது. இரத்தம் உறிஞ்சுதல், வர்க்கப் போராட்டம், காதலின்பம்,

www.padippakam.com



கலவிச் சுகம், வாழ்தல், சாதல், சுடலை ஞானம் போன்ற பல்வேறு எண்ண நுட்பங்களுக்குத் தாவித் தாவி பார்வையாளர்களைப் பிணைத்து சமதர்மம் என்ற விசாரணைக்கு ஈர்த்துச் செல்கிறார்கள். கூத்து மரபி லுள்ள கட்டியங்காரன் பாங்கைத் தம்முள் பகிர்ந்து இந்த எண்ண ஓட்டங்கள் எல்லாமே ஒன்றையொன்று குழப்பி அர்த்தமற்றவைகளாக்கி வாய்ப்பறை ஓசை யாகவே நிற்கின்ற கோஷங்களாகவும், வியாக்கியானங் களாகவும் நிறைவுகின்றன என்ற தொனியில் புலப் படுத்தப்படுகின்றன.

நடி, விடன், சூத்திரதாரன் ஆகியோர் நாடகத்தை அறிமுகம் செய்பவர்கள் என்பதற்கு அப்பால், கதை கூற்றுநர்களாகவும் (Narrator) கருத்துச் சுட்டுபவர் களாகவும் (Commentator) திகழ்கிறார்கள். கதைக் கூற்று என்பது நடந்த சம்பவங்களின் தொகுப்புக்களாகி, அவை பற்றியக் கருத்துச் சுட்டுதல்களுக்கு இழுத்துச் செல்பவைகளாக அமைந்துள்ளவை. கருத்துச் சுட்டுதல் கள் விமர்சனங்களாக மட்டும் நிற்காமல் பார்வையாளர் களின் சிந்தனைகளைத் தூண்டி நிற்பதை நோக்க மாகக் கொண்டவை. நிகழ்வுகளைப் பார்த்து முடித்த பார்வையாளன் என்ற நிலையில் எஸ்.பொ. நேரடி யாக அவைக் கூடத்திலிருந்து மேடைக்கு வருவதன் மூலம் இந்நோக்கம் தூலமாக்கப்பட்டும் தரப்படுகிறது. கலவி சமத்துவமும், சமுதாய சமத்துவமும் தர்மநியா யத்தின் அதர்மச் சாயல்களும், விஸ்வாமித்திரனின் காம வைராக்கியத்தை மேனகை மூலம் நெகிழச் செய்யும் இந்திர ஜாலமாகவும், வயிற்றுப்பசியைச் சண்டாளன் குடிசையுள் நாய் மாமிசம் உண்பதற்கு விஸ்வாமித்திரன் காட்டும் ஆபத்தர்ம வியாக்கியானம் மூலமும் எடுத்துக் காட்டு நிகழ்வுகளாக்கி விமர்சனத்துக்கு ஆட்படுத்தப் படுகின்றன. கையில் குழந்தையை ஏந்தி நிற்கும் மேனகையை விஸ்வாமித்திரர் புறக்கணித்தல் என்பது

www.padippakam.com



இரவிவர்மா சித்திரத்திலுள்ள உறைந்த நிலைப் படிமத்தைத் தாண்டி மேனகையின் தர்மநியாயத் தர்க்கங்களாக்கப்பட்டுள்ளது. அது போன்றே சண்டாளன் விஸ்வாமித்திரனின் ஆபத்து தர்மம் என்னும் சுயநலத்தின் அடிப்படையான வருணாச்சிரமம் தர்மத்தின் அதர்மப் பாங்கை விமர்சித்துக் காட்டுகிறான். இந்ரன் விஸ்வாமித்திரனின் பகைப்புலமாக நின்று விஸ்வாமித்திரன் தோல்விக்கு மகிழ்ந்து மழையைக் கொட்டச் செய்கிறான். மழைகூட ஒரு வகையில் பாத்திரமாகி இந்திரனாலா அல்லது ஏகனாலா பெய்யப்பட்டது என்ற சர்ச்சைப் பொருளாகிறது. இங்கு கலைஞன் நேரடியாகத் தோன்றாமல் சண்டாளனின் 'நெஞ்சுக்குள் உள்ள ஈரம் விஸ்வாமித்திரனின் மூலாம் பூசிய தர்மத்தின் சாயத்தை கரைத்துக் காட்டும் மழையாக மாறி' மெத்த பெய்க மெத்த பெய்க' என்ற வரிகளுக்குள் ஒடுக்கி முறுவலிக்கிறான்.

உண்மையில் நாடகத்தின் உள்ளோட்டமான நிகழ்வு முறுவல் என்னும் செய்கையின் பல சாயல்களாகும். ஏனெனில் முறுவலித்தல் என்பது ஒரு புறச்செயலன்று. அது உள்ளுணர்வு உதிர்த்தல் என்னும் நிகழ்வேயாகும். பெருமிதம், ஆன்மசுகம், உவகை, பரிதாபம், ஏளனம், எக்காளம், அர்த்தமின்மை, ஆமோதித்தல், உள்ளார்த்தம் கற்பித்தல், பலவீனம் பரிகசித்தல், செருக்கு போன்ற பல்வேறு அகச்சலனங்களைத் தொனிப் பொருள்களாகக் கொண்டு நிற்பது. மேடையில் தோன்றி சம்பவங்களில் ஈடுபட்டு நிற்கும் பாத்திரங்களுடைய அகச்சலனங்களின் புலப்பாட்டைக் கண்கூடாகவும், மேடையில் பெரும்பாலும் தோன்றாமல் தோன்றி நிற்கும் எஸ்.பொ வுடைய தர்க்க நியாயங்களின் புலப்பாட்டை உள்ளுரையாகவும் கொண்டு நாடகம் வளர்கிறது. சமத்துவ தர்மம், ஞானம், கலவி, சமுதாயம் ஆகிய மூன்று நிலைகளிலும் நடைமுறைச் சாத்திய

www.padippakam.com



மான ஒரு தர்ம விசாரமாகத் திகழ்வதற்குப் பதில், என்னல்களுடன் கூடிய சின்னஞ்சிறு கதைகள் பேசும் திண்ணைப்பேச்சு பாணியில் மட்டும் நடைபெறும் நடத்துநர் கொலுவுக்குப் பின்னால் இந்த அவலத்தைப் பரிதாபமாக ஒரு முறுவலுடன் பார்த்து நிற்கும் எஸ். பொ.வைக் காணலாம். மரபின் கூறு அறியாமையால் அதனை விளக்கிக் கொடுக்க வேண்டிய இன்றைய நிலைக்குப் பரிதாபப்படும் புன்னகையாகவும் அது பிரஸ்தாவனையில் படர்கிறது. இறைவனின் எக்காளத்தில் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம் ஆகியவற்றுள் சங்காரமே முழங்கி நிற்கும் அவரது படைப்பு மமதையின் குமிண்சிரிப்பு அவையடக்கமாகப் பரிகசித்து ரசிக்கும் கலைஞனின் உவகை முறுவலுக்குள் அடக்கம் செய்யப்படுகிறது. காதலை வெறும் காமக் கலவியாக ஒடுக்கிக் கொள்வதிலும், அதர்ம நெறியை தர்ம உள்ளார்த்தமாகக் கொண்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்வதிலும் கண்ட ஆன்ம சுகத்தைத் தன் உதட்டையும் தாண்டாத உவகைக்குள் விஸ்வாமித்திரன் ஒடுக்கிக் கொண்டு நிற்பதை, அவனது பல ஹீனத்தைச் சுட்டிக்காட்டும் இந்ரனின் போதைச் சிரிப்பிலும், முனிபுங்கவனது இழிந்த நிலைக்கு வெட்கப் பட்டு நிற்கும் சண்டாளனது குறுநகையிலும் துலங்கச் செய்து நிற்கும் முத்திரைகளாக எஸ்.பொவின் குறும்புச் சிரிப்பு பதிந்து நிற்கிறது. மழைபெய்தலுக்குத் தான் தான் காரணம் என்ற இந்ரனின் வெற்றிப் புன்னகையும், அதை தனது லீலாவினோத மமதைக்குள் அடக்கிக் கொள்ளும் ஏகனின் அகங்காரப் புன்னகையும், அர்த்தமற்றவைகள் என்று உதட்டின் உதிர்வாகத் திகழும் கலைஞனின் முறுவல் காட்டி நிற்கிறது. கொலு, பிரஸ்தாவனை, கூச்சம், பேய்க்காரம், அர்ப்பாயம், வியாயோகம், பிரகசனம் ஆகிய தலைப்புக்களே இந்த முறுவல்களை உள்ளடக்கமாகக் கொண்ட குறியீடு

www.padippakam.com



களே. முறுவல் வெவ்வேறு தொனிப் பொருளைக் கொண்ட அகச் சலனங்களாகி ஒவ்வொரு கதாபாத்திரத்திலும், ஒவ்வொரு கட்டத்திலும் வெளிப்பட்டு வரிசைக் கிரமமாகி 'நான்' என்னும் கதாபாத்திரமாக விளங்கும் எஸ்.பொவின் பெருமித முறுவலை நோக்கிச் செல்வதே நாடகத்தின் வளர்ச்சியாகும்.

நாடகத்தின் ஒட்டுமொத்தமான தொனிப் பொருளே கேலிப் புன்னகையுடன் கூடிய பழித்தறிவுறுத்துதலாகும். இந்தத் தொனிப் பொருளைக் கொண்ட காரணத்தினால் பல கட்டங்களில் கீழ்க்கண்ட பாரதியின் சொற்றொடர் வரிகள் என்னையுமறியாமல் என்னுள் எழுந்து இணைத்துப் பார்க்க வைத்தது.

கூட்டத்தில் கூடிநின்றுக்கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்தில் கொள்ளாத அவலம்
சொந்த அரசுப் புவிச்சுகங்களும் மாண்பும்அறியா
அந்தகர் நிலைத் தன்மை
பழமை இருந்த நிலை யறியா
பாமரர் பாங்கு
தேவியர் மானம், தெய்வத்தின் பக்தியெலாம்
நம்புதல் அறியாது நாவில் மட்டும்
சொல்லாடி நிற்றல்,
செப்பித் திரிவதன்றிச்
செய்வதறியாத பரிதாபம்

ஆகிய கருத்துக்கள் அதே தொனியுடன் முறுவலுக்குள் ரீங்காரமிட்டு நிற்பதை உணர்கிறேன். அன்றைய நடிப்புச் சுதேசிகளுக்கும் இன்றைய நடிப்புத் தர்மவாதிகளுக்கும் அதிகம் வித்தியாசம் இல்லை போலும்.

பாரதியின் தாக்கம் முறுவலில் பலமாகவே காணப்படுகிறது. பாரதியின் கவிதை வரிகள் எடுத்தாளப்பட்டதுமன்றி, பாரதியின் சிறுநாடகப் பாங்கு, வசன கவிதை

படிப்பகம்

www.padippakam.com



யிலுள்ள ஓசைகளின் சந்தலயம், மழைப்பாட்டின் ஒலி நயம் எல்லாம் இதில் பார்க்கலாம். மரபைத்தேடி நிற்கும் பிரக்ஞையில் அடுத்துத் தொட்டு நிற்பது பாரதியின் மரபு. அதைத் தாண்டிச் செல்லுதல் கடினம் தான். ஆனால் இவை மேலெழுந்தவாரியான நகல்க ளாக இல்லாது தன்வயமாக்கப்பட்ட எஸ்.பொவின் சுயவெளிப்பாடுகளாகத் திகழ்கின்றன.

மரபைத்தேடிச் செல்லும்போது பாரதி மட்டுமல்ல நமது கூத்துமரபுகளான பாடல்கள், நடனம், கும்மி, தருக்கங்கள், காட்சி நிகழ்வுகள் பற்றிய விமர்சனங்கள், வரப்போகும் காட்சி பற்றிய சூசகங்கள், மோடித் தாளங்கள் எல்லாமே இந்நாடகத்தைத் தாக்கம் செய்து நிற்பவைகள். நாடக நிகழ்த்துதல் நெறி பற்றிய சூசனைகளான உறைந்து நிற்றல், உயிர் பெற்றுத் துலங்குதல், மழையை நடனமாக்கிக் காட்டுதல் ஆகிய வையும்கூட மரபின் மணங்கொண்டவை. எனினும் நவீன மேடைக்கூறுகளான காட்சியமைப்பு, ஒளி யமைப்பு ஆகியவற்றின் கோல மொழிகளும் முறுவலில் மிளிர்ந்து நிற்கின்றன. ஆனால் இன்று நடைமுறையில் அமைந்துள்ள முகப்பு அரங்க மேடையின் பின்புலத்தி லேயே எஸ்.பொ. தன் நாடகத்தைப் படைத்தளித்துள் ளார். முகப்பு அரங்க மேடைக்குள்ள எல்லையும், தோற்ற மயக்கப் படைப்புமுறையும் எஸ்.பொவுக்குக் கட்டுப்பாடுகளாகவே அமைகின்றன. பாத்திரங்களின் தோற்ற மறைவு, காட்சி முடிவுகளைக் காட்டி நிற்கும் எழினி வீழ்தல்முறை, காட்சி அமைப்பு வசதி செய்து கொடுக்கும் முன்தளக் காட்சிகள், பாத்திரங்களுக்கு அழுத்தம் அளிக்கும் ஒளியமைப்புக் குறிப்புகள் ஆகியவையாவும் முகப்பு அரங்க நியதிகளுக்குள் சிக்கி நிற்பவை. இயக்குநர் என்னும் கலைஞனின் நெறியாளு கைத் திறனில் சூசகங்களாக கையாளப்படும்போது உந்துதல்களாக மட்டும் இவை ஒடுங்கி இச்சிக்கல் விடு

படிப்பகம்

www.padippakam.com



பட்டு முகப்பு அரங்கமேடை தவிர்த்த பிற பாங்கான படைப்புமுறைச் சாத்தியங்களுக்கும் அவை இடமளிக்கக்கூடியவைகளே.

கதைக்கூற்றும், கருத்துச் சுட்டுதலும் நிகழ்வுகளின் உலகத்தைச் சிருஷ்டிப்பதைவிட, சொற்பிரபஞ்சத்துள் சங்கமித்து நிற்பவை. நாடகமோ சொற்களுள் ஒடுங்கும் போது இலக்கியமாகவும், மேடையில் தூலமாக்கப்படும் போது அரங்க நிகழ்வுகளாகவும் பரிணமிப்பது. இலக்கியம் வாசகனையும் அரங்க நிகழ்வுகள் பார்வையாளனையும் சென்றடைபவை. தனக்கு விருப்பமான நேரத்தில் தனிமை நிலையில் படித்துச் சுவைக்கும் வாசகனை எத்தனை அளவிற்கு அவனது உள்ளத்தளவில் பார்வையாளனாக மாற்றுகிறது என்பதிலேயே நாடக இலக்கியத்தின் உரமும் வலுவும் அமைந்துள்ளன. இலக்கியம், நிகழ்த்துதல் என்ற இருநிலைகளிலும் 'முறுவல்' நிலைத்து நிற்க வேண்டும் என்ற எஸ்.பொவின் கலாபிரக்ஞையை அவருடன் நடத்திய உரையாடலில் மட்டுமின்றி நாடகத்திலும் உணரமுடிகிறது. அவரது அந்தரங்க நம்பிக்கையும் ஆத்மார்த்த முயற்சியையும் 'முறுவல்' ஆழமாக உட்கொண்டுள்ளது. புலம்பெயர்ந்த தமிழர்களை அடிமனதுக்குள் எங்கே உறைந்துகிடக்கும் சுயமண்ணின் மனத்தை நினைவு மண்டலத்துக் கொண்டுவந்து மூச்சுச் சுவாசத்தோடு மரபுமுகர்தலை உயிர்த்துடிப்பாக்கும் நம்பிக்கையும், முயற்சியும் இணைந்த ஒரு தேடல் இது.

சுயமரபைத் தேடுதல் என்பது ஒரு பிற்போக்குப் பார்வையல்ல. மாறாக எஸ்.பொவின் வார்த்தையிலேயே கூறினால் அது ஒரு நற்போக்கு. சுயமரபின் யதார்த்தத்தைத் தேடி உணர்தல் என்னும் தாகத் துடிப்பை புலம்பெயர்ந்த தமிழர் என்ற காரணத்தால் எஸ்.பொ

வினால் நன்கு உணரமுடிகிறது. மத்தகஜம் தன் கருமை வனப்பையும், செவிகளின் ஆலவட்ட வீச்சையும், உருண்டு திரண்ட உடல் பரப்பையும், நீண்ட துதிக்கையின் சுற்றி வளைக்கும் பிடிப்புத் திறனையும் உணர்தல் என்பது தன் சுயபலத்தை அறிதல் என்பதாகும். தன் பலம் அறியாது வாழ்கின்ற யானை போல வாழ்தல் என்ற நிலையையும் தாண்டி தனக்கு இசையாத சாயத்தை மேல்முலாம் பூசிக்கொண்ட நரியின் நிலைக்கு வர நேர்ந்தால் ஊளையிட முடியுமே தவிரப் பிளிற முடியாது. அத்தகைய ஊளையில் பெருமிதமும் கொள்ள முடியாது. சுயபலம் உணர்தல் என்ற உணர்வுப் போக்கே சுயமரபுத் தேடலாகும்.

அரங்கக் கலையைப் பொறுத்தவரை கீழைநாட்டுப் பாரம்பரிய வடிவங்களில் அரங்கக் கலையின் யதார்த்தங்கள் பாதுகாக்கப்பட்டு தலைமுறை தலைமுறையாய் வாழையடி வாழையாக மாற்றப்பட்டு இன்னும் நிலவி நிற்கின்றன. இந்த உண்மையின் காரணத்தால் சீனத்து நடிகனாலும், பாலி நடனத்தாலும், இந்தியக் கதகளியாலும் மேலை அரங்கில் பாதிப்பை ஏற்படுத்த முடிந்தன. இந்தப் பாதிப்பின் விளைவே மேலை நாட்டு நவீன நாடகக் கோட்பாடுகளின் தோற்றங்களும் உருவாக்கங்களும்.

சுயகலாசாரத் தேடலின் உள்ளுணர்வு உந்துதலின் அடிப்படையில் நவீன நாடக ஆக்கம் என்ற முயற்சிப் படியில் ஒன்று எஸ்.பொவின் 'முறுவல்.' முயற்சியின் ஆரம்பமும், படியின் அடித்தளமும் நன்கு அமைந்துள்ளன. ஆன்மநிறைவோடு கூடின நம்பிக்கை'முறுவலை' எஸ்.பொ தாராளமாக உதிர்த்துக் கொள்ளலாம்.

**தஞ்சாவூர்** **31-10-1994**

www.padippakam.com



# நன்றி

- இந்த நாடகத்தை இயற்ற
  ஆரம்ப ஊக்கம் தந்த
  திருமதி எஸ். யோகராஜா

- இதன் சுய மரபுத் தேடலிலே உதவிய
  கவிஞர் அம்பி
  கவிஞர் அ. சந்திரகாசன்

- நூலுருவிலே பிரசுரிக்க ஊக்கம் தந்த
  வி.பி. திருவிலங்கம் (பிரபா)

- இதன் முகப்புப் படத்தினை
  வடிவமைத்த
  டென்மார்க் ரி.சௌந்தர்

- இதன் ஆவணம் எழுதிய
  இளம்பிறை எம்.ஏ. ரஹ்மான்

- முன்னுரை வழங்கிய
  பேராசிரியர் செ.இராமானுஜம்

ஆகியோர்
என்றும்
எஸ்.பொ.வின்
நன்றிக்குரியர்

படிப்பகம்

www.padippakam.com



சுஹேர் ஹமீட்

**தமிழ் நாடக மேடையின் உயிர்ப்புக்கு
உழைத்த உத்தம சேவைகளின் நினைவாக**

படிப்பகம்

www.padippakam.com





தமிழ்
முகப்பு அரங்க மேடையைச்
சினிமா ஆதிக்கத்திலிருந்து மீட்டு,
அதற்கு ஒரு தனித்துவ
மரியாதையைச் சம்பாதித்துத்
தருவதற்கு
முன்னோடியாக உழைத்தவர்
சுஹேர் ஹமீட்.
அவருடைய தன்னலமற்ற
உழைப்பின் செழுமையும்
சேர்ந்ததுதான்
ஈழத்தின்
இன்றைய
தமிழ் நாடக மேடை.

படிப்பகம்

www.padippakam.com

# 1



## வணக்கம்

வணங்குவமே நந்தி தேவரை—கலை
வல்லவர் தலை நாயக தேவரை வணங்குவமே
இணங்கி எம் அகத்தினிலே இன்கலைகள்
ஓங்கிநிற்க
இதயம் கனிந்தருளும் எமதுகுரு நாதன்தனை
வணங்குவமே
இந்திய மரபிலே முந்திய காலமெலாம்
எந்தமிழ் நாடகங்கள் இசையில் இணைந்துயர
முந்தி எழுந்தருளி மத்தளமும் கொட்டி நின்ற
நந்தி தேவனருள் நாடி அணைந்து நின்றே
—வணங்குவமே!



படிப்பகம்

1

# நடாத்துநர் கொலு

மேடையின் முகப்பாக அமைந்த பொருமுக எழினி விலக, ஒளிபரம்பும் பகுதிகளில் மேடை வெறுமையாத் தோன்றுகின்றது. ஒளி, மேடைப் பரப்பின் வெவ்வேறு பகுதிகளைக் காட்டி அவிகிறது. இடப்புற முன்மேடையில் ஒளிக் கற்றை விழ ஒரு தூணுடன் சாய்ந்து **நடன்** தூங்குவது தெரிகின்றது. நடன் நவீன உடையில் காணப்படுகிறான். அவனுடைய உடையில் பச்சை நிறம் அதிகம் காணப்படும். அவன் தனித்துவத்தை நாட்டும் உத்தியே நிறம்.

நடனின் விழிகள் மூடியிருக்கின்றன. உடலிலே சலனமில்லை. இடத் தோளிலே மொய்த்துள்ள கொசு ஒன்று வலக்கையால் அடிக்கப்படுகின்றது. தொடர்ந்து சிறிது நேரம் எவ்வித அசைவுமில்லை. பின்பு வலக்கை மணிக்கட்டிலுள்ள கொசு ஒன்று இடக்கையால் அடிக்கப்படுகின்றது. நடனுக்கு விழிப்பு நிலை ஏற்படுகின்றது. அவன் தூணிலிருந்து விலகி காற்று வெளியிலே சஞ்சரிக்கும் கொசுக்களை அடித்துக் கொல்லும் எத்தனத்தில் ஈடுபடுகின்றான். நடனுடன் அசைந்த ஒளிக் கற்றை

www.padippakam.com



மீண்டும் இடப்புற முன்மேடையிலுள்ள தூணுக்கு நகருகின்றது.

நடன் முன்னர் காணப்பட்ட அதே கோலத்தில் இப்பொழுது **விடன்** காணப்படுகின்றான். நடனின் சடங்கு முறையைப் பின் பற்றிக் காற்று வெளியிலே சஞ்சரிக்கும் கொசுக்களை அடித்துக் கொல்லும் எத்தனத்தில் இவனும் ஈடுபடுகின்றான். விடனின் உடையில் நீலநிறம் அதிகம் காணப்படும்.

நடனும், விடனும் தோன்றிய அதே தூணில் சடுதியாக **நடி** முன்னவர்களுடைய இதே கோலத்தில் காணுநருக்குத் தெரிகின்றாள். அவள் நடன், விடன் ஆகியோருடைய உடைக் கோலத்திலும் காணப்படுகின்றாள். உடையில் சிவப்பு நிறம் அதிகம் காணப்படும். நடியும் முன்னவர்களுடைய சடங்கு முறைகளைப் பின்பற்றி காற்று வெளியிலே சஞ்சரிக்கும் கொசுக்களை அடித்துக் கொல்லும் எத்தனத்தில் ஈடுபடுகின்றான்.

| | | | |
|---|---|---|---|
| **நடன்** | — | பச்சை நிறம் | (தூக்கல்) |
| **விடன்** | — | நீல நிறம் | (தூக்கல்) |
| **நடி** | — | சிவப்புநிறம் | (தூக்கல்) |

நிகழ்வின்போது ஒரே உருவத்திலிருந்து மூவரும் வெளிப்பட்டனர் போன்ற மயக்கம் காணுநருக்கு ஏற்படுதல் வேண்டும்.

நடனும், விடனும் புறவட்டமாகக் கொசுக்களை அடிக்க, நடி உள்வட்டத்தில் கும்மியடிக்கும் பாங்கத்திலே, சடுதியாக ஸ்தம்பிதம் அடைகின்றாள். அப்பொழுது,

**கும்மியடி பெண்ணே கும்மியடி**
**கூடி அணைந்துநீ கும்மியடி**

www.padippakam.com



என்று பாடல் இசைக்கப்படுகின்றது. ஸ்தம்பிதம் அடைந்த நடி கும்மி ஆட்டத்தில் ஈடுபட, பாடல் கேட்கின்றது.

**பாடல்:**

கும்மியடி பெண்ணே கும்மியடி
கூடி அணைந்துநீ கும்மியடி
கும்மியடி பெண்ணே கும்மியடி
கொங்கை குலுங்கநீ கும்மியடி

கண்ணில் படாமலே ஆயிரமாய்
காதிலே மாத்திரம் பாடிநிற்கும்
வண்ணக் கொசுக்கள் தாமடிந்தாள்
வண்டமிழ்த் தாயென்று கும்மியடி

கும்மியடி பெண்ணே கும்மியடி...

[இந்தக் கும்மியாட்டத்திலே, இடையில் நடனும் விடனும் சேர்ந்து கொள்கின்றார்கள்.]

**நடன்:** கொசுக்கள்

**விடன்&நடி:** அடிப்போம்!

**நடன்:** கொசுக்கள்...

**விடன்&நடி:** ஒழிப்போம்!

[கோஷம் இட்டுக் கொண்டிருக்கும் போதே, கும்மி ஆட்டம் ராணுவ அணிவகுப்பாக மாறுகின்றது. ராணுவ அணிவகுப்பில் இணைந்த மூவரும் முன் மேடைக்கு நகருகின்றார்கள்.]

**நடன்:** கொசுக்கள்

**விடன்&நடி:** ஒழிக!

[இந்தக் கோஷத்துடன் நடி அணியிலிருந்து விலகி, இடப் பக்கமாக நகர்ந்து நிற்கின்றாள்.]

படிப்பகம்

www.padippakam.com



நடன் : கொசுக்கள்...

விடன் : ஒழிக!

[இந்தக் கோஷத்துடன் விடனும் விலகி வலப்பக்க மாக நகர்ந்து நிற்கின்றான். நடன் முன்னுக்கு முன்னேறி,]

நடன் : கொசுக்கள்

[பதில் வராததை உணர்ந்த நடன், விடனையும், நடியையும் மாறி மாறிப் பார்த்த பின்னர்]

நடன் : (கத்துதல்) ஒழிக!

நடி: கொசுக்கள் ஏன் ஒழிய வேண்டும்?

விடன் : நானும் கேட்கிறேன்: ஏன் கொசுக்கள் சாக வேண்டும்?

நடன் : கொசுக்கள் ஏன் சாகக்கூடாது?

விடன் : ஏன் சாகவேண்டும்?

நடன் : கொசுக்கள் ஏன் சாகக்கூடாது?

விடன் : கொசுக்கள் ஏன் சாகவேண்டும்?

நடி : இவை வினாக்கள்.

விடன் : ஆமாம் வினாக்கள். வினாக்களுக்கு விடை களும் உள.

நடி : தோலிருக்கச் சுளையை விழுங்குவதுபோல 'கூலி வேலை' என்ற பெயராலே, மனித ரத்தத்தை உறிஞ்சும் மனிதர்கள் வாழும் பொழுது, ஏனிந்த அற்ப கொசுக்கள் சாகவேண்டும்?

விடன் : அச்சா! ஒரு வினாவுக்கு இன்னொரு வினாவே விடை!

நடன் : அவர்கள் பண முதலைகள். முதலாளிகள் கொசுக்களைப் போலவே! முதலாளிகளும் ஒழிக!

www.padippakam.com



விடன் : ஒழிக! ஒரு சங்கடம்...கொசுக்களை (கையை அடித்து) இப்படி நசுக்கலாம். ஆனால் முதலாளி களை?...

நடி : விவகாரம் கொசுக்களே! கொசுக்கிடையில் முதலாளி-தொழிலாளி என்ற வர்க்க பேதம் கிடையாது.

நடன் : கொசுக்களும் ஒழிக! முதலாளிகளும் ஒழிக!

விடன் : வெள்ளம்போலத் தமிழர் கூட்டம், வீரர் எங்கள் கூட்டம்! அவர்களுடைய இன்றைய சாதனை...

நடி : சாதனைக்கான கருவி போராட்டம். போராட் டத்திலே வெற்றியும் உண்டு.

விடன் : வெற்றி வாழ்க! தோல்வி ஒழிக!

நடி : கோஷம் வளர்ச்சியை...அதுவும் தப்பு! ஒரு வகை வெறியைத் தூண்ட உதவலாம். சாதனை படைப்பு. இதுதான் என் கட்சி.

விடன் : போச்சடா போச்சு. எங்களுக்குள் கட்சிகள் தோன்றிடுச்சு. வசதிக்காக நான் நீலக் கட்சி... நீ சிவப்புக் கட்சி...இவரு பச்சைக் கட்சி... கட்சிகள் ஒன்றுக் கொன்று சண்டைப் பிடிச்சுக் கொள்ளுறது தான் சுவாரஸ்யம்.

நடன் : உமது கட்சியை நிறுவும்.

விடன் : பேசிக் கொள்ளுகிற கட்சிகள் வீழ்க!
அடிச்சுக் கொல்லுற கட்சிகள் வாழ்க!

நடன் : (நடியைப் பார்த்து) உமது கட்சி?

நடி : அதைக் கேளும். உமக்கு ஒரு குழந்தை இருக் கிறது என்று வைச்சுக் கொள்ளும்...

நடன் : வைச்சுக் கொள்ளத் தேவையில்லை. நான் ஒரு சம்சாரி. எனக்கு ஒரு குழந்தை இருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



**நடி :** அந்தக் குழந்தையின் படைப்புக்கு நீர் பேர் பாதிக் காரணன் என்ற உரிமையை எடுத்துக் கொண்டு...

**நடன் :** அது எனக்குத்தான் பிறந்தது என்று என் மனைவி என் தலையிலேயே சத்தியம் வைச் சுட்டா.

**நடி :** நல்லது. அந்தக் குழந்தையை உம்மாலே கொல்ல முடியாது. அப்படிச் செய்தால் உன்னை நீதிமன்றத்திலே நிறுத்துவதற்கும், உமது செய லுக்குத் தண்டனை வழங்குவதற்கும் சட்டம் முந்தி நிற்கும்.

**நடன் :** குழந்தைக்கு மனித உயிர். மனித உயிர் களுக்கும், உரிமைகளுக்கும், உடமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையிலேதான் மனிதச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன.

**நடி :** சில விலங்குகள் அழியக்கூடாது என்று—இந்த விலங்குகள் தங்களுக்குப் பாதுகாப்புத் தேவை யென்று எந்தச் சந்தர்ப்பத்திலும் கெஞ்சிக்கேட் காத போது கூட—மனிதன் வனவிலங்குப் பாது காப்புச் சட்டங்களை இயற்றி வைத்திருக் கின்றான்.

**நடன் :** வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டங்கள், மனித னுடைய இரக்க சுபாவத்திற்கான அத்தாட்சிகள்.

**விடன் :** சபாஷ்.

**நடி :** இங்கு ஏன் சபாஷ்? இது ஒரு பெரிய கண்டு பிடிப்பா?

**விடன் :** ஆமா... அது தானே?

**நடி :** மனிதர்கள் இன்று புழுத்துப் பெருத்துக் கொண் டிருப்பதே மிருக குலத்தின் தாராளத்தினாலே தான். அட்டை உறிஞ்சும் இரத்தம் கணிய மேனும், at least ஒரு மூட்டுப்பூச்சி உறிஞ்சும்

www.padippakam.com



கணியமேனும், கொசு நம் இரத்தத்தை உறிஞ்சு வதில்லை. புத்த பகவானுடைய அஹிம்சா போதனைகள் நின்று நிலவும் திவ்விய ஸ்ரீலங்கா நாடு, முடமான இளமறியைத் தமது தோளிலே சுமந்து...

விடன் : அந்த soft ஆன தோளிலே சுமந்து...

நடி : சகல பிராணிகளிடத்தும் அன்பும் காருண்யமும் காட்டுதல் 'மனிதம்' என்பதைப் போதித்த மகா உத்தமர் அவர்.

விடன் : கேவலம் மொழிப் பிரச்சினைக்காக மனுஷனை மனுஷன் அடிச்சுக் கொல்வதை இந்தப் புண்ணிய பூமியிலே அனுமதித்தாலும் அனுமதிக்கலாமே தவிர, கொசுக்களுக்கு வாழும் சுதந்திரத்தை அளித்து, அஹிம்சையைக் கடைபிடிப்பதுதான் நமது மண்ணின் நாகரிகத்துக்கு உகந்தது.

நடி : மொழிப் பிரச்சினை மகா கேவலம். கேவலங்களுக் காக மனுஷன் அடிச்சுக் கொண்டு சாவது நியாயம். கொசுக்கள் அஹிம்ஸா தர்மத்திற்கு முன்னால் மகத்தானவை. எனவே,

விடன் : கொசுக்கள் வாழ்க!

நடன் : மொழிப் பிரச்சினை கேவலமா?

நடி : ஆமாம் மொழிகளைப் படைத்தவன் மனிதன். அவை தொற்றிய பிரச்சினைகளைத் தோற்று வித்தவனும் மனிதனே. மனிதனுடைய எத் தனையோ படைப்புகள் கேவலமானவை.

நடன்: நமது ஸ்ரீலங்கன்ஸுக்கு ரயிலோ—பிளேனோ கட்டத் தெரியாது.

விடன்: எனவே, அறிஞர் திலகங்கள்.

www.padippakam.com



நடன்: ரொக்கட்டுக்களையும், செய்மதிகளையும் வேறு என்னென்னவோ விஞ்ஞான 'பளாய்'களையும் செய்யத் தெரியாது.

நடி: ஆயிரம் சிக்கல்களை வைத்து இடியப்பம் அவிக்க எங்களுக்குத் தெரியும்.

விடன்: எனவே, அறிஞர் திலகங்கள்...

நடி: நோபல் பரிசு பெறத்தக்க இலக்கியகாரன் நம் மத்தியில் இல்லை.

விடன்: அறிஞர் திலகங்கள் வாழ்க! இந்த அறிஞர் திலகங்களையெல்லாம் கப்பல் கப்பலாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வைக்கிறோம்.

நடன்: விஞ்ஞானப் புதுமைகளோ, கலை-இலக்கிய ஆக்கங்களோ ஆண்டவன் படைப்பல்ல.

விடன்: ஆண்டவன்கூட மனுஷன் படைச்சதுதானே?

நடன்: இந்தக் கொசுப் பிரச்னையைப் பேசிப் பேசியே சலிச்சுப் போச்சு.

விடன்: ஆமாம். கொசுக்கள் நம்மைக் கடிக்குமே ஒழிய, நம்மைப் பற்றிப் பேசுவதில்லை. நம்ம பேச்சுச் சலிச்சுப் போச்சு.

நடன்: சலிப்பான பேச்சும் ஆபாசமே...

நடி: ஆபாசம் ரசனையாகவும் இருக்கலாம்.

விடன்: Example...

நடி: கோடம்பாக்கத்து தமிழ் சினிமா! அறிவு பற்றிய விசாரணை சிலருக்குச் சலிப்பைத் தரலாம்.

விடன்: நான் சொல்வதைக் கேளுங்கள்.

நடி: கேட்போம். ஜனநாயகம், குடிகாரனின் பேச்சைப் போல மிகமிகச் சுகமானது.

விடன்: கொசுக்கடி இப்பொழுது இல்லை. எனவே, அதைப் பற்றிச் சளப்பிறதில வேலையில்லை... பசி என் வயிற்றைக் கிள்ளுகிறது.

www.padippakam.com



**நடி:** பட்டினி கிடக்கும் உரிமை ஜனநாயகம் வழங்கியுள்ள அடிப்படைச் சுதந்திரமல்லவா?

**விடன்:** பசி சுதந்திரமா? அது ஒரு பேய். அது ஒழிக!

**நடன்:** சபாஷ்! தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம். எல்லோருமே புறப்படுங்கள். இவனுக்குப் பசிக்கிறது.

**விடன்:** பக்கத்து ஹோட்டலிலே இரண்டு வடை வாங்கித் தந்தாலும் என் பசி அடங்கிடும்.

**நடி:** அது பிச்சைக்கார மனப்பான்மையை வளர்க்கும்.

**நடன்:** தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம். அமரகவி பாரதியே சொல்லிட்டான். இவனுடைய பசிக்காக உலகத்தையே அழிப்பதுதான் உத்தமம். உலகத்தை அழித்த பிறகுதான் மறுவேலை.

**நடி:** உலகத்தை அழித்தபிறகு நாம் எங்கே வாழ்வதாம்? நிதானம் வேணும்.

**நடன்:** நிதானமா இருந்தா பசி போயிடுமா?

**நடி:** ஒழுங்காச் சாப்பிட்டா பசி போயிடுமா?

**விடன்:** நாளேக்கும் பசிக்கும். மறுநாளைக்கும் பசிக்கும். தினமும் பசிக்கும்.

**நடி:** உலகம் அழியாது இருக்கணும், செழிக்கணும். இது நியாயம்.

**விடன்:** மகா நியாயம்.

**நடன்:** எல்லா உயிர்களும் இன்புற்று இருக்கணும்.

**விடன்:** அதுவும் நியாயம்.

**நடி:** ஏற்றத் தாழ்வு இல்லாத சமத்துவ நிலை உருவாக்கப்பட வேண்டும்.

**விடன்:** இதுவும் நியாயம்.

**நடி:** இது நியாயமல்ல; தர்மம்.

www.padippakam.com



**விடன்:** சமதர்மம்.

**நடன்:** சமத்துவ சமவுடமைச் சமதர்மம். இப்பொழுது தான் நாங்கள் முற்போக்காக யோசிக்கின்றோம்.

**விடன்:** படு முற்போக்கு!

**நடன்:** முற்போக்கு

**விடன்:** வாழ்க!

**நடி:** முற்போக்கு என்பது ஒரு கோஷம். கோஷம் எழுப்பினால், எதிர்க் கோஷம் எழும்பும். கோஷங்களில் மட்டும் தர்ம சாதனை நிலை நாட்டப்படுவதில்லை. கர்மயோகமும் உண்டு. ஞானயோகமும் உண்டு. கர்மயோகம் சாதனை. ஞானயோகம் சமத்துவங்களை விளங்கிக் கொள்ளவும், மார்க்கங்களை வகுத்துக் கொள்ளவும் உதவும். பின்னர், ஒரு முகப்பட்ட போராட்டம். இது ஒருவகை பக்தி யோகமே.

**விடன்:** புரட்சி ஓங்குக!

**நடி:** இது கோஷம். காரிய சாதனையில் நிற்றல்...

**விடன்:** யோகம்.

**நடன்:** சரி, இப்பொழுது சமத்துவ சமவுடமைத் தர்மத்தை நிலை நாட்டுவதற்கான மார்க்கத்தைப் பற்றி யோசிப்போம்.

**விடன்:** ஆற அமரச் சிந்திப்போம்.

[நடன் ஆகாயத்தை அண்ணார்ந்து பார்த்து, தாடையிலே கைவைத்துச் சிந்திக்கும் பாங்கிலே ஸ்தம்பிதமாகின்றான். விடன் வலக்கை முஷ்டியை உயர்த்திய நிலையிலே ஸ்தம்பிதமாகின்றான். நடி தூணிலே சாய்ந்து சின்னஞ் சிறு புத்தகம்— சிவப்பு அட்டை போர்த்தியது— ஒன்றினையே புரட்டியவாறு ஸ்தம்பிதமாகின்றாள். சற்று நேரத்தில் **சூத்திரதாரன்** மேடைக்கு வருகிறான்.]

www.padippakam.com



**பின்னணி :**

**நாடகந் தன்னை நடித்துக் காட்டுதற் கேதுவாய்**
**நிற்போ ரியம்பிய நடத்துநர்**
**அவர்தாஞ் சூத்திர தாரனு மவனைச்**
**சார்ந்தமாந் தருமெனச் சாற்றிடலாமே.**

**சூத்திரதாரன் :**

சபையோரை வணங்க, நடனும் விடனும் உயிர்ப்புப் பெற்று வருகிறார்கள்.

**நடன்:** இந்த மேடைக்கு வேஷம் போட்டவன் ஒருவன் வந்திருக்கிறான்.

**விடன்:** ஆமாம் வேஷக்காரன் ஒருத்தன் வந்திருக்கான்.

**நடன்:** வேஷக்காரர்கள்...

**விடன்:** மோசக்காரர்கள்!

**நடன்:** மோசக்காரர்கள்...

**விடன்:** ஒழிக!

**சூத்திரதாரன்:** ஒழிக, ஒழிக, என்று கோஷம் போட்டுப் பழகிப் போன நாக்கு...

**நடன்:** ஒழிக, ஒழிக, என்று சொல்லறவங்க புரட்சிக் காரர்கள்.

**சூத்திரதாரன்:** வாழ்க,வாழ்க, என்று கோஷம் போடற வங்க?

**விடன்:** அவர்கள் கூஜாக்கள்! ஜால்ராக்கள்! அவர்கள் ஒழிக!

**சூத்திரதாரன்:** போராளிகள் சீருடை போடுறாங்க. அவர்கள் மோஷக்காரர்களா?

**விடன்:** அவர்கள் நல்லவர்கள்.

**நடன்:** அவர்களிலும் மோசக்காரர்கள் இருக்கிறார்கள்.

**சூத்திரதாரன்:** அஹிம்ஸா தர்மத்தைப் போதிப்பதாக வலம் வரும் பிக்குகள் சீவர ஆடை அணிகிறார்கள். பாவமன்னிப்பு வழங்கும் கத்தோலிக்க குருவானவர்கள்...

www.padippakam.com



**நடன்:** அவர்களும் மோசக்காரர்களே!

**விடன்:** அவர்களிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள்.

**நடன்:** அத்தி பூத்தாப்போல ஒண்ணு இரண்டு.

**சூத்திரதாரன்:** வேஷக்காரர்கள் மோசக்காரர்களாகத் தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

**நடன்:** மோசக்காரர்கள் வேஷக்காரர்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமே இல்லை.

**சூத்திரதாரன்:** நாம் எல்லோரும் நம்மை அறியாமலே ஒரு வேஷத்தைப் புனைந்து நடித்துக் கொண்டே இருக்கின்றோம். அதை வாழ்க்கை என்றோ Life என்றோ எந்தச் சொல்லிலே அழைத்தாலும் வேஷம் என்று சொல்லறது என்னவோ வேஷம் தான். இன்னொரு வழியிலே சொல்லப்போனால், வேஷம் ஒரு குறியீட்டு உத்திதான். காந்திக் குல்லா, கறுப்புத் துண்டு, பச்சை குத்துதல் எல்லாமே அப்படித்தான். நமது நாடக மரபினைப் பார்த்தாலும்...

**நடன்:** ஐயோ! இவன் மரபாம். இவன் மரபினைப் பற்றிப் பேசுகிறான். இவன் பிற்போக்குவாதி.

**விடன்:** ஆமாம்! படு பிற்போக்குவாதி!

**சூத்திரதாரன்:** ஓகோ! நீங்கள் முற்போக்குவாதிகள்?

**நடன்:** இல்லை பிற்போக்குவாதிகளுக்கு எதிரிகள்.

**விடன்:** எனவே, முற்போக்குவாதிகளும்!

**நடன்:** முற்போக்கு நாடகத்திற்கு வேஷங்களும் பாத்திரங்களும் தேவையில்லை. கருத்துத்தான் முக்கியம்.

**விடன்:** அதுவும் முற்போக்கான கருத்துக்கள்!

**சூத்திரதாரன்:** சுருதி-பாவம் - அபிநயம் ஆகியன இல்லையா?

www.padippakam.com



[நடி உயிர்ப்புப் பெற்று, இந்த மூவரும் நிற்கும் இடத்திற்கு வந்து கொண்டே,]

**நடி:** சுருதி, பாவம், அபிநயம்...உண்டு.

**நடன்:** அவை இருக்கலாம். ஆனால் கருத்துத்தான் முக்கியம்.

**சூத்திரதாரன்:** கருத்தும், உருவ அமைதியும் நேர்த்தியும் பொருந்தும் பொழுது கலாசிருஷ்டிக்கு ஒரு முழுத்துவம் வந்து பொருந்துமல்லவா?

**நடன்:** இது பிற்போக்கு நியாயம். மரபு என்று எவனெல்லாம் சொல்றானோ...

**விடன்:** அவனெல்லாம் பிற்போக்குவாதிகள்! பிற்போக்குவாதிகள் ஒழிக!

**சூத்திரதாரன்:** மரபிலே ஏன் உங்களுக்கு இவ்வளவு ஆத்திரம்?

**விடன்:** அதைப் பற்றி எங்களுக்குஒன்றுமே தெரியாது. அவ்வளவு தான்.

**நடி:** நேற்றைய மரபினை நீங்கள் முற்றாக நிராகரிக்கிறீர்கள். நேற்றை மரபினை, நீங்கள் கனம் பண்ணாவிட்டால், நீங்கள் உருவாக்க முனையும் புதிய மரபும் நாளைய தலைமுறையினரால் முற்றாக நிராகரிக்கப்படும். இதுவும் தர்க்கரீதியானதுதானே!

**விடன்:** இது விஷயம் கூடிப்போச்சு! எங்களுக்கு விளங்கிற பாஷை தேவை.

**நடன்:** பாஷை என்ன, பாஷை! இவன் ஒரு எட்டப்பன்.

**விடன்:** இவள் காக்கை வன்னியன்... இல்லை... காக்கை வன்னிச்சி!

**நடி:** காக்கை வன்னியன்-எட்டப்பன் என்ற கோஷங்கள் முற்போக்கிற்குப் பொருந்தாது. ஒரு வேளை

www.padippakam.com



ட்றொஸ்கி—ஜிலாஸ் போன்ற பெயர்கள் பிழை யில்லை.

**விடன்:** பழக்க தோஷத்தினால் சொல்லி விட்டான்.

**நடி:** நீங்கள் சோறு சாப்பிடுவதும், ருஷ்யர்கள் ரொட்டி சாப்பிடுவதும் பழக்க தோஷந்தான். இன்னொரு வழியிலே சொன்னால் பழக்க தோஷம் மரபு ரீதி யானது.

**விடன்:** இந்தக் கூற்றிலும் உண்மை இருக்கிறது.

**நடன்:** இது நழுவிச் செல்லும் நடுப்போக்கு வாதம்.

**நடி:** கோஷங்களுக்கு அப்பால், உயிர்ப்புள்ள முன் னேற்றத்தை நாடும் நற்போக்கு வாதமாகவும் இருக்கலாம்.

**விடன்:** நற்போக்கு...

**நடி:** கோஷம் வேண்டாம். இந்தச் சூத்திரகாரன் வரு வதற்கு முன்னால் நாம் எதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தோம் என்பது நினைவிருக்கிறது அல்லவா?

**நடன்:** சமத்துவ சமவுடமைத் தர்மத்தினை நிலை நாட்டுவதற்கான ஒரு விசாரணையை மேற்கொண் டிருந்தோம்.

**விடன்:** நான் அதைப் பற்றி இப்பொழுதும் யோசித் துக் கொண்டிருந்தேன்.

**சூத்திரதாரன்:** இந்த விசாரணையை இந்து நாடக மரபினை ஒட்டியும் நடத்தலாம்.

**நடன்:** இந்து நாடகமும் மரபும்.

**விடன்:** அவற்றிற்கெனத் தனி இயல்புகளும் உண்டு.

**நடன்:** எங்களுக்குக் கருத்துத்தான் முக்கியம்.

**நடி:** நாங்கள், கருத்தையும் பார்க்கலாம். கருத்தைப் பற்றிய விசாரணையும் நடத்தலாம். அப்பொழுது தான் ஒரு தெளிவு பிறக்கும். அவசரம் வேண்டாம்.

படிப்பகம்

www.padippakam.com



**விடன்:** ஆமாம், நிதானம் வேண்டும்.

**நடி:** சுற்றும் சக்கரத்திரத்திலே ஓர் அசையாப்புள்ளி உண்டு The still point of a Turning wheel அந்த அசைவின்மையைச் சகித்துக் கொள்ளாவிட்டால் சக்கரச் சுழற்சியிலே இசைவும் பயனும் இருக்காது.

**சூத்திரதாரன்:** இப்படி ஓர் ஏற்பாடு செய்வோம்.

**நடன்:** எப்படி?

**சூத்திரதாரன்:** நீங்களும் நானும் நடத்துநர்.

**விடன்:** நடாத்துநர்? ஓகே...

**சூத்திரதாரன்:** நடாத்துநருடைய இயல்பு இதுதான்.

**நாடகந்தன்னை நடித்துக் காட்டுதற்**
**கேதுவாய் நிற்போரியம்பிய நடாத்துநர்.**

**நடன்:** ஆனால் நாங்கள் வேஷம் போடமாட்டோம்.

**சூத்திரதாரன்:** தேவையில்லை. இப்ப நீங்கள் போட்டிருக்கிற வேஷம் தாராளம். பச்சைச்சட்டை, நீலச் சட்டை, சிவப்புச்சட்டை! நம் நாட்டின் அரசியல் நிறங்களை அப்படியே உரிச்சு வைச்சாப்போல இல்லை? பச்சைச்சட்டை நடனாக இருக்கலாம். சிவப்புச் சட்டை நடியாக இருக்கலாம்.

**நடன்:** நான் நடன்.

**நடி:** நான் நடி.

**நடன்:** பெயர்கள் பழைய பாணியில் இருக்கு...

**சூத்திரதாரன்**

**நடியும் நடனும் நண்ணிய துணைவர்** என்பது விதி.

**விடன்:** இப்ப எனக்கு ஒரு பெயர் வேண்டும்.

**சூத்திரதாரன்**

**'காணும் போதெல்லாம் நகை விசாப் போனாம்**
**குதூகல புருடன் விதுடகனென்'** போம்.

www.padippakam.com



**விடன்:** இந்த நாட்டிலே நீல நிறத்துக்குத்தான் அதிகம் demand. நான் விதூஷகனாகவோ, கோமாளியாகவோ வரமாட்டன்.

**நடன்:** நீலத்திற்கும் கோமாளித்தனத்திற்கும் என்ன தொடர்பு இருக்கு...

**சூத்திரதாரன்:** அரசியல் வேண்டாம். இவன் நடன். நீ விடன்.

**விடன்:** என் பெயர் விடன். இதுக்கேன் விவாதம்? அப்படியே வைச்சுக் கொள்வோம்.

**சூத்திரதாரன்:** இப்ப நாடகத்தை நடத்துவோமா?

**நடன்:** ஆகா!

**விடன்:** பேஷாக...

**நடி:** நடத்துவோம்.

[எழினி] □

முு—3

படிப்பகம்

www.padippakam.com

# 3

## பிரஸ்தாவனை

[எழினி விலக, சூத்திரதாரன் நடு மேடையிலே காணுநருக்கு வணக்கம் தெரிவிக்கும் பாவனையிலே, உறை நிலையில் காணப்படுகின்றான். அசைவு நிலை பெற்று, மீண்டும் வணங்கி...]

**சூத்திரதாரன்:**

நாடகக் கலையின்
நற்சுவை பருகுதற்கு
ஆடக அரங்கிற்கு

ஆவலுடன் வந்தோர்க்கு
வந்தனம் தந்தோம் மிகு வந்தனம் தந்தோம்
வந்தனம் தந்தோம் மிகு வந்தனம் தந்தோம்

**காணிக்கை**

ஒப்பிலா அப்பா அப்பையா
உயிருக் கொளியாம் தமிழ் ஐயா
வைப்பாம் எம் நாடகம் முன்
வைப்பாம் அன்புக் காணிக்கை
முப்பால் தமிழின் முறை முறை எம்
முயற்சி பலிக்கப் பார் அப்பா
அப்பாற் பயனும் எமக்கில்லை
அருந்தமிழ் வாழப் போற்றுகின்றோம்

படிப்பகம்

www.padippakam.com



வேறு

நாடகம் எங்கள் வாழ்வினிலே
நடந்து முடிவது பாரினிலே
ஓடுங் கனிஇசை சுருதியிலே
உறவு வளர்வது விறல்தனிலே
கூடும் பண்பது கலையினிலே
கொள்ளும் நண்பது நிலையினிலே
தேடி உண்பது சுவைகளிலே
திரண்டு காண்பது அவையினிலே

வேறு

எண்ணித் துணிந்தோம்
எடுத்தோம் தொடுத்தோம்
திண்ணிய இந்து மரபில்
செவ்விய நாடக வகைகள்
சாதிகள் பத்து அம்மரபில்—நாடகச்
சாதிகள் பத்து அம்மரபில்

மேலும் கேளுங்கள், அநாதி மல முத்தரான ஏகனுடைய முறுவலினைத் தொற்றி ஓர் எண்ணச் சூழல் மனை கோலுகின்றது. அந்த எண்ணச் சூழல் மகா பாரதக் காலந்தொட்டு இன்றளவும்தர்மத்திற்கான விளக்கத்தை நாடி நடத்தப்படும் விசாரணையிலே கரிசனையை ஏற்படுத்துகின்றது. இந்த விசாரணையே நாடகத்திற்கான எதிர்ப்பு நிலையையும் வனைந் தெடுக்கின்றது.

நாடகச் சுவையில்
நடைபெறும் சபையில்
ஆடக அரங்கில்
இடம்பெறு முறுவல்
நாடக மாந்தர் தம்
நடிப்புத் திறனை
நாட்டுதல் முன்னர்

www.padippakam.com



நான்—சூத்திரதாரன்—இயம்புதல் மரபு; இந்து நாடக மரபு.

இப்பொழுது இங்கு நடி வந்து சேருவாள். அந்த நடியை நீங்கள் ஏலவே அறிவீர்கள். ஆனால், அவள் யார் என்பதைத் தேரீரோ?

**சொற்ற நடியே சூத்திரதாரன்**
**கற்றறிவுடைய காதலி யாகும்**

மனுஷ விவகாரங்களிலே மனுஷி இல்லாமல் சுவைக்காது. அவள் வந்து சேரட்டும்.

**அதற்கு முன்னரே இவன் உரைகேளும்**
**நாட்டும் தொனிப் பொருள் சுட்டும்**
**தர்ம விசாரணை**

**தர்மமும் விளக்கமும் தர்மமும் விளக்கமும்**
**தளங்களை பொறுத்தவை —ஞானத்**
**தளங்களைப் பொறுத்தவை—அநுபவத்**
**தளங்களைப் பொறுத்தவை—தேவைத்**
**தளங்களைப் பொறுத்தவை.**

இற்றைய நாளிலே எங்கு திரும்பினும் நின்று நின்று ஒலிப்பது என்ன?

**பின்னணி:**

ஒருவர்: சமத்துவம்
பலர்: வாழ்க !

**சூத்திரதாரன்:**

**கோஷம் போட்டால் வாய்தான் வலிக்கும்**
**தர்மம் விடிந்தால் வாழ்வு செழிக்கும்**
**சமத்துவ தர்மம் சகந்தனில் விடிந்தால்**
**நம்மவர் வாழ்வினில் நன்மைகள் பெருகும்-ஆனால்**

www.padippakam.com



**சங்கையான கேள்வி**
**பங்கமின்றி சமத்துவம்**
**சங்கமிக்கும் விளைநிலம்**
**எங்கே உண்டு? எங்கே உண்டு!**
அதுவே கேள்வி?

இந்த நாடகம், இந்து நாடக மரபின் சில அம்சங்களை மீள் தரிசனத்திற்கு ஏற்றுள்ளது. இருப்பினும், வியத்தகு மாற்றம் அமைந்துள்ள இக்காலத்து மேடையிலே அரங்கேற்றப்படுகிறது என்பதையும் மறத்தலாகாது. இந்த நாடகத்திலே நடி எப்ப தோன்றுவாள்?

[தூணுடன் சாய்ந்த உறை நிலையில் நடி காணுநருக்குத் தோன்றுகிறாள். உயிர்ப்புப் பெற்று நகரத் தொடங்க, சூத்திரதாரன் தன் உரையைத் தொடருகிறான்]

கேள்வி ஒன்று கேட்டு நின்றேன்,
நான் கேள்வி ஒன்று கேட்டு நின்றேன்.
சமத்துவம் விளையும் பண்ணை எதுவோ?

**'மன்னவனானாலும்**
**மாடோட்டும் சின்னவனானாலும்**
**மண்ணிற் பிறந்தாலே**
**மறுபடி மண்ணிற் கிரை தானே'**

**நடி:** அழைத்தீர் போலும்.

**சூத்திரதாரன்:**

**விளிப்பதற்கும் அழைப்பதற்கும்**
**அளிப்பதற்கும் நாடகத்தில்**
**செழிப்புகளைச் சேர்ப்பதற்கும்**

**நடி:** ஓகோ கோஹ்ஹோ!

**''பாவை கூத்தினுட் சூத்திர மிழுப்போன்**
**போலவிந் நாடகத் தின்காணு மெதற்கு**

www.padippakam.com



முதல்வனாய் நின்று வினை முடிப்பவனே
சூத்திர தாரனாஞ் சொல்லுங் காலே''

சுய கூட்டியங் கூற கூச்சப்பட்டு, இப்படி...
ஓகோ ஓஹொஹ்ஹோ!

சூத்திரதாரன்:

சாத்திரங்கள் ஆய்ந்து—கதைப
பாத்திரங்கள் தேர்ந்து—தனி
ஆத்திரங்கள் துறந்து—மத
காத்திரங்கள் நிறைந்த—பல
கற்பிதங்கள் சேர்ந்தும்—எம்
நற்போக்கன் எஸ் பொவின்
நவமுறுவல் ஒளிவிரிய
அவை நுகர அரங்கினிலே
எவன் ஏற்றி வைக்கின்றான்?
எவன் என்று கேட்பீரேல்
இவனென்று நான் உள்ளேன்

நடி: படைப்பவன் கடவுளே!
படைப்பானோ கலைஞனும்?

மண்ணைப் படைத்தாயா—நீயிந்த
விண்ணைப் படைத்தாயா—ஒரு
மன்னனைப் படைத்தாயா—வெறும்
மனிதனைப் படைத்தாயா?
சின்னவன் உன் படைப்பா—ஒட்டும்
மாடும் உன் படைப்பா?

சூத்திரதாரன்:

மண்ணிற் பிறந்தாலே—மறுபடி
மண்ணிற் கிரைதானே—என
உன்னி வகுத்தானே—அவன்
எண்ணி மகிழ்ந்தானே

www.padippakam.com



இதனைக் கற்பித்தவன் யார்? கடவுளா? மனிதனா?
உயர் கலா சத்தியம் நமக்கு உயிரினும் மாணப்
பெரியது

நடி: சமுதாயத்தின் தனித்துவ வித்தையை
சமுதாயத்தைக் கடைந்து அறிந்து வந்தீரோ
மெத்தக் கலைகள் பல மேற்கினில் ஒங்க
சித்தம் நிறைந்து திசை பல வென்ற
தத்துவக் காவலர் இலக்கிய மேதைகள்
வித்திடு சமத்துவக் கருத்துவம் எதுவோ?

சூத்திரதாரன்: அது—

நடி: எது என்கிறேன்? என்ன என்கிறேன்?

சூத்திரதாரன்:

வெள்ளையன் மாயையில் வீழ்ந்து விட்டாய்-அவன்
வெற்றுச் சரக்கிலே தாழ்ந்து விட்டாய்
உள்ளம் திறந்திடச் சொல்லுகிறேன்—ஒரு
உண்மை தெளிந்திடச் சொல்லுகிறேன்
வல்லவன் வெள்ளையன் அல்ல—அல்ல...

...எங்கள்

வேந்தன் தமிழ்க்கவி பாரதிதான்
வெல்லும் சமத்துவ தத்துவத்தைப் பாரில்
சொன்னவன் தமிழ்கவி பாரதிதான்

பாரதி பாடல்:

காதலினால் மானிடர்க்குக் கலவியுண்டாம்
கலவியிலே மானிடர்க்குக் கவலைதீரும்
காதலினால் மானிடர்க்குக் கவிதையுண்டாம்
கானமுண்டாம் சிற்பமுதற் கலைக ளுண்டாம்
ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே
அஃதன்றோ இவ்வுலகத் தலைமை யின்பம்
காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்
கவலைபோம் அதனால் மரணம் பொய்யாம்

www.padippakam.com



**கூடி:** சாதலிலே இல்லை சமத்துவம்; காதலிலே உண்டு சமத்துவம்! வந்தீர் வழிக்கு, வகையாய் மாட்டினீர்.

**சூத்திரதாரன்:**

எப்படி மாட்டினேன்?
அப்படி உண்டென்று
ஒப்புச் சொல்வோரும் உண்டு...
இதையும் கேள்,

**இந்த மனிதன் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம்**
**இல்லாத இங்கு மனிதர் நோக மனிதர் களிக்கும்**
**வாழ்க்கை இல்லாத இல்லை இல்லையென்று**
**இவர்கள்**
**சாம்பும் மிடிமை இல்லாத உங்கு சமத்துவம்**
**உயர் சமத்துவம் சமவுடமையில்தானே!**
இல்லையோ இன்பச் சமத்துவம்?

**கூடி :**

உண்டு உண்டு
விண்டு சொன்னீர்
கண்டு களிப்போம்
மொண்டு சுவைப்போம்.

**சூத்திரதாரன் :**

ஞானத்தில் எழுவது சுடலைச் சமத்துவம்—சுடலை
ஞானத்தில் எழுவது சுடலைச் சமத்துவம்
போகத்தில் பொசிவது கலவிச் சமத்துவம்—கலவிப்
போகத்தில் பொசிவது கலவிச் சமத்துவம்
போரினில் வெல்வது சமுதாயச் சமத்துவம்-வர்க்கப்
போரினில் வெல்லுவது சமுதாயச் சமத்துவம்

சங்கதி மூன்றும் சங்கையாய்த் தெளிந்தோம்
இந்த—

முத்திறக் கருத்துகள்
மோதிடும் பாங்கமே

www.padippakam.com



இத்தகு கூத்தின்
எதிர்ப்பு நிலையாம்

**கடி** : தயவு செய்து திரும்பச் சொல்லவும்...

**சூத்திரதாரன்** : நாடக ஆர்வலர்களே! நன்றாய் அறிந்து கொள்ளுங்கள். சமத்துவம் பற்றி நிலவும் மூன்று முரண்பட்ட கருத்துகள் தர்மத்தின் பகைப் புலத்திலே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படு கிறது. தர்மம் என்ற ஐயத்திலே தொற்றி நிற்கும் அதர்மா நீதிகளையும் நாம் விசாரணை செய் கின்றோம்.

**கடி** : செய்கின்றோம். அடுத்தது...

**சூத்திரதாரன்** : அடுத்தது நாடக மாந்தர்...

[பாத்திரங்களை சூத்திரதாரன் அறிமுகப்படுத்த, அந்தந்தப் பாத்திரங்கள் பின்மேடையில் வந்து, ஏலவே கற்பிக்கப்பட்ட இடங்களிலே, உறை நிலை அடைதல்]

**சூத்திரதாரன்:**

**சினத்தின் வசத்தோன்**
**புனத்தில் வசிப்போன்**
**தவத்தில் உயர்ந்தோன்**

**கடி**: விஸ்வாமித்திரர்.

**சூத்திரதாரன்** :

**இம்பர் அல்லா...**
**வம்பர் கோமான்**
**உம்பர் வேந்தன்**

**கடி** : இந்ரன்

**சூத்திரதாரன்** :

**குவளை விழியாள்**
**கோமள ஒயிலாள்**
**பவள இதழாள்**

www.padippakam.com



நடி : மேனகா...

மேனகா—இந்ரன்—விஸ்வாமித்திரர்
விஸ்வாமித்திரர்—இந்ரன்—மேனகா
ஐயோ, ஐயோ அனைத்தும் பழசு
புராண காலத்துப் பழைய மாந்தர்

**சூத்திரதாரன்:**

பழைய கருத்தைப் போற்றும் மனிதர் இன்னும் உண்டே. பழைய கருத்தைப் போற்றும் மனிதர் இங்கும் உண்டே.

ஆதலால்,
அன்றும், இன்றும், என்றும்
நின்று நிலவும் கருத்துரைக்க
இந்த மாந்தர் வந்து ஆடட்டும்...
அன்றியும்,
நவயுகப் போக்குடன்
புதுயுகக் குரலாய்
சண்டாளன் ஒருவனும்
இங்கு நடிப்பான்

நடி: சண்டாளனா?

**சூத்திரதாரன் :**

பழையது என்றே பதறினாய் முன்னர்
புதியது சொன்னதும் பறதியும் ஏனோ?

நடி : ஆசாரச் சைவர்களும் வந்துள்ள இந்தச் சபையிலே ஒரு சண்டாளனையும் சேர்த்துத் தீட்டுப்படச் செய்வது...

**சூத்திரதாரன்** : தமிழர் கூட்டம் இன்னமும் பன்னாடைகளாய் வாழலாமோ?

சண்டாளன் தனத்தைப்
பூண்டாலும் தவறோ?

www.padippakam.com



நடி :

ஒகோ சாற்றும் அப்படி
உத்தியும் நன்றே!
மேலும் உண்டோ நாடக மாந்தர்?

சூத்திரதாரன் :

உண்டு உண்டு
எல்லாம் வல்ல
ஏகனும் உண்டு

நடி :

நன்று நன்று
''தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!''

சூத்திரதாரன் :

விபூதிக்கோஷம் போதும் போதும்
கபோதி மனத்தின் காவற் குரலாய்
சுபத்தைக் காட்டும் சுருதியும் இழைத்து
அதோ...நீதி தேவனும் ஆடுவார்...
மேலும்...

நடி:

அப்படிக் கேளடி தங்கமே தங்கம்

சூத்திரதாரன்:

தானே தானே தன்னானனே
தன்னந் தானே னானே
தானே தானே தானே னானே
தானே தானே னானே
கதையும் நானே கருத்தும் நானே
கருத்தைப் பிழிவும் சொல்லும் நானே
சுரமும் நானே நானே!

www.padippakam.com



இப்படிக் கூறும் முறுவல் பிரதி சமைத்த
'நான்' உம் நடிப்பான்

**நடி:** இந்த 'நான்' இந்த மேடையில் எங்கே?

**சூத்திரதாரன்:** அவன் ஏகனைப் போன்றவன்.

**நடி:** அவன் தலைக்கனம் மிக்க எழுத்தாளன் போலும்... போகட்டும்.

**சூத்திரதாரன்:**

இத்தனை நடிகரை ஆட்டிப் பழக்கிய நானும் கலைஞனே—நாடகக் கலைஞனே.

**நடி:**

அறிந்தோம் தெளிந்தோம்
அவையோர் அன்பில்
நன்றிகள் உமக்கும்

[பின்னணியில் படைத்தலைக் குறிக்கும் காளிகா தாண்டவத்தின் இறுதிக் கட்டத்திற்கான தாளம் உச்ச ஸ்ருதியில் ஒலிக்கத் துவங்குகிறது.]

**சூத்திரதாரன்:**

**உனக்கும் நன்றி**
**சபைக்கும் நன்றி**
**வந்தனம் தந்தோம்—மிக வந்தனம் தந்தோம்**
**வந்தனம் தந்தோம்—மிக வந்தனம் தந்தோம்**

இதோ,

உறுவல் இன்றியே
முறுவல் நாடகம்
நிறுவல் தொடருமே

[எழினி] □

படிப்பகம்

www.padippakam.com

4

# கூச்சம்

[காளிகா தாண்டவத்திற்கான தாளம் மெதுவாக மடிகிறது. இரு வினாடிகள் நிசப்தம். இந்த மௌனத்தைப் பிளந்து 'ஓம்' என்ற உச்சாடனம் ஒலிக்கிறது. இந்த ஒலி மலைச் சிகரங்கள் பலவற்றில் மோதி, பல கோணங்களில் இருந்தும் பல தடவைகள் எதிரொலிக்கப்படுதல் வேண்டும். எழினி விலக, மேடையிலே இருள் கவிந்திருக்கிறது. இந்த இருளின் மையத்திலிருந்து வெடித்து கிளம்புவது போல, 'ஓம்' என்ற ஒலி முற்கூறப் பட்ட பிரகாரம் மீண்டும் ஒலிக்கிறது. இந்த ஒலியுடன் இணைந்தே மேடையில் ஊமை ஒளி படருகின்றது. மேடை நடுவில் ஏகனின் நெடிதுயர்ந்த உருவம்.]

**ஏகன்:** நாடகமே உலகம். சர்வ லோகமே என் நாடக அரங்கு! என் கூத்துகளின் கோலங்கள். அறம் புறமாகும். யுகத்தை அழிக்கவும் ஆடுவேன். புது யுகம் தோன்றவும் ஆடுவேன். ஏன்? அணுவிலும் நுணுக்கமான பிரணவ உச்சாடனத்திலும் பிரபஞ்சத்தை வனைவேன். சங்காரத்திற்கு உட்பட்டது ஒரு யுகம். (அட்டகாசமான சிரிப்பு) சிருஷ்டி-ஸ்திதி - சங்காரம் - திரோபவம் - அநுக்கிரகம் ஆகிய பஞ்ச கிருத்தியங்களும் எனதே. என் விளையாட்டே கருமம். என் கூத்தே பக்தி. என் முறுவலே ஞானம்! நானே தர்மம். தர்மமே நான்.

படிப்பகம்

www.padippakam.com



[அரங்கிலே இருள் சூழ, 'ஓம்' என்ற பிரணவ ஒலி இரண்டாம் முறை ஒலித்ததை போன்றே மூன்றாம் முறையாகவும் ஒலிக்கிறது. அப்பொழுது மின்னல் சொடுக்கும் நேரத்தில், அரங்கம் ஜெகஜ்ஜோதியாய் ஒளிர்ந்து எதிரொலிகளுடன் குறைந்து ஊமை நிலை அடைகின்றது. மின்னலின் போது விஸ்வா மித்திரனும் இந்ரனும் எதிர் எதிராக சிலை போன்ற உறை நிலையில் நிற்றல் காணுநற்குத் தெரிகிறது.]

**ஏகன்:** ஹஹ்ஹ ஹ் ஹா... (அட்டகாசச் சிரிப்பு)

[அப்பொழுது சபையிலே அமர்ந்திருந்த எஸ்.பொ. மேடைக்கு வருகிறான். நடுத்தர உயரம். மெலிந்த உடல். நாலு முழ வேஷ்டி. ஒரு புஷ் சேட். பீடிபுகைக் கிறான். ஒளி அமைப்புகள் மேடைத் தேவையை அநுசரித்துச் சரி செய்து கொள்ளப்படலாம்.]

**நான்:** ஏகனே ஏனிந்த எக்காளம்?

**ஏகன்:** எக்காளம்! இது எக்காளமா? ஹே, மானிடா, நான் முறுவலித்தேன். அந்த முறுவல்தான்... (அட்டகாசமான சிரிப்பு) என் குமிண் நகையே பிரபஞ்ச மெல்லாம் அதிரும்படி ஒலிக்கும். ஏன் தெரியுமா?

**நான்:** ஏகனே நீ எல்லாம் வல்லவன், எல்லாம் அறிந்தவன். நீயே சொல்...

**ஏகன்:** நடிப்பும் நானே! என் கற்பிதங்களின் எண்ணற்ற எண்ணக் கோலங்கள்... மானிடா என் முன் நடிக்காதே. ஏன் தெரியுமா?

**நான்:** நடிப்பா! சுருதி - பாவம் - அபிநயம் அனைத்தும் நீ அருளியவையே. நான் ஆட்சேபிக்க வில்லையே! வினாவுக்கான விடையை ஏகனே சொல்லட்டும்.

www.padippakam.com



**ஏகன்:** ஏன் தெரியுமா? சிருஷ்டிகள் யாவும் என் ஏகபோகமே!

**நான்:** ஏகபோகம் என்று சொல்லிவிடவும் முடியாது.

**ஏகன்:** ஹே, மானிடா! உன்னால் சிருஷ்டிக்க முடியுமா?

**நான்:** முடியாது என்று சொல்லிவிடவும் முடியாது. சகல ஜீவராசிகளிலும் மனிதனுக்கு சிந்திக்கும் ஆற்றலையும், கற்பனைச் செழுமையையும் வைத்தாய். அவன்—அந்த மனிதன்—அவற்றை தனது படைப்புச் சாதனங்களாய் உயர்த்தினான்.

**ஏகன்:** நான் அறியாதவற்றை எனக்குப் போதிக்கிறாயோ?

**நான்:** போதனையா? கற்பதன் மூலம் அநுபத்தை அகலிக்கின்றேன். அநுபவமும் ஞானத்தின் விளை நிலம். ஞானத்தை படைத்தலும் பகிர்தலும் என் ஊழியம்...

**ஏகன்:** உன் ஊழியம் நான் இட்ட பிச்சை. இதோ பார்...

**நான்:** பார்க்கிறேன்: தெரிகிறது.

**ஏகன்:** அவர்கள் யார்?

**நான்:** ஏகனே, எல்லாம் உன் ஏகபோகம் என்றாயே! அவர்களுடைய நாமங்களும் உன் கற்பிதமே.

**ஏகன்:** மானிடா, நீ உன் புத்தியால் என்னை மடக்கப் பார்க்கிறாய்?

**நான்:** உன்னையா? மடக்குவதா? ஏகனுக்கு இப்படி ஒரு தாழ்வுச் சிக்கல் ஆகாது. யுக்தி உனக்கு விரோதமானது என்றால்,அதை எனக்கு நீ அருளியிருப்பாயா?

**ஏகன்:** நானே யுக்தியைத் தந்தேன். ஆனால், அதன் பிரயோகத்தை அவனவன் சுதர்மத்திற்கு விட்டு

www.padippakam.com



விட்டேன். நான் அளிக்கும் சுயேச்சைகூட என் படைப்பின் கபட நாடகந்தான். அது சரி, யுக்தியால் நீ அடைந்த பயன் என்ன?

**நான் :** அநந்தம்.

ஏகன் : அது தோற்றம்! கற்பனை மயனின் குறளி... இப்பொழுது இந்த இரண்டு உருவங்களையும் பார். இருவரும் பிறப்பால் அரசர்கள். இந்த ஜடாமுடி தாரி, தன் செயலால் அந்தணனாகிய ரிஷி! அவனை விஸ்வாமித்திரன் என அழைக்கலாம்.

**நான் :** மற்றவன்?

**ஏகன் :** கதையும் நானே! கருத்தும் நானே! கருத்தைப் பிழியும் சொல்லும் நானே என்று முழங்கும் நீ ஒரு சவலையா? அவனுடைய கம்பீரத் தோற்றத்தைப் பார்! அவன் அரசர்களுக்கெல்லாம் அரசன். ஏன் தேவர்களுக்கே அரசன்...

**நான் :** இந்ரன்...

ஏகன் : ஆம். உனக்கு அருளியதைப் போலவே, இவர்களுக்கும் யுக்தியை அருளியிருக்கிறேன். யுக்தி அவரவர் சுதர்மம். அவர்கள் தர்மத்திற்கான விளக்கத்தினைத் தத்தமது யுக்திகளினாலே கண்டு தெளியட்டும்.

[ஏகன் சடுதியாக மறைதல். விஸ்வாமித்திரனும் இந்ரனும் உயிர்ப்பு நிலை பெறுதல். கண்களிலே கனல் தெறிக்க ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிறார்கள்.]

**நான் :** பார்வையிலே மோதல்...

**ஏகன் :** (விட்புறக் கூற்றாக) மோதுதலா? நான் இயற்றும் அநந்த கோடி லீலா விநோதங்களில் இதுவும் ஓர் அம்ஸமே. (அட்டகாசமான சிரிப்பு.)

www.padippakam.com



**நான் :** ஏகனே! மீண்டும் உன் முறுவலின் க்காளம்! அதற்கான விளக்கத்திற்குள் என் கற்பனையுடன் நுழைகின்றேன்.

[நான் செல்லல்]

**விஸ்வாமித்திரன்:** இந்ரா! எந்திரப் பார்வையோ? அன்றேல், மந்திரப் பார்வையோ?

**இந்ரன்:** இஃது இந்ரப் பார்வை!

**விஸ்வாமித்திரன்:** புங்கவன் யான்! பலிக்காது உன் தந்திரம். ஏன் அப்படிப் பார்க்கிறாய்? நான் என்ன கவர்ச்சிப் பாவையா? நானோ யோகி. நீ... போகி! காமத்தின் போகி! ஆசிரமத்தில் வாழ்ந்த அந்த அழகிய அப்பாவி அகலிகையைக்கூட...!

**இந்ரன்:** சுகித்தேன். போதும் விஸ்வாமித்திரா! ஏன் வீண் அழுக்காறு? ஆணும் பெண்ணும் கலவியின் உச்சத்திலே உந்நத சமத்துவ நிலையைச் சுகிக்கிறார்கள். அந்த சமத்துவ சாரமாம் அமுதத்தினை நீ ஒரு தடவையாவது அநுபவித்திருந்தால்...

**விஸ்வாமித்திரன்:** அநுபவித்திருந்தால்...

**இந்ரன்:** அப்படிக் கேள் விசுவாமித்திரா! அநுபவித்திருந்தால், உன் கமண்டலத்தையும் சுக்குமான் தடியையும் வீசி எறிந்து...

**விஸ்வாமித்திரன்:** வீசி எறிந்து...

**இந்ரன்:** 'கறந்த இடத்தைப் பிசையுதே கை, பிறந்த இடத்தை நாடுதே பேதை மனம்...' என்று கமண்டலத்திற்கும், சுக்குமான் தடிக்கும் புதிய அர்த்தங்களை அநுபவ வாயிலாகக் கண்டு, தெளிந்து, சுகித்திருப்பாய்.



படிப்பகம்

www.padippakam.com



**விஸ்வாமித்திரன்:** சுக துக்கங்களைத் துறந்த முனி புங்கவன் யான்.

**இந்ரன்:** எதையெல்லாம் துறந்து நீ வருந்துகிறாய் தெரியுமா? பாவம் என மனமிரங்கி வத்ஸாயன கலையின் கரும்புச் சாறினைப் பிழிந்து தரவல்ல சிற்றின்பப் பதுமைகள் சிலரை அனுப்பி உதவி னால்...

**விஸ்வாமித்திரன்:** இந்ரா! உன் இரக்கமும் வேண் டாம்; அதிலே சுரக்கும் இன்பமோ, துன்பமோ அதுவும் வேண்டாம். உன்னிடம் பிச்சை ஏற்கும் எச்சில் நிலை எனக்கில்லை. நீ நந்திதேவனிடம் போய் பிச்சை நத்தி உன் உடம்பை மெத்த வளர். உடம்பிலே சத்துச் சுரந்தால் ஒரு முகுந்தை யையோ, அகலிகையையோ தேடி ஓடு. தேடி ஓடு.

**இந்ரன்:** பிச்சை! பெண்ணிச்சை, பிச்சை!

[எழினி] □

www.padippakam.com

5

# பேய்க் காரம்

[சலசலத்தோடும் நதி தீரத்திலே, விஸ்வாமித்திரன் தவநிலையில் அமர்ந்திருக்கிறார். பின்னணியிலே, பெண்களின் பரிகாச சிரிப்பொலி எழுந்து, மடிந்து, மீண்டும் எழுந்து கொண்டே இருக்கின்றது. சத்தத்தின் சலனத்திலே தவநிலை கலைந்து, விஸ்வாமித்திரன் நடுமேடைக்கு வருகின்றார். சடுதியாக ஊர்வசி பாடி ஆடியவாறு வலப்பக்கமாக மேடைக்கு வருகிறாள்.]

**ஊர்வசி:**

**தாகம் எழுந்து தவித்து வந்தேன்—ஐய**
**சாந்தி அளித்திடு தவமுனிவ**
**யாக நிலையிங்கே ஏன் எதற்கோ—இங்கு**
**யானிருக்கும் இந்த வேளையிலே**

**விஸ்வாமித்திரன்:** தூர்த்தையே! தீண்டிடேன்! போய் விடு!

**ஊர்வசி:**

**தீண்டற்கரிய இந்த மேனியால்—கனி**
**செந்தேன் தருவேன் எழில் தெய்வமே**

**விஸ்வாமித்திரன்:** போய்விடு தூர்த்தையே! தீண்டிடேன் போய்விடு!

படிப்பகம்

www.padippakam.com



**ஊர்வசி:**

**மீண்டும் இளமை வரா மேனியை—இன்று**
**மேவித் தழுவ வரும் இன்பமே**

**விஸ்வாமித்திரன்:** தூர்த்தையே போய்விடு... போய்விடு...போய்...

[ஊர்வசி மறைதல், ஒளி விஸ்வாமித்திரன் முகத்தில் மட்டும் குவிகிறது. விழிகள்மூட, சாந்த நிலை அவர் முகத்தில் படர்கிறது. விழிகள் மீண்டும் திறக்கின்றன.]

**விஸ்வாமித்திரன்:** சங்கு நிகர் கொங்கைகளை கொங்கு வழியக் குலுக்கி, பொங்கு அழகி கங்குகாட்டி, கங்குல் நேரத்தில் ஊர்வசி வந்தாள். புல்கல் நந்தியல்லவா ஒல்கி வந்தாள்? கணவன் அணைப்பிலே பிணைவு நுகர்கையிலும், சோரன் வருணனிலே பிணை வைத்த தூர்த்தை அவள். அவளைத் துரத்தினேன், ம்... துரத்தினேன்! இந்ரா உன் யுக்தி பலிக்கவில்லை. என் கீர்த்தியே சீர்த்தியுடன் நிலை நாட்டப்பட்டது.

[விஸ்வாமித்திரன் தவநிலையில் அமர்ந்திருக்கின்றார். மேடையிலே ஊமையான சிவப்பு ஒளி. இடப்பக்க மேடையிலே ரம்பையின் ஆள் கொல்லிச் சிரிப்புக்கேட்கின்றது. மெல்லிய ஒளிக்கற்றைஒன்று, அவருடைய தப்நிலை குழம்புவதைக் காட்டும் வாக்கில் அவர் முகத்தில் விழுகின்றது. சடுதியாக விஸ்வாமித்திரன் இருளில் மூழ்க, ஒளி மேடையின் இடப்பக்கத்திற்கு நகர்ந்து, ரம்பை ஆடிப்பாடிக் கொண்டு வருவதைக் காட்டுகின்றது.]

**ரம்பை:**

**பூத்துக் குலுங்கு மலர்க் கொடியில்—இன்பம்**
**பொங்கிப் பொரும் இரு மலைகள்**

www.padippakam.com



[ஒளி தவநிலை கலைந்து சினம் மீதூரப் பெறும் விஸ்வாமித்திரனையும், ஆட்டத்திலே தன்வய மிழந்து கொண்டிருக்கும் ரம்பையையும் மாறி மாறிக் காட்டுகின்றது.]

**ரம்பை:**

**சேர்த்துப் புணர வழி சமைத்து—அதில்**
**திரண்டு தவங்கிடக்கும் இடைகள்**

**விஸ்வாமித்திரன்:** வண்டாட்டம் அண்டாதே...திண்டாட்டம் உனக்கேதான்.

**ரம்பை:**

**ஈர்த்துப் புணரு மிரு விழிகள்—பெரும்**
**இன்பம் சுரந்து தரும் இணைகள்**
**நீர்த்துத் ததும்புமிரு சுனைகள்—அவை**
**நெஞ்சில் சுமை தருமிம் மலைகள்.**

**விஸ்வாமித்திரன்:** மல் ஏனோ? நீ கல்லாகு! மல் ஏனோ? நீ கல்லாகு!

[ரம்பை கல்லாகின்றாள். ஒளி விஸ்வாமித்திரனின் முகத்தில் மட்டுமே தரிகின்றது.]

**விஸ்வாமித்திரன்:** பாரத்துவாசரை மயக்கி, கலவிக் கலையின் கோலங்களை பருக வைத்த வரம்பில் வனப்பி ரம்பை வந்தாள். வெல்லுவேன் என்ற எல்லுடன் கொல்நகை சிந்தி, மல் சேரக் காமவில் தொடுத்து நின்றாள். அவள் கல்லானாள். இந்ர, நீ மீண்டும் தோற்றாய்! என் வீங்கு புகழ் பாங்குடன் என் வசம் நிலைத்தது.

[மேடையில் இருள் சூழ்ந்து, ஊமை ஒளி பரம்ப, விஸ்வாமித்திரன் மேடையில் ஆழ்ந்த நிஷ்டையில் ஒன்றியிருப்பது தெரிகிறது. மேடையின் வலப் புறம் மேனகையின் தோற்றம். மேனகையின்

www.padippakam.com



நடனமும், விஸ்வாமித்திரனின் நிஷ்டையும் மாறி மாறிக் காணுநருக்குத் தெரிதல் வேண்டும்.]

**மேனகா:**

**இனிதிந்த ஏகாந்தமே—இன்ப**
**இளந்தென்றல் தருஞ் சாந்தமே—இனிதிந்த**

**கனி கொய்து விளையாடியும்—இளம்**
**கலைமான்போல் துணை தேடியும்**
**சுனைநீரில் மகிழ்ந்தாடியும்—அன்புத்**
**துணையோடு புணர்ந்தொன்றி கலந்தின்ப**
**சுகங்காண— இனிதிந்த**

**அலைபாயும் புனற்காற்றிலே—அகம்**
**அணைந் தொன்றும் உணர்வூற்றிலே**
**மலரொன்று சதுராடுதே—அதன்**
**மகரந்தம் பறந்தோடி பிறிதொன்றில் நிலைகொள்ள**
**—இனிதிந்த**

[நடனம் முடிந்து, மேனகாவின் தற்கூற்று நடை பெறும் பொழுது, படிப்படியாக விஸ்வாமித்திரனின் நிஷ்டை கலைவதும், ஈற்றிலே அவர் ஏதோ காந்த சக்தியினாலே ஈர்க்கப் பட்டவர் போல, மேனகாவைத் தொடர்ந்து, மேடையின் வலப்புறமாக மறைதலும் காணுநருக் குப் புலப்படுத்தப் படுதல் வேண்டும்.]

இனிது இனிது ஏகாந்தம் இனிது
இனிது இனிது இந்த ஏகாந்தம் இனிது
கனி பறித் துண்ணவும்
காதல் நுகரவும்
தனிமையில் இளமையின்
தாகம் தணியவும்
தவமுனி அயலில் தனிச் சுகமுண்டு-எனவே
ஆ!

www.padippakam.com



தனிமையில் வந்தேன். தாகந் தணிய
இது?
தங்க சிலையா?
தக தக வென்று தண்ணொளி வீசும்
விரிந்த மார்பும்
வீரிய தோற்றமும்
யௌவன அழகு கௌவிய உருவம்
கூந்தல் கருமையும்
கொஞ்சும் விழியும்
விரிந்த மார்பும்
வீரிய தோற்றமும்
பார்க்கும் பொழுதே பரவச உணர்வு
இது உண்மை உருவமெனின்
சேர்க்கையில் எத்தனை தித்திப்பு எய்தலாம்.

என் குமரி உடலில் எதற்கிந்த ஆடைகள்
தொய்வும் தேய்வும் தோன்றாக் கோலம்
ஐயகோ இந்த அழகு மறைத்தற்கா
ஆடைகள் அகற்றி அருவியின் அணைப்பில்
அரும் புனல் நீரின் அணைப்பிலே மலர்ந்து
தழுவும் நீரின் தண்மையில் இத்
தங்கச் சிலையின் தழுவலை நுகர்ந்து
தாகம் தணிந்து
தனிமையில்
காணும் சுகமே இனிது
அதில் நிறையும் மனமே இனிது
இனிது இனிது
ஏகாந்தம் இனிது

[மேடையில் இருள் சூழ்ந்து, மீண்டும் ஒளி இலேசாகப் படர்கின்றது. நடன், நடி, விடன் ஆகியோர் இடப் பக்கத்திலிருந்து மேடைக்கு வருதல்.]

www.padippakam.com



நடன்: ஓடையிலே குளித்த மேனகா எங்கே?

விடன்: ஆமா...மேனகா எங்கே?

நடி: அவளைத் தொடர்ந்து சென்ற விஸ்வாமித்திரர் எங்கே?

விடன்: ஆமா, விஸ்வாமித்திரர் எங்கே?

நடி: ஓஹொஹோஹோ... கலவி போக சமத்துவம் நடை பெறுகிறது.

நடன்: கலவி போக சமத்துவம் அந்தரங்கமானது.

விடன்: ஆமாம்... அந்தரங்கம் புனிதமானது.

[எழினி] □

www.padippakam.com

# 6

## அர்ப்பாயம்

[துவக்கத்திலே, ஒளி விஸ்வாமித்திரனுடைய ஜடா முடியிலே விழுந்து, அவர் தற்கூற்று வசனத்தினைப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, மெல்ல மெல்ல அவர் உருவம் வெளிப்பட்ட பின்னர், ஒளி மெது மெதுவாக அகலித்து பகைப்புலனையும் காட்டும்.]

**விஸ்வாமித்திரன்:** (தற்கூற்று) ஊர்வசி வந்தாள். உடலுணர்ச்சியின் ஓங்காரம் தோற்றது. இத்தவத்தின் மூத்தோனே வென்றான். காம வில் தொடுத்து நின்றாள், ரம்பை! அவள் கல்லானாள். மீண்டும் இந்ரன் தோற்றதை அண்ட சராசரங்களும் அறிய முழக்கமிட்டேன். இப்பொழுது வெட்கத்தில் குமைகிறது என் மனம். ஒரு மங்குளிப் பெண்ணின் வெங்குழிச் சிரிப்பிலே புங்கவர் கோமானாம் இந்த விஸ்வாமித்திரன் தன் வசமிழந்து, சுயமிழந்து... உன்னிப் பார்க்கவே என் உடல் கூனிக் குறுகின்றது. என் தவம். என் பலம். பூண்ட நோன்பு; கொண்ட மாண்பு... ஓடையின் கதமும், சீதள சுகமும் சமைத்த இயற்கைச் சூழலிலே என் மனம் நெகிழ்ந்ததா? அன்றேல், குவளை விழிகளும், கோமள இதழ்களும், கலசத் தனங்களும், குலைந்த கலையும், அதனுள் விரிந்த பலி பீடமும்... ஐயோ, இந்திரிய வீரியத்தை தூவிடம் தூவுவதுதான்

படிப்பகம்

www.padippakam.com



இயற்கை வழியா? அவ்வாறாயின், நான் உவப்பென வரித்த பிரம்மச்சாரியமும் தவமும்? (மேடையின் வலப்புறமாகத் தூரப் பார்வையை செலுத்திய பின்னர்) யார்? மஞ்சத்தின் கொஞ்சு கலையிலே விஞ்சும் அந்த வஞ்சகி... அஞ்சக நடை மிஞ்சக் கெஞ்ச வருகின்றாள்... என் நெஞ்சம் ஏன் இப்படி சவுங்குகின்றது? மேதினி போற்றச் சாதனை நாட்டிய இந்தத் தவ சிரேஷ்டனுக்கு இப்படியும் ஒரு சோதனையா?

[இந்தத் தற்கூற்றின் போது மேனகாவின் சதங்கை ஒலி சிறிது சிறிதாக அண்மித்தல்; தொடர்ந்து மேனகா வலப்புற மேடையிலே தோன்றல்.]

**விஸ்வாமித்திரன்:** சதங்கையின் சுருதிக்கு உடல் குலுங்கி நடக்கும் சிறுக்கி, கிட்ட வராதே! எட்டப் போ!

**மேனகா:** பிரபு!

**விஸ்வாமித்திரன்:** பிரபு... நீ யார்? உனக்கும் எனக்கும் என்ன உறவு?

**மேனகா:** நீ யார்...? உனக்கும் எனக்கும் என்ன உறவு?

**விஸ்வாமித்திரன்:** பித்தையே! உன் தத்தை மொழி எனக்குத் தித்திக்காது.

**மேனகா:** (ஏளன நகை சிந்தி) நீங்களும் நன்றாக நடிக்கின்றீர்கள்...

**விஸ்வாமித்திரன்:** பெண் எனும் மாயப் பிசாசே! உன் சரஸச் சிரிப்பை நிறுத்து. உன் கயல் விழிகளிலே மயல் ஏந்தி அப்படிப் பார்க்காதே! கேள்விக்குப் பதில்...

**மேனகா:** என்ன கேள்வி?

**விஸ்வாமித்திரன்:** நீ யார்?

www.padippakam.com



**மேனகா:** நான்தான் மேனகா.

**விஸ்வாமித்திரன்:** ஓகோ உன் பெயர் மேனகா. அறிந்தேன். உனக்கும் எனக்கும் என்ன உறவு?

**மேனகா:** உறவு? அதனையும் அறியுங்கள். நான் தங்கள் மனைவி.

**விஸ்வாமித்திரன்:** என் மனைவி...த்சூ...!

**மேனகா:** இந்த உடலைத் தங்களுக்கு விருந்தாய்ப் படைத்தேன். தங்களுடைய போகத் தேவைகளுக்கு இதனை பலிப் பொருளாக்கினேன். இவை பொய்யா?

**விஸ்வாமித்திரன்:** பொய்!

**மேனகா:** இந்தப் பேதையை இப்படிச் சோதிப்பது சரியா சுவாமி? தங்கள் அன்பையும் ஆதரவையும் யாசிக்கின்றேன். மனமிரங்கி என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்.

**விஸ்வாமித்திரன்:** நடன மாதே, உன் நடிப்பை நிறுத்து!

**மேனகா:** யோசித்துப் பாருங்கள் பிரபு...

**விஸ்வாமித்திரன்:** நீ எனக்கு யோசனை சொல்லவும் வந்து விட்டாயா?

**மேனகா:** என்னைப் பேசவிடுங்கள் சுவாமி...

**விஸ்வாமித்திரன்:** உன் மோகன ஆயுதங்களுள் உன் நாக்கும் ஒன்று. இருப்பினும் உன் பேச்சுக்கும் இதோ ஒரு சந்தர்ப்பம்...ம்...

**மேனகா:** நான் குளித்துக் கொண்டிருக்கும் பொழுது, நீங்கள் தவநிலை கலைந்து என்னைப் பார்த்ததும்...

**விஸ்வாமித்திரன்:** பார்த்ததும்...

www.padippakam.com



**மேனகா:** சிரித்ததும், அருகில் அழைத்ததும்...

**விஸ்வாமித்திரன்:** அழைத்ததும்...

**மேனகா:** என்னைஅணைத்ததும்,மோஹத்தில் மோகனத்தில் இருவரும் இணைந்ததும்,தாங்கள் சுவைப்பதற்கும் களிப்பதற்கும் நான் நடன விருந்து அளித்ததும்...

**விஸ்வாமித்திரன்:** அளித்ததும்...

**மேனகா:** ஆகாயமும் பூமியும் சாட்சியாக நாம் இருவரும் கந்தர்வ மணம் புரிந்ததும், காமத்திலே நெகிழ்ந்ததும்,கலவிமோஹம் ஊட்டிய மயக்கத்தில் இருவரும் சுயங்களை இழந்ததும்...

**விஸ்வாமித்திரன்:** இழந்ததும்—

**மேனகா:** ஓருயிரும் ஓருடலுமான நெருக்கத்திலே, அடிக்கரும்பின் சாறினை மாந்திச் சுகித்ததும்...

**விஸ்வாமித்திரன்:** சுகித்ததும்...

**மேனகா:** பிரபு! என்னைத் தத்தை என்றீர்கள். இப்பொழுது நீங்களே கிளிப்பிள்ளை போன்று...

**விஸ்வாமித்திரன்:** போன்று...

**மேனகா:** சுவாமி விளையாடாதீர்கள். ஐயய்யோ, இவையெல்லாம் கனவுகளா?

**விஸ்வாமித்திரன்:** கனவுகளாகவே கொள்ளத் தக்கன. நீ - நான்-கலவி - களிப்பு - சமத்துவம் எல்லாமே மாயத் தோற்றங்கள்...

**மேனகா:** அப்படிச் சொல்லாதீர்கள். (கனவு காண்பவளைப்போல) 'வானத்து நங்கையே! கூன் நுதலாளே! மான் விழியாளே! தேன் இதழாளே! மேன்மை கொள் நேதியைத் துறந்தேன். உன் கேண்மையை நாடினேன். நீயே இதயத்தின்

www.padippakam.com



கோன்மை. தாழாது ஓடி வா. தரிக்காது என் உயிர். வேட்கையிலே என் உடல் வெந்து தனல் கக்கு கிறது. குளிர் புனலே வா!' (கனவு கலைந்த நிலை அடைந்தவளாக) வேதத்தினை துறை போக ஓதிய உங்கள் உதடுகள் உதிர்த்த இந்த வார்த்தைகளை எப்படி நான் மறப்பேன்?... ஏங்கும் என் உள்ளத் தின் கதவுடைப்பே இந்தக் கண்ணீர்...என் கண்ணீ ரைக் கண்டும் இரங்காது நீங்கள் மாயத் தோற்றங் கள் பற்றிப் பேசுகிறீர்கள். தங்களுடைய இந்த அலட்சியத்தை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. பேதையை ஏற்றுக் கொள்ளுங்கள். விழிநீரால் அடிகழுவி, இக்கூந்தலால் அது துடைத் துப் பாத சேவை செய்யும் பாக்கியத்தைத் தாருங் கள்,

**விஸ்வாமித்திரன்:** மேனகா எழுந்திரு. என் பாதங் களை விடு. உன் நீலிக் கண்ணீருக்குத் தாலியா கூலி? நீ தேவர்களின் தாசி. மாசிலே திரண்ட பாசி. உன் மூச்சுக் கூட அசிங்கமானது. கோபத்தைக் கிளறாதே.

**மேனகா:** உங்களுடன் கூடி ஒரு சிசுவைப் பெற் றெடுத்த உறவு முறையை முன் வைத்துக் கெஞ்சு கின்றேன்.

**விஸ்வாமித்திரன்:** மாடும் கன்றுமாய் மாறி விட்டாய் என்ற வர்த்தமானத்தைக் கூறுகிறாயா?

**மேனகா:** அது சிசு. என் அழகிய கற்பிதங்களும், உங்கள் ஆண்மையின் ஆகுதியும் சங்கமித்துத் திரண்ட வெல்லக் கட்டி அது!

**விஸ்வாமித்திரன்:** சிசு! மாயத் தோற்றத்தின் பிறி தொரு வடிவம் அது.

**மேனகா:** அந்தப் பிள்ளைக் கனியமுது கூட மாயத் தோற்றமா?

www.padippakam.com



**விஸ்வாமித்திரன்:** ஆம்

**மேனகா:** இல்லை! தங்கள் இந்திரியச் செழுமையை— இன்பத்தின் நல் முத்துக்களை— தேவர்தம் உயிர்ப்பே நுழையாத என் கருவூரிலே நுழைய அனுமதித்தேன். சுமந்தேன்- முற்ற விளைய விட்டேன். இவற்றின் திருட்டாந்தந்தான் அச்சிசு. அதன் உயிர்ப்பும் பிஞ்சு உள்ளமும் நம் இருவரிடத்தும் பாச உணர்ச்சிகளையும் தேடித் தவிக்கின்றது.

**விஸ்வாமித்திரன்:** சிங்காரக் கள்ளி! அலங்கார வார்த்தைகளை அள்ளித் தெளிக்காதே! உணர்ச்சிகள்...

**மேனகா:** உணர்ச்சிகள்— அதுவும் மகா உத்தமமான பாலுணர்ச்சிகள்— ஒரேயொரு சுவைப்பிலே பொசுங்கி விடுகின்றன என்பது என் அநுபவத்திற்கு முரணானது.

**விஸ்வாமித்திரன்:** மேனகா! அந்தப்புர அநுபவங்களுடன் தெய்வீக தத்துவத்தின் உள் முடிச்சுகளை அவிழ்க்க முனைதல் மிக மிக ஆபாசமானது. தர்க்கத்தின் உலைக் களத்தில் புடம் போட்டெடுக்கப் பட்ட அறிவுக்கு முதன்மை அளி. மலரிலே வண்டு தேனுண்டு களிக்கும். அஃது இயற்கையின் நியதி. எந்த வண்டாவது, தன் சுவைப்பின் விளைச்சல் என்று காரணங் கற்பித்து காய்மீதும், கனிமீதும் உறவு கொண்டாடுவதில்லை. இஃதே இயற்கை நியதியானால், ஏகனாம் ஈசன் கற்பித்த ஒழுக்க நெறியானால், நீ ஈன்றுள்ள அந்த சிசுவுக்கும் எனக்கும் எந்த பாச உறவுகளுமே கிடையாது.

**மேனகா:** வண்டும் மலரும் அஃறிணைப் பொருட்கள். அந்த உவமைகள் உயர்திணை வர்க்கத்துக்குப் பொருந்தாது.

**விஸ்வாமித்திரன்:** சுந்தரப் பதுமைகளின் சிங்காரச் சிரசிலே ஈசன் மூளையை வைக்க மறந்தானா?

www.padippakam.com



போகத்திற்கு உகந்த போதைப் பொருள்கள் நர குலத்தின் கடை நிலையாருக்கு உவப்பான சிற்றில் கதைகள் பிதற்றலாம். மேனகா! மலம் கழிகிறது. கழிகிறதும், கழிப்பதும், கழிவு கர்மம். பின்னர் அந்த மலத்தின் மீது உறவு கொண்டாடுபவன் யார்? அப்படித்தான் சிந்தப்பட்ட விந்தும்! நான் அமலன்; நிர்மலன்!

**மேனகா:** முனி புங்கவா! தங்களுடன் வாதுரைத்து வெல்வதற்கு நான் என்ன வசிட்டரா? ஒரு பெண். தங்கள் கருணையை யாசிக்கும் ஓர் அபலை.

**விஸ்வாமித்திரன்:** யார் சொன்னான் நீயொரு பெண் ணென்று? நீ ஓர் ஆயுதம். அதுவும் வஜ்ராயுதனின் ஆயுதம். ஊர்வசியும் ரம்பையும் சாதிக்கத் தவறி யதை நீ சித்திக்க வைத்த செருக்குடன் நிற்கிறாய். போய் விடு.

**மேனகா:** கடைசியாக தங்கள் பதில்?

**விஸ்வாமித்திரன்:** ஒரே பதில். அதைச் சொல்லியும் விட்டேன். என் கண்முன் நில்லாதே. போய் விடு!

**மேனகா:** இது தர்மமா சுவாமி?

**விஸ்வாமித்திரன்:** மேனகா! நான் பேசுவது என் தர்மம். ஒவ்வொருவருக்கும் தன் தன் தர்மத்தினை எடுத்துச் சொல்லவே உரிமையுண்டு.

**மேனகா:** ஒப்புயர்வற்ற மானுஷீகத்தை மறுத்தலிப்பது தான் தர்மமா?

**விஸ்வாமித்திரன்:** மானுஷ்கத்திலும் மேம்பட்டது என் தவம்.

**மேனகா:** குருத்துக் குழந்தையின் மிருதுத் தழுவல் ஆயிரங்கோடி தவத்திலும் பார்க்க இன்பந் தர வல்லது. இந்த மெய்ம்மையை இனியாவது அநுப வித்துப் பாருங்கள்.

www.padippakam.com



**விஸ்வாமித்திரன்:** நீ பேசுவது தோலின்பம்! சற்று ஆழமானால் தசையின்பம்! நான் பேசுவது ஆத்ம இன்பம்.

**மேனகா:** கொண்டு வருகிறேன் அந்தச் சிசுவை. அதற்கு ஆத்மா உண்டா இல்லையா என்பதை நேரிலேயே பாருங்கள்.

**விஸ்வாமித்திரன்:** கொண்டு வர வேண்டாம். அது உன் காம வயலின் அறுவடை.

**மேனகா:** அந்த விளைச்சலுக்கு கர்த்தா யார்? கருவி யார்? விஸ்வாமித்திரன் ஆண்மையற்ற நபுஞ்சகமா? வசைபாடுவதுதான் விஸ்வாமித்திரனின் தத்துவம் என்பது இப்பொழுதுதான் புரிகிறது.

**விஸ்வாமித்திரன்:** இந்த விஸ்வாமித்திரனைப் புரிந்து கொள்வதற்கு, அந்த ஆனானப்பட்ட தேவர்களே மயிர் பிளக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். உடல் விருந்து படைத்து வாழும் இந்த ஊத்தைக்குப் புரிந்து விட்டதாம்.

**மேனகா:** உங்களைப் புரிந்ததோ! புரியவில்லையோ! என் வழிகள் நான் அறிந்தவை.

**விஸ்வாமித்திரன்:** உன் வழிகள்?

**மேனகா:** இரு வழிகள் உள.

**விஸ்வாமித்திரன்:** அவற்றை மொழி!

**மேனகா:** நாமிருவரும் இந்த கங்கைக் கரையிலே வீடு அமைத்து, இனிதாக இல்லறம் பயிலுதல் ஒரு வழி.

**விஸ்வாமித்திரன்:** அது நடக்க மாட்டாது; நடக்கவும் கூடாது! மறு வழி?

**மேனகா:** நான் தேவலோகத்திற்குத் திரும்புதல்...

**விஸ்வாமித்திரன்:** நன்று. அப்படியே செய்! செல்லும் வழியை நீ அறிவாய்.

படிப்பகம்

www.padippakam.com



**மேனகா:** ஆனால் ஒன்று... (மேனகா செல்லுதல்)

**விஸ்வாமித்திரன்:** (தன் கூற்று) வழிகள் இரண்டு என்றாள்... இப்பொழுது ஒன்று என்று மென்று கொண்டு ஓடுகிறாள். ஒன்று இரண்டு என்று க்ஷணத்திற்கு க்ஷணம் பேதலித்து, பின்னர் எதை எதையோ செய்து, மூன்று என்று புதுக் கணக்கு காட்டும் இந்தப் பெண்களை வைத்துக் கொண்டு இல்லறம் நடத்தும் சம்சாரிகள்மீது இப்பொழுது தான் எனக்கு உண்மையான அநுதாபம் சுரக்கின்றது.

**மேனகா:** (சிசுவுடன் வந்து, அதை விஸ்வாமித்திரனின் காலடியில் வைத்து) மானிட அம்ஸமுள்ள இந்தச் சிசுவுக்குத் தேவர் உலகில் இடமில்லை.

**விஸ்வாமித்திரன்:** என் காலடியில் அதனை வைக்காதே. காம ஏட்டையிலே நீ நடத்திய வேட்டையின் தேட்டமாம் அதனை தூக்கு! கண்ட கண்ட இடத்திலே கூடுவதும், அந்தக் கேட்டிலே இத்தகைய பாலூட்டிக் குட்டிகளை ஈனுவதும், ஈன்ற இடத்திலே அவற்றை நிர்க்கதியாய் நிராகரித்து ஓடுவதும்! இவையே தெய்வீக நங்கையர் பொற்போ? அன்றேல் கற்போ?

**மேனகா:** மேனகாவின் வாயால் இந்த உண்மையை அறிந்து கொள்ளும் விஸ்வாமித்திரரே! தெய்வ மங்கையரும் அனலிடைப் பிறந்தாரும் ஒத்த அம்ஸத்தினர். அவர்தம் கற்புக்கு மாசும் இல்லை; மறுவும் இல்லை. கலவியினாலும், அதன் விளைவுகளினாலும் அவர்களுடைய கன்னிமை அழிவதே இல்லை... ஒரு கேள்விக்கான ஞான விளக்கத்தை மட்டும் தங்களிடம் எதிர்பார்க்கலாமா?

**விஸ்வாமித்திரன்:** மாட்டித் தொலைத்தேனே! ...ம்... கேட்டுத் தொலை!



படிப்பகம்

www.padippakam.com



**மேனகா:** அதி வலிமை மிக்கது, எது?

**விஸ்வாமித்திரன்:** அது கூடத் தெரியாதா? இந்த விஸ்வாமித்திரனின் தவ வலிமை!

**மேனகா:** காதலிலே பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் சினம் அதைவிட வலிமை மிக்கது என்பதை இப் பொழுதாவது அறிந்து கொள்ளுங்கள்.

**விஸ்வாமித்திரன்:** [தற்கூற்றுப் பாணியில்]இப்பொழுது இவள் மிஞ்சத் தொடங்கிவிட்டாள்.

**மேனகா:** உம்மை அறியாமல், அதைத்தான் என்னிட மிருந்து யாசித்துப் பெற்றுக் கொண்டீர். இந்தச் சிசுமீது உமக்கு உறவு இல்லாவிட்டால், கன்னிமை அழியாத எனக்கு மட்டும் எவ்வாறு உறவு இருக்க முடியும்? (மேனகா விண்ணோக்கி எழ, அவளுடைய குரல் மட்டும் கேட்கிறது) விஸ்வாமித்திரன் தோற் றான்! இந்ரனே வென்றான்!

[விஸ்வாமித்திரன் தவ நிலையில் அமர்கின்றார். அவராலே மனத்தினை ஒருநிலைப்படுத்த இயலாது தத்தளிக்கின்றார். இடையிடையே மின்னலும் இடியும் கலந்து பயங்கரச் சூழ்நிலையை உருவாக்கு கின்றது.]

**விஸ்வாமித்திரன்:** (இந்தத் தற்கூற்றின் போது, நிலைத்து விடப்பட்ட ஒரு மின்னல் கீற்று படிப்படி யாகச் சுருங்கி விஸ்வாமித்திரனின் முகத்தில் நிலைக்கின்றது.)

ஹே, இந்ர! மேனகாவின் சாகசத்தால் என்னை வெற்றி கொண்டதாக எக்காளம் கொள்ளாதே! விஸ்வாமித்திரன் தோற்கமாட்டான். தோற்கவும் முடியாது. வசிஷ்டரே தன் வாயால் என்னைப் பிரம்ம ரிஷி என்றழைக்கும் பக்குவன் யான்... என் தவத்தின் கீர்த்தியை...இந்திராணியின் தயவிலே,

படிப்பகம்

www.padippakam.com



நீ பதவியில் ஒட்டிக் கொண்டிருந்தால், இந்ர, நீ இருந்து பார்!

[முன்மேடையைப் பின்மேடையிலிருந்து பிரிக்கும் வகையில அமைக்கப்பட்ட கரந்துவரல் எழினி விஸ்வாமித்திரனையும், பின் புலத்தையும் மறைத்தல். நடன், விடன், நடி ஆகியோர் முன்மேடையில், எழினிக்கும் முன்னால் தோன்றுதல். இந்த உபாயத்தினால், எழினிக்குப் பின்னால், காட்சி மாற்றங்களை அமைக்கும் பணி இலகு படுத்தப் படும்.]

[நடன், விடன், நடி ஆகியோர் Narrators ஆக மட்டுமின்றி, Commentators ஸாகவும் இந்நாடகத்திலே செயற்படுவர். இந்தப் பகுதியிலே வரும் உரையாடல் 'தாள லய' மோடியிலே அமைக்கப் பட்டுள்ளது.]

**நடன்:** தூ தூ தூதூ துண்டற உதவாது.

**விடன்:** தூஷணம் தூஷணம் படுபடு தூஷணம்

**நடி:** (வந்து கொண்டே.)

என்ன இது சொல்லுறீங்க
எனக் கொண்டும் விளங்கவில்லை.

**நடன்:** இந்துநாடக மரபாம்
இதுலை என்ன இருக்குது
ஆட்டக்காரி மேனகாவை
தாடிக்காரன் கற்பழிக்க
முற்போக்கு இதிலை எங்கை
முளைதானும் விட்டிருக்கோ

**விடன்:** தேவடியாள் இல்லை அவள்
தேவலோக பெண் அல்லோ

www.padippakam.com



நடன்: உதெல்லாம் பேய்க் கதை
உண்மையிலே கண்டி ரிப்போ
அந்தந்த இடத்திலை தான்
அவை அவைக்கு மதிப்பு
எவர் செய்தாலும்
இது படு கேவலம்.

விடன்: நடந்தது நடந்து போச்சு

நடன்: மேனகா ஒரு மொக்குப் பிள்ளை.
கெஞ்சிக் கேட்டு வேலை இல்லை.
கெட்டித் தனமாய் செய்ய வேணும்.

விடன்: கெட்டித் தனம் வாழ்க வாழ்க
கெட்டித் தனமாய் எப்பிடிச் செய்யலாம்?

நடன்: தாடிக்காரனை கோட்டுக் கிழுத்து
கற்பழிப்பு கேஸைப் போட்டு
கச்சிதமாய் முடிச்சு இருந்தால்
கெட்டித்தனமாய் இருக்கு மெல்லே.

விடன்: ஐடியா ஐடியா இதுவல்லோ ஐடியா
கோட்டிலை நடக்கும் குறுக்கு விசாரணை
கேள்விகள் பதில்கள் கேட்டு மகிழலாம்
தமிழ்ப் படம் பாத்த மாதிரி இருக்கும்.

நடி: சொல்லும் செயலும் அபத்தம் அபத்தம்
சும்மா விமர்சனம் செய்வது மோசம்
கருத்தைக் கருத்தால் எதிர்ப்பதை விட்டு
ஆட்களை எதிர்ப்பது அபத்தம் அபத்தம்

விடன்: ஆமாம் ஆமாம் அதுவும் சரிதான்

நடன்: கற்பழிப்பு இங்கை நடந்து முடிஞ்சிருக்கு

விடன்: நடந்தது ஒரு கற்பழிப்புதான்

நடி: ஆர் ஆரை Rape செய்தது
அதை முதலில் முடிவு செய்வோம்.

www.padippakam.com



**விடன்:** இது என்ன புதுக்கதை
இப்பிடியும் ஒரு கேள்வியே

**நடி:** அவமானம் செய்ய வேண்டாம்
அவமானம் செய்ய வேண்டாம்.

ஆண்களைப் போல பெண்களும்
ஆட்சியே செய்யலாம்
இதை இப்போ செய்து காட்டி
பெண் பிரதமரை கண்ட காலத்தில்
Rape செய்யும் உரிமை
ஆண்களுக்கு மட்டுமோ
பெண்களுக்கும் ஏலும்
பேய்க்கதை வேண்டாம்.

**நடன்:** கொஞ்சம் பொறும் கொஞ்சம் பொறும்
கோபங்கள் இப்ப வேண்டாம்
வாதத்திற்காக அதை
வைப்போம் ஆகுமென்று

**நடி:** சிங்கம் புலி கரடி வாழும்
காட்டில் அவனுக் கென்ன வேலை
தாடிக்காரன் விசுவாமித்திரன்
பெண்ணுக்குப் பயந்த பிரமச்சாரி
பெண்ணிற்கு தப்பப் பெரும் பயணம்
பண்ணி வந்து பதுங்கி வாழும்
தாடிக்காரன் விசுவாமித்திரன்
இந்த பயம் என்ன பயம்
இதுதான் மனோ தத்துவமென்பது.

**விடன்:** தத்துவங்கள் சொல்லி எம்மை
பித்தர்கள் ஆக்கப் பார்க்கிறாய்நீ

**நடி:** இந்ரன் போய் அகலிகை யிட்டை
அங்கம் எல்லாம் ஏதோ ஒட்டி
பங்கப்பட்ட கதையை எல்லாம்
எங்களுக்கு ஆர் சொன்னது

www.padippakam.com



எல்லாம் இந்த தாடிக்காரன்
அவிட்டு விட்ட கதைகள் தானே
இதிலை இருந்து என்ன தெரியுது
இவனுக்கு எப்பவும் இந்தப் பயம்
தொத்திக் கொண்டு தொடருது தொடருது
இந்தப் பயம் என்ன பயம்
இதுதான் மனோ தத்துவமென்பது
அதைத்தான் விடுங்கோ
ஆர் ஆரை தேடிப் போனது
தாடி முனிவனை தேடிப் போனது
ஆடிக் குலுக்கிற மேனகா தானே

**விடன்:** சரியாய் சொன்னாய் சரியாய் சொன்னாய்
மேனி மினுக்கி மேனகாதான்
மோகத்திலை தேடிப் போனாள்
அதுதான் அவள் செய்துவிட்ட
ஆனானப்பட்ட தப்பு

**நடன்:** அவளின் தப்பு அது இல்லை
அது எனக்கு ஏற்பு இல்லை
நீரோடையில் குளிப்பதற்கு
ஆருக்கும் உரிமை யுண்டு
ஆண்கள் தான் குளிக்கலாம்
அப்பிடி ஒன்றும் சட்டம் இல்லை

**விடன்:** சரியாய் சொன்னாய் சரியாய் சொன்னாய்
நீரோடையில் நீந்திக் குளிக்க
ஆர் அனுமதி வாங்க வேண்டும்?

**நடி:** நிர்வாண மாயும் கூட
நீரோடையில் குளிக்கலாமோ?

**நடன்:** ஆக்கள் உள்ள இடமாயிருந்தால்
ஆடையின்றிக் குளித்தல் தவறு
ஆக்கள் இல்லா இடத்தில்கூட

www.padippakam.com



ஆடையாலை போர்த்திக்கட்டி
நீந்திக் குளிக்க வேண்டு மெண்டு
நீங்கள் சொல்ல வாறீகளோ

நடி: இப்ப விஷயம் இலகுவாய் விளங்குது
இதிலை ஒரு Rape உம் இல்லை

விடன்: புதுக் குழப்பம் புதுக் குழப்பம்
பழைய குழப்பம் தீர முந்தி
புதுக் குழப்பம் பிறக்கிறது

நடன்: இது ஒரு சிந்தனைக் குழப்பம்
இதிலை இருக்கு முரண்பாடு
இதை நாங்கள் எப்படிச் சொல்லலாம்
திரிபு வாதம் என்றா சொல்லலாம்

நடி: அவசரப் பட்டு நீங்கள்
அதிகமாய் கதைக்க வேண்டாம்

விடன்: நிதானமாய் இருப்போம் நாங்கள்

நடி: பிரிக்க முடியா சிறிய பகுதி
அணுவென்று அன்று பலர்
அஞ்ஞானமாய் நம்பியிருக்க
விஞ்ஞானி ஒருவன் வந்து
விதி ஒன்று சொல்லி வைத்தான்
ஐன்ஸ்டீன் என்ற அந்த முனிவன்
அவிட்டுவிட்ட சமன்பா டென்ன?

விடன்: அது எனக்கு நல்லாத் தெரியும்

நடன்: சும்மா நீர் மழுப்ப வேண்டாம்
சுருக்காய் அதை சொல்லும் பார்ப்போம்.

நடி: E சமன் MC வர்க்கம்
இதுதான் அந்தச் சமன்பாடு
இதை நாங்கள் திரிபு வாதம்
என்று சொன்னால் சிரிக்காரோ

www.padippakam.com



அறிவும் அநுபவமும்
அடுத்தடுத்து வளர்ந்து போகும்
அதை உங்கள் கோஷத் தாலை
அடக்கி விட முடியா தல்லோ

**நடன்:** E சமன் MC வர்க்கம்
இதனால் Rape நடக்க வில்லை
என்று நிரூபிப்பதற்கு
எப்படி உம்மால் முடியும் சொல்லும்

**நடி:** சக்தி மனிதன் படைப்பில்லை
காதல் ஒரு மகா சக்தி
சக்தியை மனிதன் அழிக்க முடியுமா?
காதலும் மனிதன் படைப்பல்ல
ஆதலால் அதனை அழிக்க முடியாது.

**நடன்:** புரியாத விஷயங்கள் பேசிக் குழப்புகிறாய்
குழப்பத்தின் மத்தியில் குசாலாய் தப்புகிறாய்

**நடி:** புரிவதற்குக் கொஞ்சம் புத்தி வேண்டும்

**விடன்:** புத்தி வாழ்க சக்தி வாழ்க
புத்திசாலித் தனமும் வாழ்க

**நடி:** காதலில் இருவரும் இணைந்து விட்டதால் கந்தர்வ மணமொன்று நடந்து இருக்கு. இருவரும் இணங்கியே இதனைச் செய்யலாம்

**நடன்:** ஞானம் ஒன்று பிறக்கின்றது
எனக்கும் கொஞ்சம் விளங்கின்றது

**விடன்:** அச்சா அச்சா அச்சா அச்சா
அவிட்டு விடும் அதையும் சுறுக்காய்

**நடன்:** மேனகா is deserted

**விடன்:** எப்பிடி எண்டால்

www.padippakam.com



**நடன்:** நம்பிக்கை மோசடி நடந்திருக்கு
இங்கிலீசிலை சொன்னால் breach of trust

**விடன்:** அச்சா அச்சா அது சரிதான்

**நடன்:** நம்பிக்கை மோசடி வழக்கொன்றை
கோட்டிலை தாக்கல் செய்திருக்கலாம்

**விடன்:** சட்ட உத்தி சரியான முற்போக்கு

**நடி:** ஆனால் அதிலையும் பிரச்சினை இருக்கு
ஆருக் கெதிராய் ஆர் மோசடி
அதற்கு முதலில் தீர்வு வேணும்

**விடன்:** குழப்புறாய் குழப்புறாய் நல்லாக் குழப்புறாய்

**நடன்:** எல்லாம் இங்கை குழப்ப மயம்
இதிலை ஒன்றும் தெளிவு இல்லை

**நடி:** குழப்பத்தின் முடிவில் என்ன வரும்
குழப்பம் தீரத் தெளிவு பிறக்கும்
ஆணும் பெண்ணும் ஒன்றாய்க் கூடும்
அவசியம் என்ன காரணம் என்ன
கலவி போக சமத்துவம் பேண
காதல் கொண்டார் என்றால் என்ன?

**விடன்:** போகச் சமத்துவம் புதிய விளக்கம்
அப்பிடி இருக்கும் அதுதான் நோக்கம்

**நடி:** கலவியில் இன்பம் காண்பதே நோக்கம்
பிள்ளை பெற்று பின்னர் வந்து
பிள்ளை பார்க்கும் வழியைச் சொல்லு
இப்படிக் கேட்டால் நம்பிக்கை மோசடி
இல்லையா சொல்லும் இல்லையா சொல்லும்

**நடன்:** காதல் என்பது புனிதமானது
ஆணும் பெண்ணும் கலத்தலால் ஆனது
அந்தரங்கத்தில் அமைதல் வேண்டும்

www.padippakam.com



இந்தச் சுகித்தல் இன்னும் இன்னும்
இறப்பு மட்டும் நீளுதல் வேண்டும்

கடி: அது பிழை அது பிழை
ஆரம்பமே பிழை பிழை

கடன்: விதண்டாவாதம் வேண்டாம்
வீணாப் பிழை காண வேண்டாம்

விடன்: விதண்டா வாதம் ஒழிக
விதண்டா வாதம் ஒழிக

கடி: ஆணும் பெண்ணும் சேர்ந்தால் தானோ
அந்தக் காதல் இன்பம் கிடைக்கும்
இந்தக் கால நிகழ்வைக் கதையும்
இங்கு எல்லாம் சாத்திய மாகும்
ஆண்கள் இருவர் சேர்ந்து கொண்டே
பெண்கள் இருவர் சேர்ந்து கொண்டே
பெறலாம் இன்பம் பெறலாம் இப்போ

கடன்: அபத்தம் அபத்தம் அசிங்கமான அபத்தம்

சூத்திரதாரன்: [பாரதி பாடலைப் பாடிக் கொண்டே வரல்]

**ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே**
**அஃதன்றோ இவ்வுலகத் தலைமையின்பம்**
**காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்**
**கவலைபோம் அதனால் மரணம் பொய்யாம்**

கடன்: காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்.

சூத்திரதாரன்: ...அதனால் மரணம் பொய்யாம்
கேளுங்கள்—
மேனகாவும் விஸ்வாமித்திரனும்
மோகனக் கலவி பயின்றார்கள்
கானகத்திலே பிறந்தாள் சகுந்தலை—இந்த
கானகத்திலே அவளுக்கும் துஷ்யந்தனுக்கும்

www.padippakam.com



காவியக் காதல் அரும்பும்—அவர்கள்
கலவியின் அறுவடை பரதனாவன்
பரதனின் ஆட்சியை பார் போற்றும்
பரத சந்ததி வாழும் நாடு பரதநாடு என வழங்கும்
பரத கண்டம் நின்று நிலவும் மட்டும்
இங்கு நடந்தேறிய காதல்
காலத்தை வென்று நின்று பேசப்படுமல்லவா?

**விடன்:** பேசப்படலாம்.

**சூத்திரதாரன்:** இன்னும் ஒன்று. கலவியிலே சமத்துவ சமதர்மம் விடிந்ததா? இதுவே கேள்வி.

**விடன்:** விடிந்ததா? இதுவே கேள்வி.

**சூத்திரதாரன்:** தர்மத்திற்கான விசாரணை தொடர்ந்து நடக்கும்.

**விடன்:** ஆமாம் தொடர வேண்டும்.

**நடி:** காதல் யோகமாகவும் இருக்கலாம். போகமாகவும் இருக்கலாம்.

**சூத்திரதாரன்:** நீண்ட விளக்கம் நாட்டி மகிழ்ந்தீர்
கோட்டை விட்டீர் கருமைய விடயம்

**நடி:** முக்கிய விடயத்தைக் கோட்டை விட்டு உணர்ச்சி வசப்பட்டுக் கோஷம் போடுவதற்கு என்றே பிறந்தது நமது தமிழ்ச்சாதி.

**விடன்:** தமிழரைக் குறைகூறாதே. தமிழை மாசுபடுத்தாதே! தமிழ் துரோகிகள்... (மௌனம்) இவ்வளவு நேரமாக நான் எல்லோருக்குமாகக் கோஷம் போட்டேன் பரவாயில்லை... தமிழ்த் துரோகிகள் ஒழிக!

**சூத்திரதாரன்:** கோஷம் முக்கியமில்லை. விஷயத்துக்கு வருவோம். விஸ்வாமித்திரனும் மேனகாவும் தோன்றிய உறுப்பு இந்து நாடகமரபில் 'அர்ப்பாயம்' என

www.padippakam.com



வழங்கும். நீங்கள் அதனை *இல் (நாடகம் நடை பெறும் ஆண்டைக் குறிப்பிடவும்) விமர்சனஞ் செய்தாலும், அது நடந்தது திரேதாயுகம். அந்த யுகத்தினை அடுத்துப் பிறந்தது துவாபரயுகம். தர்மத்திற்கான விசாரணையாக நாம் இங்கு அடுத்து அமைக்கும் உறுப்பு இந்து நாடக மரபிலே வியாயோகம் என வழங்கும். வியாயோகத்தின் நிகழ்வுகள் துவாபர யுகத்தில் நடப்பன.

**விடன்:** ஓகோ, இரண்டுக்கும் இடையில் கால வித்தி யாசம் உண்டு.

**சூத்திரதாரன்:** ஆமாம். இடையில் காலக்கூறின் இடை வெளி ஒன்று தேவை. இங்குள்ள நாடக ஆர்வலர் இதனை தமது இடைவேளையாகவும் அநுபவிக்க லாம். **Now you may enjoy a ten minutes Intermisson**

[மேடையின் முகப்பாக அமைந்த பொருமுக எழினி பொருந்துதல்,]

---

* மேடைறேறும் ஆண்டினை வசதியாகச் சேர்க்கவும்.

படிப்பகம்

www.padippakam.com

# 7

## வியாயோகம்

[பொருமுக எழினி விலக, மேடையிலே மிக ஊமை யான ஒளி. புஜங்க லளித நடனத்தின் இறுதிக் கட்டத்திற்கான தாளம் இசைக்கப் படுகின்றது. நடுமேடையிலே விழும் ஒளிக்கற்றையிலே பாண்டு கம்பள ஸைலாஸனத்தின் ஒரு பகுதி காணுநருக் குத் தெரிகின்றது.]

**சூத்திரதாரன்:** திரேதாயுகம் அழிந்தது. துவாபர யுகம் பிறந்தது. பன்னிரு ஆண்டுகள் கழிந்தன. திரேதாயுகம் என்ற யுக புருஷன் இறந்ததும், மக்கள் தங்கள் இஷ்டம் போல புழுத்துப் பெருகி னார்கள். இந்ரன் மழையைப் பொய்ப்பித்தான். (அச்சத்தினை ஊட்டும் ஒலி இடையிட்டுப் பின்னணி யில் ஒலித்துக் கொண்டிருக்க) அந்தனர் ஓதல்- ஓதுவித்தல்- வேட்டல்- வேட்பித்தல்- ஈதல் ஆகிய நித்தியக் கருமங்களை மறந்தனர். ஈதல்- உல கோம்பல்- படை பயிற்றல் ஆகிய கருமங்களை அரசர் கைவிட்டனர். பொருளிட்டல்- ஈதல்- பசு காத்தல்-ஏர் உழுதல் ஆகிய தமது குல ஆசாரங்கள் எல்லாவற்றிலும் இருந்து வைசியர் ஒதுங்கினர். பூலோகத்திலே மிடிமை நெடிதுயர்ந்தது.

www.padippakam.com



[பூலோகத்திலிருந்து மரண ஒலிகள் இணைந்து பிணைந்து மேலெழுந்து வருகின்றன. கீழே குனிந்து பூலோகத்தின் அவலக் காட்சிகளை பார்த்து இந்ரன் மகிழ்கின்றான். இவன் இடப் பக்கமாகத் திரும்ப, மற்றத் தலை வடப் பக்கமாகப் பார்க்கின்றது. மற்றத் தலையும் இந்ரனுடைய ஒத்த சாயல். ஓர் உடலில் இணைந்துள்ள இரட்டைத்தலைகள் இயங்குகின்றனவோ என்ற சந்தேகம் காணுநருக்கு ஏற்படும். மரண ஒலிகள் உச்ச ஸ்தாயியை நோக்கி எழ, அதே கதியில் தலைகள் ஆடுகின்றன. இந்ரன் ஸ்தம்பித நிலை அடைய, மற்றைய உருவம் அதிலிருந்து பிரிந்து, தனி உருவமாக நகர்ந்து நடுமேடைக்கு வருகின்றது. அந்த இரண்டு உருவங்களும் ஒரே சாயலிலே தோன்றுகின்றன. இந்த இரண்டாம் உருவம் நீதிதேவனுடையது. நீதிதேவன் மனச்சாட்சியைப் பிரதிபலிக்கின்றான் என்பதைச் சுட்டும் உபாயமே இந்த யுக்தி.]

**நீதிதேவன்:** மகபதி... இந்ர...!

**இந்ரன்:** யார்?... இந்த குரலை எங்கேயோ கேட்டதாக ஞாபகம். கேட்டுப் பழகி, மறந்து போன ஒரு குரல். பல்லாண்டுகளுக்கு முன்னர் கேட்டதாக...

**நீதிதேவன்:** இந்ர! இங்கே திரும்பு. என்னை பார்.

**இந்ரன்:** நீயா? பார்த்த முகமாக இருக்கின்றதே... ஆனாலும்...

**நீதிதேவன்:** உன் மனச்சாட்சி துலக்கமாக இருந்தால், என் உருவம் துலக்கமாகத் தெரியும். அவ்வளவுதான். இந்த பன்னிரண்டு ஆண்டுகளும் நீ உன் மனச் சாட்சியைத் தொட்டுப் பார்த்ததேயில்லை. எனவே, என்முகங்கூட உன் ஞாபகத்திலிருந்து மறைந்திருக்கின்றது. இப்பொழுதாவது உன்மனச்

www.padippakam.com



சாட்சியிலே மடிந்திருக்கும் தூசைத் துடைத்துப் பார். அப்பொழுது தெரியும்.

**இந்ரன்:** மனசாட்சி...! ஓ, நீதிதேவனா?

**நீதிதேவன்:** ஆம். ஒவ்வொருவருடைய மனச்சாட்சியிலும் கரைந்துறையும் நீதிதேவன் நான்தான்.

**இந்ரன்:** ஓகோ!... ஏன் என்னைப் பார்க்கும் கரிசனை இன்று விடிந்திருக்கிறது?

**நீதிதேவன்:** இந்ர! அது அதற்கு அந்தந்த வேளை. இன்று உன்னைச் சந்திக்க இந்த வேளை வந்து பொருந்தியது.

**இந்ரன்:** வேளை?

[பாண்டு கம்பள ஸைலாஸனத்திற்கு வலப்புறமாக ஒரு நுழைவாயிலும், அதனைப் பாதி மறைப்பது போன்று தொங்கும் மெல்லிய திரைச்சேலையும் தெரிகின்றது. சதங்கை ஒலியைத் தொடர்ந்து திரைச்சேலையின் ஊடாக மேனகாவின் உருவம் மங்கலாகத் தெரிகின்றது. நீதிதேவனுக்குப் பின்னால் அந்த உருவம் தெரிவதினால், அதனை நீதிதேவன் கவனிக்கவில்லை.]

**மேனகா:** தேவந்ர! பிரபோ...

**நீதிதேவன்:** ஒரு பெண்ணின் குரல்...

**இந்ரன்:** உன் ஊகம் சரி. அது மேனகாவின் குரல்.

**நீதிதேவன்:** இந்ர! இங்கு நான் இருக்கும் வரை அவளை—அந்த மேனகாவை—உள்ளே அனுமதிக்க வேண்டாம்.

**இந்ரன்:** நீதிதேவா! அறிவு தரும் மகிழ்ச்சியிலும் பார்க்க அழகு மேலானது. இரசனையினாலே பண்பட்ட உள்ளங்கள் அழகினை ஆண்டவனின் சந்நிதானத்திலே வைத்துப் பூஜிக்கின்றன. அழகு

www.padippakam.com



தான் வாழ்க்கைக்குப் பூரணத்துவமான அர்த்தத்தினைச் சேர்க்கின்றது. கேட்டீர், தேன் குரலை! அந்தத் தேன் குரலாளின் பட்டுத்தளிர் மேனியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எழவில்லையா? இந்ர சபையின் ஆடற்கணிகையர் என் போகத்திற்கு மட்டுமுரியவரல்லர்.

**நீதிதேவன்:** பெண்களைக் கண்டாலே எனக்கு ஒரு வகைக் கூச்சம்...

**இந்ரன்:** மேனகா பெண்ணா? அவள் விஸ்வாமித்திரனுடைய தவத்தைக் குலைத்தவள். தேவ கணிகையர் விசேட படைப்புகள். அவர்களை நிராகரிப்பவர்கள் ஆண்டவனுடைய படைப்பினையே நிராகரிக்கின்றார்கள்.

**மேனகா:** மகபதி! என் சதங்கை ஒலி காததூரத்திலே கேட்கும் பொழுதே 'மானே மேனகா, தேன் வதையே! ஓடி வந்து என்னை அணைத்துக் கொள். தேன் சாறிலே ஊறி என் இளமை அமரத்துவம் பெறட்டும்...' என்று மறுகிக் குழைவீர்களே!

**நீதிதேவன்:** வாசவா! அவளை உள்ளே வர அனுமதிக்க வேண்டாம். என்மீது கருணை வை. முக்கிய பணியிலே வந்திருக்கின்றேன்.

**இந்ரன்:** மேனகா நான் ராஜ்ய பரிபாலன பணியிலே ஈடுபட்டிருக்கின்றேன். நீ இன்னொரு சமயம் வா!

**மேனகா:** ராஜ்ய பரிபாலனம்! இன்னொரு சமயம்! என் இன்பம் என் தேகத்திற்குத் தோதுப்படும் பொழுது கிட்டவேண்டும். நீதி பரிபாலனத்திற்கும், ஞானத்திற்கும், தர்மத்திற்கும் தவணையிடலாம். காம சுகத்திற்கு தவணையிட முடியாது. இதோ நான் பூலோகத்திற்குப் போகின்றேன்.

www.padippakam.com



[ஒற்றைச் சதங்கை மேடையிலே தெறித்து பாய்கிறது. மேனகா மறைகிறாள். இந்ரனின் முகத்தில் சோக சுருதி அலையெழுப்பி மடிகிறது.]

**நீதிதேவன்:** இந்ர! உன் முகத்தில்...

**இந்ரன்:** ஒன்றுமில்லை.

**நீதிதேவன்:** மேனகா கோபித்துக் கொண்டுபோய் விட்டாள் என்ற வியாகூலமா?

**இந்ரன்:** மேனகாவின் கோபமா? நீதிதேவா, இதனை அறிந்து கொள்ளும். பெண்களின் கோபமும் மோகத்தின் ஒரு பாவமே!

**நீதிதேவன்:** பெண்களின் குணவியல்புகள் பற்றி ஆராய்வுகள் நடத்த நான் இங்கு வரவில்லை. பூலோகத்தில் வாழும் மானிடர் படும் துயரத்தைப் பார்த்து பரிதவித்து வந்திருக்கின்றேன்.

**இந்ரன்:** மானிடர் படும் துயர்! நன்றி மறந்த புல்லியர் கூட்டம். செய்நன்றி மறந்த கர்மலோக வாசிகள்! இத்தனை ஆண்டுகளும் என் தயவின்றி— என் அருட் பார்வையின் சுரப்பின்றி—எப்படி பரிதவிக்கின்றார்கள் என்பதைக் கண்குளிரப் பார்ப்போம்.

[பூலோகத்தைக் குனிந்து பார்த்து இந்ரனும், நீதிதேவனும் உறைநிலை அடைய, பூலோகத்தின் மரண ஒலிகள் எழுந்து ஓர் உச்ச ஸ்தாயியை அடைந்து கீழிறங்கும் பொழுது, அவர்கள் மீண்டும் உயிர்ப்பு நிலை அடைகின்றார்கள்.]

**இந்ரன்:** பொய் பேசுதலை நுண்கலையாய்ப் பயின்று, சுய நலத்திற்காகவே நரர் கொண்டிருக்கும் ஏமாப்புக் கொஞ்சமல்ல. திரேதாயுகம் என்ற யுக புருஷன் இறந்ததைப் பற்றிக்கூட அவர்



படிப்பகம்

www.padippakam.com



களுக்குக் கிஞ்சித்தும் கவலையில்லை. பிறந்திருக்கும் புதுயுகம் தங்களுடையது என்ற எக்காளம்! யுகபுருஷன் அவதாரம் பற்றிய நினைவுகள் மிக மிக அற்பமாகி, காமக் களிப்பே சகல சௌபாக்கியங்களும் என்ற சுவைப்பில், மானிடக் குஞ்சுகளின் எண்ணிக்கையைப் பெருக்கி, ஈதல் என்ற நல்லறத்தை மறந்து, தனக்காக மட்டுமே வாழவேண்டும் என்கிற தற்பற்று ஒவ்வொரு மனிதனையும் படாதபாடு படுத்துகிறது. சந்ததிப் பெருக்கத்தையும், நரர்களின் உள்ளங்களிலே பொங்கி வழியும் ஊழலையும் அழுக்காறையும் தாங்க இயலாது பூமித்தாய் கண்ணீர் வடித்தாள். தன்னயமான- தன்மயமான இச்சைகளினால், அவர்கள் அற நூல்களிலே கற்றவற்றை மட்டுமா மறந்தார்கள்? மறந்தார்களா? அகந்தையின் உபரி. வந்தனைக்குப் பதில் நிந்தனை. விழிகளை அகலத் திறந்து விலாசமாகப் பாரும். புத்தி இழந்த பித்த நிலையிலே அவர்கள் பூமியிலே துடித்துத் துடித்துப் புரளுகின்றார்கள்.

**நீதிதேவன்:** பார்க்கவே என் விழிகள் கூசுகின்றன. மரகதக் கம்பளம் என்றும் சீதளச் சோலை என்றும், கவிஞர்கள் வர்ணித்த சகலவும் பாலைவன பாழ்வெளியாகத் தோன்றுகின்றன. இந்ர! கங்கைவெளியில் புதிய புதுமையாக மலைத் திட்டுகள் தெரிகின்றனவே!

**இந்ரன்:** அவை மலைகளல்ல. அழிவின்...அவை மரண மேடுகள். நீர்வாழ் மச்சங்களின் அழுகிய குவியல் அதோ! மச்சங்களை உண்டு உயிர்வாழும் பக்ஷிகளின் என்பு மலை அது. புல்லை உண்டும், புலாலைத் தின்றும் உயிர் வாழும் விலங்குகளின் அழுகிய தசைக் குவியல்தான் அதற்கு அப்பாலே தெரிவது. ஒன்றைப் புசித்தே உயிர் வாழ வேண்டு

www.padippakam.com



மென்ற நியதியுள்ள பூலோகத்தில், ஓர் உயிரினத்தின் இறப்பும் ஒறுப்பும், மற்றையவற்றின் அடுக்கடுக்கான சாவுகளுக்கு வழி வகுக்கின்றன.

**நீதிதேவன்:** எனக்குத் தலை சுற்றுகிறது. இது என்ன சோதனை?

**இந்ரன்:** இந்த வினையின் கர்த்தாவாக என்னைச் சுட்ட வேண்டாம். எல்லாம் அந்த ஏகனின் லீலா விநோதங்கள். அவன் கற்பித்த சோதனைகள். அந்த சோதனைகளிலே நான்கு வர்ணத்தாரும் நலிவுற்றார்கள். தேவர்களின் பெயரால், புத்தி சாலி மனிதர்கள் சிருஷ்டித்த வர்ணாசிரம நெறி பிறழ்ந்தது. தோலின் நிறங்களையும், செய்யும் தொழில்களையும், பேசும் மொழிகளையும் வைத்து பிறப்பின் உயர்வு தாழ்வுகளைச் சாதிக்கும் அவனுக்கு இந்தச் சோதனைகளாவது புத்தி புகட்டட்டும். உயர்வு-தாழ்வு பேசிய மனிதன் இனியாவது சமத்துவ நெறி பற்றிச் சிந்திக்கட்டும். சமத்துவம் எவ்வாறு நிறுவப்படலாம் என்ற விசாரணையில் ஈடுபட அது நுழை வாயிலாக அமையட்டும். அவனுடைய மூளையிலே எவ்வித மார்க்கமுந் தோன்றாது போனால், சுடுகாட்டிலேதான் எல்லோரும் சமத்துவ நிலை அடைகின்றார்கள் என்று சுடலை ஞானமாவது பேசட்டும்.

**நீதிதேவன்:** இந்ர! அதற்காக தர்மமே நிலை தடுமாற வேண்டுமா? அந்தோ, சொல்லவே நாக்குக் கூசுகிறது. களவும்-விபசாரமும்! இவையே நித்திய நெறிகளாகப் பயிலப்படுகின்றன.

**இந்ரன்;** களவு-விபசாரம்! தனியொருவன் தன்தேவைகளுக்கும் அதிகமாகப் பொருளீட்டி அவற்றை சேமித்து வைக்கும் சொத்துச் சுதந்திரத்தையும், ஒருத்தியின் உடலைத் தான் ஒருவனே வாழ்நாள்

www.padippakam.com



பூராவும் சுவைக்க வேண்டும் என்ற கற்பு நெறியையும் தர்மங்களென யார் வகுத்தான்? யார் விதித்தான்? சுயநலத்தில் எழுந்த இந்த வரன்முறைகளே தர்மம் என்றால், அதன் உடைவுகள் ஏற்படுத்தும் புதிய நெறிகளும் தர்மங்களே! எதிர்த் துருவமான உண்மைகள், அகம்-புறம், இருள்-ஒளி என்பவற்றைப் போல!

**நீதிதேவன்:** தர்மத்திற்கு இந்ரன் அளிக்கும் விளக்கங்கள்...

**இந்ரன்:** விளக்கமல்ல. தர்க்கரீதியாகப் பேசுவோம். அதர்மம் என்ற நெறியும் இருப்பதற்றானே தர்மம் என்று வகுத்துப் பேச வேண்டியிருக்கிறது. எனவே, தர்மம் உள்ளளவும் அதர்மம் வாழும். இன்னொரு வகையாகச் சொல்வதானால், அதர்மத்தின் பலத்திலேதான் தர்மம் உயிர் வாழ்கிறது. அதோ... அதோ... என் விரல் சுட்டும் இடத்தைப் பாரும்.

**நீதிதேவன்:** மகரிஷி விஸ்வாமித்திரனைப் போலல்லவா தெரிகிறது.

**இந்ரன்:** போல-ஒப்ப-அன்ன! தன்னை வசிட்ட முனிவரே பிரம்மரிஷி என்றழைக்கவேண்டும் என்று அகம்பாவம் பேசும் அதே விஸ்வாமித்திரன்தான்! இந்த பாண்டுகம்பள ஸைலாஸனத்திலிருந்து வானோர் கோனாகக் கோலோச்சும் இந்த இந்ரனை, ''பணிய வைப்பேன், தண்டனிட வைப்பேன்!'' என்று வீறு பேசி ஒற்றைக் காலிலே தவமியற்றிய அதே விஸ்வாமித்திரன்தான்! இன்று இரண்டு கால்களின் விரைவுகூடத் தோதுப்படாத பறதியிலே ஓடுகிறான். பசியிலே கும்பி தெறிக்க ஓடுகிறான்...இந்த அர்த்த ராத்திரியில் எங்கே ஓடுகிறான்? உலக தர்மங்களின் ஆணிவேர்

www.padippakam.com



என்றும், உலக இயக்கங்களின் தவ ஊற்று என்றும் பெருமை பேசியவனின் மமதை அடங்கியதா?

**நீதிதேவன்:** முனிபுங்கவனைத் தடுத்தாட் கொள்ளுதல் வேண்டும்.

**இந்ரன்:** ஏகன் கற்பிக்கும் நியதிகள். அவற்றைத் தடுத்தல் ஆகுமா?

**நீதிதேவன்:** எப்படி உன்னுடைய மனட்சாட்சியாக நான் இருக்கின்றேனோ, அப்படியே விஸ்வாமித்திரனின் மனட்சாட்சியாகவும் நான் இருக்கின்றேன். [நீதிதேவனின் உருவம் மறைதல். விட்புலக் கூற்றாக] எப்படியும் இந்த இழி செயலைத் தடுத்தே ஆகவேண்டும்.

**இந்ரன்:** (ஏமாப்புடன் சிரித்தவாறு) விஸ்வாமித்திரா! பசியிலே மந்தித்துள்ள உன் செவிகளிலே என் வார்த்தைகள் விழுகின்றனவா? ஏதோ சூளுரைத்தாயே! உன்னை கண்கொட்டாமற் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். மேக ராஜனே, என் ஊர்தியே! இங்கு உடனே வந்து சேர்!

[கரந்துவர எழினி விழல். நடன், விடன், நடி ஆகியோர் அந்த எழினிக்கு முன்னால் தோன்றுதல்.]

**விடன்:** தோலின் நிறங்களையும், செய்யும் தொழில்களையும், பேசும் மொழிகளையும் வைத்து பிறப்பின் உயர்வு தாழ்வுகளைச் சாதிக்கும் மனிதனுக்கு இந்தப் பசியாவது புத்தி புகட்டட்டும். பசி வாழ்க!

**நடி:** உயர்வு தாழ்வு பேசிய மனிதன் இனியாவது சமத்துவ நெறி பற்றிச் சிந்திக்கட்டும்.

**விடன்:** பசி வாழ்க!

**நடி:** சமத்துவம் எவ்வாறு நிறுவப்படலாம் என்ற விசாரணையில் ஈடுபடட்டும்.

www.padippakam.com



**விடன்:** ''அவனுடைய மூளையிலே எவ்வித மார்க்கமும் தோன்றாது போனால், சுடுகாட்டிலே தான் எல்லோரும் சமத்துவ நிலை அடைகிறார்கள் என்று சுடலை ஞானமாவது பேசட்டும்'' என்று இந்ரன் 'டயலாக்' பேசிய இடத்தில் எனக்குச் செருப்பால அடிச்சமாதிரி இருந்தது.

**நடன்:** நாங்கள் மனிதர்கள். சுடலை ஞானம் பேசாது, சமத்துவத்திற்கான மார்க்கம் ஒன்றினைக் கண்டு பிடிப்போம்.

**விடன்:** ஆமாம் கண்டு பிடிப்போம். மார்க்கத்தைக் கண்டு பிடிப்போம்.

**நடி:** இப்பொழுதுதான் நமது சிந்தனையில் சூடு பிடித்திருக்கிறது.

**விடன்:** ஆற அமர சிந்திப்போம்.

[நடன்-விடன்-நடி ஆகிய மூவரும் மேடையின் இடப்புறமாக மறைந்து மீண்டும் கொடிகள் தாங்கி ஊர்கோலஞ் செல்லும் அமைப்பிலே தோன்றுகிறார்கள். நடன் பச்சைக்கொடி தாங்கியிருக்கின்றான். அந்த பச்சைக் கொடியிலே, மஞ்சள் நிறத்திலே அரிவாள்-சுத்தியல் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது, அத்துடன் அதன் மூலையில் நான்கு மூலை நட்சத்திரம் ஒன்றும் பொறிக்கப்பட்டிருக்கிறது. விடன் நீலக்கொடி ஒன்றைத் தாங்கியிருக்கின்றான். அதிலே அரிவாள் சுத்தியல் சின்னம் சிவப்பு நிறத்திலே பொறிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் அதன் மூலையிலே ஐந்து மூலை நட்சத்திரம்பொறிக்கப்பட்டிருக்கிறது. நடி சிவப்பு நிறக் கொடி தாங்கியிருக்கின்றாள். அதிலே அரிவாள்- சுத்தியல் சின்னம் வெள்ளை நிறத்திலே பொறிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் அதன் மூலையில் ஆறு மூலை நட்சத்திரம் ஒன்று பொறிக்கப்-

www.padippakam.com



பட்டிருக்கிறது. பின்னணியிலே பலர் சேர்ந்து பாடுவது போல பின்வரும் பாடல் ஒலித்துக் கொண்டிருக்கிறது...]

**பாடல்:**

பட்டி னிக்கொ டுஞ்சி றைக்குள்
பதறு கின்ற மனிதர் காள்
பாரின் மீது கடைய ராக்கப்
பட்டி ருக்கும் தோழர் காள்
கட்டு மீறித் தோள்கள் தட்டி
கடமை வீறு கொண்டு ளோம்
கை விலங்கு நாம் தகர்க்க
கை பிடித்து நிற்கி றோம்
ஒற்று மைப்பட் டணி திரண்டு
ஓர் கொடிக்கீழ் சேரணும்
ஒப்பில் சர்வ தேசி யத்தை
உணர்த்து கின்ற ஓர் கொடி
சுத்தி யல்கூர் அரிவாள் கொண்ட
தூய்மை யான செங் கொடி
அக்கொடியை ஏந்தி நின்று
அணி திரண்டு செல்லுவோம்
திக்கு வென்று சோஷலிசம்
சுடர் விரிக்கும் அணி யிலே

**நடி:** நிறுத்துங்கள்.

**விடன்:** முடியாட்டா நிறுத்தத்தான் வேண்டும்.

**நடி:** கொடியை பிடிச்சு, நாயாய் அலைஞ்சு, கழுதை யாய் கத்தினதுதான் மிச்சம்.

**விடன்:** ஆமாம். அலையிறதிலும், கத்துறதிலும் வேலையில்லை.

**நடன்:** வெடாக் நே...வேலையில்லை...

**விடன்:** அதாவது...

www.padippakam.com



**கடன்:** துப்பாக்கியின் வயிற்றிலிருந்துதான் அரசியல் அதிகாரம் வளருகின்றது.

**கடி:** இந்ரனின் டயலாக் ஏற்றின ஆடு...

**கடன்:** இல்லை. அப்பன் மாஸேதுங் கற்பித்துத்தந்துள்ள பாடம்.

**விடன்:** அப்பனே முருகா!

**கடி:** இப்பொழுதுள்ள குழப்பம் போதும். இடையில் இங்கு முருகனையும் கூப்பிட்டு எடுத்தா...

**விடன்:** ஆமா, இப்ப முருகனிலும் வேலையில்லை... முருகன் வேலாயுதத்தை ஆயுதமாக எடுக்க, மாஸேதுங்கினுடைய ஆட்கள் துப்பாக்கியாலே சுட்டுத் தொலைச்சுப் போடுவாங்கள்!

**கடன்:** செஞ்சூரியன் எழுவதும் கிழக்கிலே, மாஸேதுங் தோன்றியதும் கிழக்கிலே...

**விடன்:** கிழக்கு வாழ்க!

**கடன்:** மண்ணாங்கட்டி! வாழவேண்டியவர்கள் நாங்கள்.

**விடன்:** ஆமாம். முதலிலே நாங்கள் வாழ வேண்டும்.

**கடன்:** நாம் வாழ வேண்டுமானால், நாம் ஏதாவது செஞ்சுதான் ஆக வேண்டும்.

**கடி:** நாம் எதற்காக வாழ வேண்டும்?

**கடன்:** வாழ்ந்தாற்றான் சாதனைகள் செய்யலாம்.

**விடன்:** வாழ்றது என்றால் என்ன?

**கடன்:** பிறப்பது, உண்பது, குடிப்பது, வளர்வது, படிப்பது, உழைப்பது, குடும்பத்தை நடத்துவது, நாட்டின் நலனுக்காகப் பாடுபடுவது, விளையாடுவது, கலை- இலக்கியம் நயப்பது, உறங்குவது, விழிப்பது, அழுவது, சிரிப்பது, எல்லாம் வாழ்க்கையின் அம்சங்களே!

**கடி:** பேலுறது- பெய்யிறது, அடைக்கிறது, உடைக்கிறது எல்லாம் சேர்ந்ததுதான் வாழ்க்கை! இந்தக்

www.padippakam.com



கிரியைகள் தானே தினமும்-நிதமும்! ஒரு மாற்றத் திற்கு என்றாலும் செத்திட்டா நல்லது.

**நடன்:** ஒருக்காச் செத்துட்டா, மறுகா பிழைச்சுக்க முடியாது. அதனாலே ஏதாவது சாதனை செய்ய லாம் என்கிற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டே இருக்கணும்.

**நடி:** எத்தனை காலத்திற்கு வாழ்வோம் என்பது நிச்சய மில்லை. ஆனால், எப்படியாவது செத்துப் போவோம் என்பது நிச்சயம்.

**நடன்:** இது சுடலை ஞானம்.

**விடன்:** சுடலை ஞானம் ஒழிக!

**நடன்:** சாவு மகா கேவலம்.

**விடன்:** சாவுஒழிக!

**நடி:** சாவு அப்படியொன்றும் கேவலமானதல்ல.

**நடன்:** சாவின் புகழ் பாடுபவன் கோழை.

**விடன்:** கோழை வீழ்க! வீரம் வாழ்க!

**நடன்:** உழுபவனுக்கே நிலம் சொந்தம்.

**விடன்:** ஆஹா...

**நடன்:** தொழிலாளர்களுக்கே ஆலைகள் சொந்தம்.

**விடன்:** ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய் வோம்!'' பாரதி வாக்கு...ஆஹா!

**நடன்:** குடியிருப்பவர்களுக்கே வீடுகள் சொந்தம். எல்லோரும் அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப ஊதியம். எல்லோரும் ஓர் இனம்- எல்லோரும் ஒரு நிறை- எல்லோரும் ஒரு விலை.

**விடன்:** ஆஹா— எத்தகைய உத்தம சமத்துவ சமவுடை மைச் சமுதாயம்...ஆமா, இந்தச் சமுதாயம் ஏன், இன்னமும் இங்கு தோன்றவில்லை?

www.padippakam.com



**நடன்:** சுரண்டும் முதலாளி வர்க்கம் தடையாக இருக்கின்றது.

**விடன்:** முதலாளி வர்க்கம் ஒழிக!

**நடன்:** பிற்போக்குவாதிகளும், சந்தர்ப்ப அரசியல்வாதிகளும் தடையாக இருக்கிறார்கள்.

**விடன்:** இவர்கள் எல்லோரும் ஒழிக!

**நடி:** இவர்கள் எல்லோரும் சாகத்தான் வேண்டுமா?

**நடன்-விடன்:** ஆமாம் சாகத்தான் வேண்டும்.

**நடி:** பார்த்தீர்களா?சாவு அவ்வளவு கேவலமானதல்ல... ஒரு வர்க்கத்தின் வாழ்வுக்கும் வளத்திற்கும் வேறு வர்க்கங்களின் சாவு இனிப்பாகத்தான் இருக்கிறது.

**விடன்:** நீ எல்லாவற்றையும் போட்டுக் குழப்புகிறாய்... ஐயோ தாங்க முடியவில்லை... பசிக்கிறது...தாகமாக இருக்கிறது.

**நடி:** பறவைகள் விதைப்பதில்லை; அறுப்பதுவுமில்லை.

**விடன்:** எனக்குப் பசிக்கிறது. ஐயோ...தத்துவங்கள் என் வயிற்றை ரொப்பப் போவது கிடையாது.

**நடன்:** தோழரே! பொறுத்திரும். புதிய சமுதாயத்திலே பசி என்ற சொல் அகராதியிலிருந்து அகற்றப்பட்டு விடும்.

**விடன்:** ஐயோ... அதற்கிடையில் நான் செத்துப் போவேன்... ஐயோ, சாவு என்னை நெருங்கி வருகின்றது.

[விடன் தள்ளாடி விழப்போக, நடன் அவனைத் தாங்கிப் பிடித்துக் கொள்கிறான்.]

**நடன்:** தோழரே! எனக்கும் அகோரப் பசி...அதை மறைக்கத்தான் புதிய சமுதாயம் பற்றி இனிப்பாகப் பேசினேன்.

www.padippakam.com



(சூத்திரதாரன் இடப்பக்க மேடையிலே தோன்றுதல்.) அதோ சூத்திரதாரன்...

**விடன்:** அவன் எங்களையும் இதிலே இழுத்துச் சீரழித்தது போதும். அவன் தன்பாட்டிலே தர்ம விசாரணை செய்து தொலைக்கட்டும்.

**நடன்:** வாழ்க்கை விலகி ஓடுது...

**விடன்:** சாவு வந்து சேருது...

**நடி:** வாழ்க்கை விலகி ஓடுது...

[மூவரும் இணைந்து] வாழ்க்கை விலகி ஓடுது
சாவு வந்து சேருது
வாழ்க்கை விலகி ஓடுது

[மந்திரம் ஜெபிப்பது போல, ஓர் உச்ச ஸ்தாயிலே துவங்கி, சுருதி இறங்கு தொனியிலே மங்க, நடன்-விடன்-நடி ஆகிய மூவரும் உறை நிலை அடைகிறார்கள்.]

**சூத்திரதாரன்:** பசியால் அலைந்தார்-அல்லலுற்றார்.
பதை பதைத்தார்...
பசியால் பவிசிழந்தார்
பசியால் செயலிழந்தார்
ஐயகோ
உயிர் துறந்தாரே
உயிர் துறந்தாரே

[மேடையிலே சடுதியாக, இருள் சூழ்ந்து, மீண்டும் ஒளிபரவ மேடையிலே சூத்திரதாரன் மட்டும் நிற்கிறான்.]

**சூத்திரதாரன்:** சாதனையில் தோல்வியே காணாத
விஸ்வாமித்திரனும் பசியிலே திகைத்தார்.
மேதினியில் சண்டாளப் புத்ரரும் வந்து
வாதுரைப்பார்
சண்டாள புத்ரரும் வந்து வாதுரைப்பாரே!
(எழினி)

www.padippakam.com

# ௮

## பிரகசனம்

[மேடையின் ஒளியமைப்பு அர்த்தராத்திரியைப் புலப்படுத்துகின்றது. மேடையின் வலப்புறம் ஒரு குடிசை. குடிசையின் வாசலிலே உடம்பின் மேற் பகுதி தெரியும்படியாகச் சண்டாளன் படுத்துக் கிடக் கிறான். தூக்கம். இடையிடையே குறட்டை ஒலி கேட்கின்றது. இடப்பக்கமாக விஸ்வாமித்திரன் மேடைக்கு வருகின்றார்.]

**விஸ்வாமித்திரன்:** (*தற்கூற்று*) எண்ணித் துணிந்தோம் கருமம். இனி, எண்ணுவோம் என்பது இழுக்கு. உணவு தேடி இச்சண்டாளன் குடிசையை நோக்கி வந்தாகிவிட்டது. இச்சந்தர்ப்பத்திலே தர்மா-அதர்மங்களைப் பற்றிய விசாரணை அடாது. ஆபத்து வேளைகளிலே, பாவத்தைப் பார்க்காது, தர்மத்தை மீறும் கர்மமே தர்மமாகின்றது. அஃதே ஆபத் தர்மத்தின் தத்துவ தரிசனம். மனித குலந்தான் வர்ணாசிரப்படி பிரிக்கப்பட்டிருக்கின்றது. உணவு வகையிலேயும் வர்ணாசிரமம் உண்டு என்று எவன் சொன்னான்?

[வலப்பக்கமாக விஸ்வாமித்ரனின் ஒத்த சாயலிலே நீதிதேவன் மேடைக்கு வரல்.]

படிப்பகம்

www.padippakam.com



**விஸ்வாமித்திரன்:** (தற்கூற்றின் தொடர்ச்சி) நடு நிசி. சுடும் வயிறு. வடு இல்லை. விடு கவலை. நான் செய்வதைப் பார்க்க யார் இருக்கிறார்கள்?

(விஸ்வாமித்ரனின் வழியினைத் தடுப்பவன் போல, நீதிதேவன் குறுக்கே வந்து நிற்கின்றான்.)

**விஸ்வாமித்திரன்:** நீ யார்? சொல். நீ யார்? நீ ஊமையா? உனக்கு வாய் இல்லையா?

**நீதிதேவன்:** வாய் ஒன்று. ஆனால், விழிகள் இரண்டு. உன் செயலைப் பார்த்துக் கொண்டு நிற்கின்றேன். இஃது அடாது; இழுக்கு!

**விஸ்வாமித்திரன்:** இழுக்கு? என் ஒழுக்கத்திற்கு அழுக்குக் கற்பிக்கின்றாயா? என் செயல், அது எதுவாக இருந்தாலும், அதுவே விழுமிய ஒழுங்கு. நான் சாமான்யன் அல்லன். முனிபுங்கவன்; அமலன்; நிர்மலன்!

**நீதிதேவன்:** தெரியும் விஸ்வாமித்ரா!

**விஸ்வாமித்திரன்:** என்ன? 'தவசிரேஷ்டரே' என்றழைக்காது, சமதையானவனைப் போல விஸ்வாமித்ர என்றழைக்கத் துணிவு பெற்ற நீ யார்?

**நீதிதேவன்:** நான் நீதிதேவன்; உன் மனச்சாட்சியின் உருவம்.

**விஸ்வாமித்திரன்:** பீதி கொண்டவர்கள் நீதி தொற்றி வாதுரைக்கலாம். ஆனால், இந்தத் தவசிரேஷ்டன் நேதிப்படி நடப்பவன்.

**நீதிதேவன்:** நீ நியதிப்படி நடக்கவில்லை என்பதைச் சுட்டத்தானே நான் வந்திருக்கிறேன்? பஞ்சம் வரும்; போகும். அவை சோதனை காலத்தின் ஸ்திதிகள். பஞ்சத்தினால் மனவுறுதியிலேற்படும் தளர்ச்சி என்னும் வடு மாறாது என்று எச்சரிக்கின்றேன்.

www.padippakam.com



**விஸ்வாமித்திரன்:** இழுக்கு-வடு-எச்சரிக்கை என்று மனோசிக்கலிலே தோய்த்தெடுத்த வார்த்தைகளை வைத்து அம்மானை ஆடுகிறாய்... இப்பொழுது தான் புரிகிறது. இங்குள்ள மாமிசத்தை நீ எனக்கு முன்னரே மோப்பமிட்டு விட்டாய். தர்மோபதேசஞ் செய்து என்னை அனுப்பிவிட்டு, அந்த மாமிசத்தை நீ புசிக்கப் பார்க்கின்றாய்...

**நீதிதேவன்:** பசியால் உன் பார்வை மந்தித்துவிட்டது. தெளிவு பெறு. நான் நீயே! உன் மனச்சாட்சி. பிறரிடமிருந்து நீ எந்த உன்னை மறைத்து வாழ விரும்புகின்றாயோ, அந்த உன்னின் பிரதிபிம்பம் நான். அதனை விடுத்து, உன் விந்தைக் கற்பனை களினால் என்னைக் கொச்சைப் படுத்தாதே! தாமதம் வேண்டாம். வா, போகலாம்.

**விஸ்வாமித்திரன்:** என் கையை விடு...பசியாலே தளர்ந்திருக்கும் என் உடலைத் தொடாதே...

**நீதிதேவன்:** நான் உன்னைத் தொடவில்லை.ஆனால்... அந்தச் சண்டாளன் வீட்டிலுள்ள மாமிசத்தைப் புசிக்க மாட்டேன் என்று சத்தியஞ் செய்து கொடு.

**விஸ்வாமித்திரன்:** சீ, நிறுத்து! சண்டாளனாம் சண்டா ளன்! (காணு நருக்கான புறக் கூற்றாக) ஆம், இப்படிக் கூறினாற்றான் இவனிடமிருந்து தப்ப லாம். (மீண்டும் முன்னிலைக் கூற்றாக) நீ பழங் காலத்து ஆசாமியைப்போலக் காணப்படுகின்றாய். திரேதா யுகம் முடிந்தது. ஒரு யுகம் முடிந்து இன் னொரு யுகந் தோன்றும் பொழுது, பொற்பமிகு கற்பனைகளும் தோன்றுகின்றன. இனிப் பிராமண னும் இல்லை; சண்டாளனும் இல்லை. யாவரும் ஓர் இனம்-யாவரும் ஓர் குலம்-யாவரும் ஓர் நிறை. இப்படிக் கூறிக் கொள்ளாவிட்டால், புது யுகத்தின் சிந்தனா வேகத்தையும், அதனுடன்

www.padippakam.com



கூட்டு நடை பயிலும் ஜன வேகத்தையும் புரிந்து கொள்ளாத மூடர்கள் என்று மற்றவர்கள் நம்மை ஏளனஞ் செய்வார்கள்.

**நீதிதேவன்:** முனிபுங்கவனாகிய நீயும், அந்தக் குடிசை வாழ் சண்டாளனும் ஒன்றா? சமமா?

**விஸ்வாமித்திரன்:** சொல்லளவிலேசமம். பின்னர் யோகங்களைப் பொறுத்து, கர்மம்-ஞானம்-பக்தி என்கிற தளங்களைக் கற்பித்து, புதிய சாதிகளையும், புதிய வர்ணாசிரம நெறிகளையும் தோற்றுவிக்கலாம்.

**நீதிதேவன்:** சண்டாளன் வீட்டிலே சாப்பிடுவதில் தோஷம் இல்லை என்று வைத்துக் கொண்டாலும், மாமிசம் அசைவம் அல்லவா? அதனால், அசுத்தமல்லவா?

**விஸ்வாமித்திரன்:** சைவம்-அசைவம்; சுத்தம்-அசுத்தம் என்பன மனோஸ்திகளை பொறுத்தன. சண்டாளனின் மனசு அசுத்தமாக இருப்பதினால், அவன் சாப்பிடும் பொழுது, அது மாமிசமாகவும் அசுத்தமானதாகவும் இருக்கின்றது. இறைச்சி சாப்பிட்டாலும், எலும்பைச் சுமந்து திரிதல் அபத்தமானது. ஆனால், கபாலமாலை அணிந்து கூத்தாடும் வீரபத்திரன் புனிதனல்லவா? நான் புண்ணியன்; புனிதன். என் நாவை அடையும் பொழுது, மாமிசங்கூடப் போசனமாகின்றது.

**நீதிதேவன்:** போசனம்?

**விஸ்வாமித்திரன்** ஆம்; போசனம்! பாதகா, போசனத்தை அசுத்தம் என்று சொல்ல உன் நாக்குக் கூசவில்லையா? நந்தி போல என் வழியிலே குந்தாதே. என் வழியை விடு. என் செயல் என் சுயேச்சை. என் யோகமாம் தவத்தாலேதான் உலகம் வாழ்கிறது; உய்கிறது.

www.padippakam.com



**நீதிதேவன்:** வருங்காலத்திலும் உலகம் உன்னாலே உய்ய வேண்டும் என்பதற்காகத்தான் உன்னை அழைத்துச் சொல்ல வந்தேன்.

[நீதிதேவன் விஸ்வாமித்திரனை வலப்பக்கமாக இழுத்துக் கொண்டு போக முயல்கிறான். அந்தப் பிடியிலிருந்து விலகி, இடப்பக்கமாக ஓட விஸ்வாமித்திரன் எத்தனிக்கின்றான். இந்த இழுபறிப் படலம் இசைநடனப்பாங்கத்திலே அமைக்கப்படுதல் ஏற்புடைத்து. நீதிதேவன் சடுதியாக மறையவும், விஸ்வாமித்திரன் இடறி விழுகின்றான். இடறி விழுந்த விஸ்வாமித்திரன் மெதுவாக எழுந்து, தற்கூற்றினை நிகழ்த்துகின்றார். அப்பொழுது, சண்டாளன் தூக்கங் கலைந்து, தீப்பந்தம்ஒன்றைக் கையில் ஏந்திக் கொண்டு, விஸ்வாமித்திரனுக்கு எதிரிலே வரல்.]

**விஸ்வாமித்திரன்:** (தற்கூற்றாக) இருட்டாக இருக்கின்றதே. இவ்வளவு நேரமும் கனவு கண்டேனா? சமிபாடு அடையாது வைத்த நம்பிக்கைகளின் அச்சுறுத்தல்கள் என் அகத்திலே சதுராடிய மாயத் தோற்றங்கள்... அசத்துக் காட்சிகள்... இருடிகளுக்கே உணவளித்துப் போஷித்த அருள்மிகு தவ வலியோனாகிய என்னையே பசி இப்படி எல்லாம் ஆட்டிப்படைக்கின்றது என்றால்... இல்லுநர் கதி இதுவானால், புல்லியர் கதி...இப்பொழுது பசி மட்டும் என்னைவாட்டாதிருந்தால்,வயிற்றுப்பசி பற்றியும், அதனை ஒழிக்கும் முகமாக வகுக்கப்பட வேண்டிய புதிய மார்க்கங்கள் பற்றியும், அற்புத போதனைகளை வித்தி, சத்தான பிரசங்கம் ஒன்றினை ஆற்றிட முடியும்...ம்...முடியும்...

**விஸ்வாமித்திரன்:** (சண்டாளனைப் பார்த்ததும் முன்னிலைக் கூற்றாக) நீ யார்? உண்மையைச் சொல்.

www.padippakam.com



நீ யார்? உன்னைப் பார்த்தால், யாரும் பயப்படு வார்கள்.

**சண்டாளன்:** என்னைப் பார்த்துப் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்னிடம். விழித்தேன் யாரோ இடறி விழும் சத்தம் கேட்டு. வந்தேன் யாராக இருக்கலாம் என்று பார்ப்பதற்கு. யார் நீங்கள்?

**விஸ்வாமித்ரன்:** என்னையாரென்று கேட்கும் அதிகாரம் உனக்குக் கிடையாது. நீ சொல். யார் நீ?

**சண்டாளன்:** நான் ஒரு சண்டாளன்.

**விஸ்வாமித்திரன்:** சண்டாளன்! 'நான்ஒரு சண்டாளன்' என்கிற சுவிசேஷத்தை எவ்வளவு பெருமையாகக் கூறிக் கொள்ளுகிறான்.

**சண்டாளன்:** மற்றைய மூன்று வர்ணத்தாரும் என்னை அழைக்கிறார்கள் சண்டாளனென்று. அப்பொழுது ஏற்படாத கௌரவக் குறைவு, எப்படி வந்தது என் சாதி அபிமானத்துடன் என்னைச் சண்டாளன் என்று கூறிக் கொள்ளும் பொழுது?

**விஸ்வாமித்திரன்:** வேண்டுமானலும், 'நான்ஒரு சண்டாளன்; நான் ஒரு சண்டாளன்' என்று ஓராயிரம் தடவைகள் சொல்லிக்கொள். ஆனால் அதிலே பெருமைப்படுவதற்கு என்ன இருக்கிறது, என்பது தான் எனக்குப் புரியவில்லை.

**சண்டாளன்:** இக்குடிசை என்னுடையது. இது நிறுவப் பட்டது என் உழைப்பால். இது என்னுடையது என்று கூறிக் கொள்வது எனக்கு எவ்வளவு பெருமையாக உள்ளதோ, அப்படித்தான் ஜாதி அபிமானமும்.

**விஸ்வாமித்திரன்:** ம்...அதே மாமிசந்தான்...நான் தேடி வந்த மாமிசம் இங்கேதான் இருக்கிறது...



படிப்பகம்

www.padippakam.com



**சண்டாளன்:** அந்த மாமிசம் என்னுடையது; என் சொத்து!

**விஸ்வாமித்திரன்:** அடே, சண்டாளா! இதென்ன அக்கிரமம்? எட்ட நில்! கிட்ட வந்து என்னைத் தொடவுந் துணிந்தாயோ? சண்டாளா, நான் பிராமணர்களிலே அதி சிறந்தோன். தவத்தால் உயர்ந்தோன். மகரிஷி! சநாதன தர்மத்தை மறந் தாயோ? நீ என்னைத் தொடுதல் தோஷம் என்பதை அறியாயோ?

**சண்டாளன்:** பிராமண சிரேஷ்டா! தண்டனிட்டேன், அஞ்சலி. தோஷம் விளையும் நான் உங்களைத் தொட்டால். ஆனால், தர்மமா நான் தொட்டு ஆக்கிய மாமிசத்தை உண்பது?

**விஸ்வாமித்திரன்:** அட, புலையா! தர்மத்தைத் தழுவி நிற்கும் தத்துவ வித்துவ விளக்கங்களை எனக்குப் போதிக்க நினைக்கிறாயா? மாமிசம் என் உண வாகும் பொழுதே புனிதமடைகின்றது. இந்த உணவைப் புசிப்பதினால் நான் உயிர் வாழ்வேன். இறக்கப் போகும் ஓர் உயிருக்கு அருளுதல் பாவம் என்று எங்கே சொல்லப்பட்டிருக்கின்றது?

**சண்டாளன்:** கேள்விப்பட்டிருக்கிறேன் பெரியவர்கள் சொல்ல. வாழ்வென்பது வெறும் பிரமையாம்.

**விஸ்வாமித்திரன்:** பிரமை?

**சண்டாளன்:** பிரமைதான்! இந்தக் குடிசையிலே கிடைக்கும் மாமிசத்தைச் சாப்பிடும் பொழுது நீங்கள் தொண்டை விக்கிச் செத்துப் போனால்... தின்ற பின்னர் அஜீரணக் கோளாறு காரணமாக மரணம் சம்பவித்தால்? உம்முடைய கழுத்தை யாரா வது திருகிக் கொன்றால்? நச்சரவம் தீண்டினால்? தின்றவர்கள் எல்லாரும் உயிர் வாழ்வார்கள் என் றால், எவ்வாறு சம்பவிக்கின்றது மரணம்?

www.padippakam.com



**விஸ்வாமித்திரன்:** அற்ப சண்டாளன் சொற்ப புத்தியுடன் பேசுகிறான். ஏதோ தர்மோபதேசம் செய்வதான ஏமாப்பும் கொள்ளுகின்றான். புல்லியனே, தள்ளி நில்; வழியை விடு. உன் பேச்சினை உன் நாய்கூடக் கேட்கமாட்டாது.

**சண்டாளன்:** முற்றிலும் உண்மை. என் பேச்சைக் கேட்கமாட்டாது என் நாய். ஏனென்றால், சமைத்து வைத்திருக்கிறேன் அந்த நாயைத்தான்! அந்த நாய்க் கறியைத்தான் திருட வந்திருக்கிறீர் நீங்கள்.

**விஸ்வாமித்திரன்:** திருடவா வந்தேன்? மூடா, பொருந்தாத வார்த்தைகள் கூறி என்மனதை உறுத்தாதே! கதவு திறந்து கிடக்கிறது. திறந்த கதவு என்னை வாவென்று அழைக்கும் பொழுது என் செயல் எப்படித் திருட்டாகும்?

**சண்டாளன்:** நான் ஏன் மூடி வைக்க வேண்டும் என் குடிசையின் கதவை? குடிசையிலே இருக்கும் யாவும் என் தேட்டம். அதற்குள் இல்லை நான் வெட்கப் படும் படியான எதுவும்.

**விஸ்வாமித்திரன்:** எடேய், சண்டாளா! உன் சின்னஞ் சிறிய மூளையிலே பென்னம் பெரிய தர்மத்தைப் பற்றிய அர்த்தம் எப்படி ஏறும்? இது திருட்டல்ல. இதுவே தர்மம்; ஆபத்தர்மம்.

**சண்டாளன்:** என்ன தர்மம்?

**விஸ்வாமித்திரன்:** ஆபத்தர்மம்.

**சண்டாளன்:** ஆபத்தர்மமா?

**விஸ்வாமித்திரன்:** ஆம்! ஆபத்துக் காலத்திலே என் போன்றோர் இயற்றும் செயலே தர்மமானது என்று வலியுறுத்தும் அதிகாரம்.

படிப்பகம்

www.padippakam.com



**சண்டாளன்:** எப்படி எல்லாம் நாக்குப் புரட்டிப் பேசுகிறீர் பசித்த வேளைக்குக் கொஞ்சம் மாமிசம் புசிப்பதற்காக. ஆயிரம் ஆயிரம் உயிர்கள் பசியிலே இறந்து கொண்டிருக்கும் பொழுது, நீர் ஒருவர் மட்டுமே வாழவேண்டும் என்று கொண்ட வேட்கை தர்மமா?

**விஸ்வாமித்திரன்:** ஆம்; அறிந்து கொள்ளடா. அது தான் தர்மம்.

**சண்டாளன்:** இல்லை. அப்பட்டமான சுயநலத்துக்கு உண்டா மறுபெயர் தர்மம் என்று? நீங்கள் சொல்லுகிறீர்கள், வந்தது திருடவல்ல என்று. நான் ஆட்சேபிக்கவில்லை அதை. அப்படியானால் வந்தது யாசிக்கவா?

**விஸ்வாமித்திரன்:** அசடனே! நீ எச்சிற் புத்தியுடன் பிச்சை பற்றிப் பேசுகின்றாய்.

**சண்டாளன்:** நீங்கள் பேசுவது ஆபத்தர்மம்.

**விஸ்வாமித்திரன்:** ஆம். ஆபத்தர்மம் என்பது ஆதி காலந்தொட்டு அநுசரிக்கப்பட்டு வந்துள்ள சநாதன தர்மத்தின் சத்தியமாய்த் திகழ்கின்றது.

**சண்டாளன்:** நீங்கள் ஒருவனே வாழவேண்டும் என்கிற தன்னலத்தில் எழுந்ததுதானே இந்தச் சத்தியம்?

**விஸ்வாமித்திரன்:** நான் சாமான்ய ஒருவனா? நீ செத்தாலும் கவலையில்லை. ஒரு சண்டாளன் செத்தான். அவ்வளவுதான்.

**சண்டாளன்:** நீங்கள்?

**விஸ்வாமித்திரன்:** நான் நான்கு வர்ணங்களிலும் முதல் வர்ணத்தைச் சேர்ந்தவன். மற்றைய வர்ணத்தாரின் யோக சேமங்களைக் கவனிக்கவாவது நான் உயிர் வாழுதல் வேண்டும். புரிகிறதா?

**சண்டாளன்:** சந்தேகம் ஒன்று எனக்கு...

படிப்பகம்

www.padippakam.com



**விஸ்வாமித்திரன்:** சண்டாளனுக்கும் ஒரு சந்தேகம்! கேள்.

**சண்டாளன்:** நீங்கள் உயர்ந்ததே என் போன்ற சண்டாளன் வாழ்வதினாலேதான். என்னுடைய யோக சேமங்களைக் கவனிக்க வேண்டிய கடமையும் ஏற்படுகின்றது நான் உயிர் வாழ்வதினால் தானே?

**விஸ்வாமித்திரன்:** (புறக்கூற்று) சண்டாளர்கூட இந்தக் காலத்திலே பேசப் பழகி வைத்திருக்கிறார்கள். (முன்னிலைக்கூற்று) டேய், ஏட்டிக்குப் போட்டியாகப் பொடி வைத்துப் பேசாதே.

**சண்டாளன்:** சுவாமி! உங்களுடைய உயர்வுக்கும், பெருமைக்கும், என் வாழ்க்கைக்கேகூட நான் உயிர் வாழ்வதுதான் மிகவும் அவசியம். நான் வாழ்வதற்காக என்னுடனேயே இருக்கட்டும் அந்த மாமிசம்.

**விஸ்வாமித்திரன்:** சண்டாளா, பசிச் சோர்வுடன் வந்திருக்கிறேன். வீண் விவாதங்கள் வேண்டாம். நீ சொல்பவை சரியென்றே வைத்துக்கொள்.

**சண்டாளன்:** அப்படியா சுவாமி?

**விஸ்வாமித்திரன்:** இப்படி ஒப்புக்கொள்வதும் ஆபத் தர்மமே!

**சண்டாளன்:** மீண்டும் ஆபத்தர்மம்?

**விஸ்வாமித்திரன்:** என் உயிரைக் காப்பாற்றும் உரிமையை நீ எடுத்துக்கொண்டால், ஈசனுக்கல்லவா வேலை இல்லாமற் போய்விடும்?

**சண்டாளன்:** முடிந்ததா உம்மாலே உமது உயிரைப் படைக்க? இல்லை, ஈசன் உழைப்பாலே சம்பாதிக்க முடியுமா இந்த உணவை?

www.padippakam.com



**விஸ்வாமித்திரன்:** விவாதம் வேண்டாம். பசித்தவனுக்கு உண்ணும் உரிமை இருக்கிறது என்பதை யாவது ஒப்புக் கொள்ளுகிறாயா?

**சண்டாளன்:** பசித்தவனுக்கு உண்ணும் உரிமை இருக்கலாம். அதற்காகத் திருடலாம் என்கிற தர்மம் சொல்லப்பட்டிருப்பது எந்த ஆகமத்தில்?

**விஸ்வாமித்திரன்:** ஆகமம்-சநாதனம் என்கிற பேச்சுகளே வேண்டாம். ஆபத்தர்மத்திலே எதுவுமே தர்மமானதுதான். எனக்குப் பசிக்கிறது. உன்னிடம் போசனம் இருக்கிறது. நீ சண்டாளனாக இருந்தாலும், உன் கையாலே எடுத்துக் கொடு. தோஷமும் இல்லை; பாவமும் இல்லை. நான் சாப்பிடுகிறேன்.

**சண்டாளன்:** நான் மனிதனாகவும் இருக்கிறேன், சண்டாளன் என்பதினால். பெரியவர்கள் சொல்வார்கள், மனிதனுடைய அருள் உள்ளத்திலே பிறப்பதுதான் ஈதல் அறமென்று. ''யார் செத்தாலும் நான் மட்டுமே பிழைத்தால் போதும்'' என்று நினைக்கும் உம்மைப்போன்ற சுயநலமிக்காக என் நெஞ்சிலே சுரக்கவில்லை அருள்.

**விஸ்வாமித்திரன்:** இந்தப் புல்லனின் கல்நெஞ்சிலே சுரக்குமா அருள்?

**சண்டாளன்:** நான் அறிவேன் என் நெஞ்சின் அருட் சுரப்பை. இந்த மாமிசத்தை என் கைகளாலே எடுத்துத் தந்து, என் கைகளைக் கறைப்படுத்த விரும்பவில்லை நான்.

**விஸ்வாமித்திரன்:** இவனிடம் போய் 'ஈ...ஈ...' என்று பல்லிழித்தேனே! ஆபத்தர்மம் எதையும் இயற்றும் அதிகாரத்தைத் தந்திருக்கிறது. உயர் ஜாதி என்கிற அதிகாரம் என் வசம் இருப்பதினால், அபகரித்தல் என்பது திருட்டாக மாட்டாது.

www.padippakam.com



அவசியம் ஏற்பட்டால், எல்லா மனுநீதி தர்மங்களையும், சநாதன விதிமுறைகளையும் மாற்றியமைக்கும் தவவலிமை என்னிடம் இருக்கின்றது. தேவர்களுடைய இஷ்டா பிரீதிகளுக்கு எதிராக, மனித உடல் கொண்ட திரிசங்குவுக்குத் தனிச் சொர்க்கம் படைத்துக் கொடுத்த என் சக்தியைப் பசியினால் மறந்தேனா? சண்டாள குலத்துக்கு இதுவரை நான் செய்த சேமயோக அருட்பாலிப் பிற்காக நியதிப்படி என்னைச் சேரவேண்டிய காணிக்கைப் பொருள்தான் இந்தச் சண்டாளனுடைய குடிசையிலே கிடைக்கும் மாமிசம்.

[விஸ்வாமித்திரன் சண்டாளனின் குடிசைக்குள் ஓடுகிறார். அவருடைய செயலுக்காக வெட்கப் பட்டவனாய் வேறு திசையிலே திரும்பி சண்டாளன் உறைநிலை அடைகின்றான். மேடையிலே இருள் சூழ்கிறது. இந்ரனுடைய முகம் மட்டும் மின்னல் வீச்சிலே தெரிகிறது. தொடர்ந்து மின்னல் வீச்சு.]

**இந்ரன்:** விஸ்வாமித்திரன் தோற்றான். அவன் தோற்றதினாலும் சிருஷ்டிச் சத்தியம் நிலைத்தது. படைப்புச் சத்தியம் நிலைத்ததினால், புதுயுகம் நிலைத்தது. வருணா! வாயு! ஈராறு ஆண்டுகளின் வரட்சி தூர்ந்து போய், செழிப்புக் கொழிக்கும்படி மழையைக் கொட்டு கொட்டென்று கொட்டு... ஹஹ்ஹா... ஹஹ்ஹா!

[மின்னலைத் தொடர்ந்து, மேடையிலே இருள் பரவி, ஊமை ஒளிக்கற்றை, உறைநிலை அடைந்த சண்டாளனையும், 'வியாயோக'த்திலே உறை நிலை அடைந்த நடன்-விடன்-நடி ஆகியோர் உறைநிலை அடைந்த அதே பாங்கத்தையும் மாறி மாறிக் காட்டுகின்றது. மழை பொழியும் உணர்வினை ஏற்படுத்தும் இசை-நடன ஆரம்பத் திற்கான 'ஷ்கூ' இடையிலே ஒலிக்கின்றது.]

படிப்பகம்

www.padippakam.com



**பின்னணி இசை:** ஷ்சூ...ஷ்சூ...

[உறைநிலை அடைந்திருந்த நடன்-விடன்-நடி ஆகியோர் உறைநிலை கலைந்து உயிர்ப்புப் பெற்றவர்களாக.]

**நடன், விடன்+நடி:** சாவு விலகி ஓடுது...

**பின்னணி இசை:** ஷ்சூ...ஷ்சூ...
ஷ்சூ...ஷ்சூ...

**நடன், விடன் + நடி:** வாழ்க்கை வந்து சேருது...

**பின்னணி இசை:** ஷ்சூ... ஷ்சூ...
ஷ்சூ... ஷ்சூ...

[உறைநிலை அடைந்திருந்த சண்டாளன் உயிர்ப்பு நிலை பெற்று, குழந்தையின் குதூகலத்துடன்...]

**சண்டாளன்:** மழையே மழையே மெத்தப் பெய்...
மழையே மழையே மெத்தப் பெய்...

[பின்னணியில் 'ஷ்சூ... ஷ்சூ...' கேட்டுக்கொண்டே இருக்க, சண்டாளன், நடன், விடன், நடி ஆகிய நால்வரும் மழை நடனத்திற்காக இணைகின்றார்கள்...]

**சூத்திரதாரன்:**

**மூசி மூசி உதைக்குது காற்று—ஷ்சூசூ
பேய்க்காற்று ஷ்சூ ஷ்சூ ஷ்சூசூ**

[மழை நடனத்திற்கான பாடலின் முதல் வரிகளைப் பாடிக்கொண்டே, ஆடுகின்றான். மற்றைய நால்வரும் அவருடன் நடனத்திலே கலந்து கொள்ள, மழைப் பாடல் பின்னணியிலே இசைக்கப்படுகின்றது. இந்தப் பாடலும், நடனமும் மேடையிலே மழை பொழிவது போன்ற உணர்வினைக் காணுநருக்கு ஏற்படுத்துதல் வேண்டும்.]

www.padippakam.com



**பின்னணி இசை:**

தத்தளாங்கு தத்தளாங்கு
தத்தித் தளாங்கு ததிங்கிணதொம்—த...
தீம் தரிகிட தீம் தரிகிட தீம் தரிகிட...

மூசி மூசி உதைக்குது காற்று—ஷ்சூசூ
பேய்க் காற்று ஷ்சூ ஷ்சூ ஷ்சூசூ—தலை
வீசி மூசி சுழலுது தென்னை—ஷ்சூசூ
ஷ்சூ ஷ்சூ ஷ்சூசூ

மேகம் ஓடிக் கறுக்குது வானம்—ஷ்சூசூ
கருவானம் ஷ்சூ ஷ்சூ —அலை
மோதி ஏறிக் கலக்குது வானில்...ஷ்சூசூ
வானில் கருவானில்—ஷ்சூசூ

வெட்டி வெட்டி பளிச் பளிச்சென—மின்னல்
ஒளிமின்னல் மின்னல் மின்னல்—பட
பட்படாரென பட்பட் படாரென—பட்பட்
படாரென தகருது வானம்—மழை

கொட்டிக் கொட்டிச் சோசோ சோவென—
சோ சோ
சோவென சொரியுது வெள்ளம்—சூசூ
முட்டிப் பாய்ந்து புரளுது புரளுது—வெள்ளம்
பெருவெள்ளம் சூசூசூ சூசூசூ

தத்தளாங்கு தத்தளாங்கு
தத்தத் தளாங்கு ததிங்கணதொம்—த...
தீம் தரிகிட தீம் தரிகிட தீம் தரிகிட

[இந்த அடிகள் மங்கலாக ஒலிக்க நடனத்திலே பங்கு கொண்டோர் இடப்புற மேடை வழியிலே மறைதல்... அவர்கள் மறைவதைக் காட்டும் ஒளி, வலப்புற மேடைக்குத் திரும்ப ஒளி இந்திரன் மீது மட்டும் நிலைக்கின்றது.]

www.padippakam.com



**இந்ரன்:** இந்த இந்ரனின் அருட் பார்வையினால், வெள்ளம் பூலோகத்தில் பிரளயமாக ஓடுகின்றது. விஸ்வாமித்திர, அறிந்து கொள். நீ தோற்றாய்; நான் வென்றேன்! இதனால் புதுயுகம் நிலை நாட்டப்பட்டது.

[ஒளி ஏகனில் மட்டும் விழுகின்றது].

**ஏகன்:** இந்ர, மமதை கொள்ளாதே! நீ வென்றாயா? விஸ்வாமித்திரன் தோற்றானா? நீ தோற்கவும் இல்லை, விஸ்வாமித்திரன் வெல்லவும் இல்லை என்று ஏன் கற்பித்துக் கொள்ளக்கூடாது? விஸ்வா மித்திரன் என்ற தவத்தோன் புது யுகத்தின் போக்கினை உணர்ந்து சண்டாளன் வீட்டிலே மாமிசம் புசித்த கர்மத்தினாலே மழை பெய்தது என்றும் வைத்துக் கொள்ளலாம். வெற்றியும் தோல்வியும் என் அம்ஸமே! புது யுகம் சிருஷ்டிச் சத்தியமாய் நிலைத்தது.

(எழினி) □

படிப்பகம்

www.padippakam.com

# 9

## பின்னுரை–*Epilogue*

**கடி:** புது யுகம்...

**நடன்+விடன்:** வாழ்க!

**கடி:** சண்டாளன்...

**நடன்+விடன்:** வாழ்க!

**கடி:** விஸ்வாமித்திரன்...

**சூத்திரதாரன்:**

[வலப்புற மேடை வழியாக அவசரமாக வந்து]

நாடகம் முடிந்து விட்டது என்று நினைத்துக் கலாட்டா செய்கிறீர்களா?

**நடன்:** நாடகம் இன்னமும் முடியவில்லையா?

**சூத்திரதாரன்:** மரபின்படி பின்னுரை ஒன்றும் இருக்கலாம் அல்லவா?

**கடி:** அவசரம் கூடாது.

**விடன்:** ஆமாம்... நிதானம் வேண்டும். சூத்திரதாரா, எங்களையும் இழுத்துப் போட்டு...

**சூத்திரதாரன்:**

**உங்களை இழுத்தது**
**எஸ்.பொ.வின் வேலை**
**முந்தி நின்றீர் கோஷம் போட**
**பிந்திப் போனீர்**

www.padippakam.com



**நடி:** ‘நான்’ என்னும் கலைஞனை நினைத்துப் பார்க்க...

**நான்:**

[‘நான்’ அப்பொழுது சபையிலிருக்கும் சுவைஞருள் ஒருவனாகவே மேடை ஏறுவான்.]

நான் உங்களை மறக்கவில்லை. ஏனெனில், நான் உங்களில் ஒருவனே.

**நடன்:** இது புதுக் குழப்பம்.

**நடி:** குழப்பத்திலேதான் தெளிவு பிறக்கும்.

**நான்:** உண்மை... நீங்கள் என் உத்தியிலே சமைந்த கற்பிதங்கள். நீங்கள் மூன்று உருவங்களாகத் தோன்றிய போதிலும், என் சிந்தனையின் சில படிமங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தவே இங்கே நாடகமாடினீர்கள். ஓர்மம் உள்ள கலைஞன் கலா சத்தியம் நோக்கிய பயணத்திலே தன்னை அழித்துக் கொள்ளுகின்றான். என் சிந்தனைப் படிமங்களே! என்னிலே சங்கமியுங்கள்...சங்கமி யுங்கள்! அந்தச் சங்கமத்திலே எல்லாமே ஒன்றாகும் முழுத்துவம் நிகழும்.

[நடன், விடன், நடி ஆகிய பாத்திரங்கள் நானிலே கலக்கும் ‘அற்புதம்’ நிகழ்கின்றது.]

**நான்:** நானும் பிறரும் ‘நான்’ என்று கற்பிக்கும் ‘அது’ மானுஷீகம் என்னும் முழுமத்திலே நீக்கமறக் கலந்து விடல் வேண்டும். சங்காரம் நிகழ்த்தும் இந்தத் தவத்தினாலேதான் பரம் பொருளுடன் உண்மையை உரைத்துப் பார்க்கும் சித்து வந்து வாய்க்கின்றது.

**சூத்திரதாரன்:**

**‘ஏகனும் நானும் சமதையே’**
**என வாதுரைக்கும் இவனும்**

www.padippakam.com



படைப்பு என் ஏகமே
என எக்காளமிடும் அவனும்
மோதிடும் அரங்கிலே-நான்
ஒரு சூத்திரப் பாவையே!

[சூத்திரதாரன் உறைநிலை அடைய, இருள் சூழ அவன் மறைகின்றான். மின்னல் வீச்சிலே மேடை வெறுமையாகத் தெரிகின்றது. மறுபடியும் மின்னல் வீசி, மின்னலே உறைநிலை அடைந்தது போல ஏகனிலே குவிகின்றது.]

**ஏகன்:** (அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டே) என் முறுவல்; என் குமிண் நகை; என் லீலா விநோதங்கள். அவை தொற்றிய கற்பிதங்கள். அந்தக் கற்பிதங்களிலே முகிழ்ந்த கூத்தின் சுருதிக்கோலங்கள்...

**நான்:** ஹஹ்ஹா (ஏகனை அபிநயிப்பது போலச் சிரித்தல்.)

**ஏகன்:** ஹே, மானிடா! ஏன் சிரிக்கிறாய்?

**நான்:** படைப்பின் எக்காளம். இந்த நாடகம் என் படைப்பு!

**ஏகன்:** உன் படைப்பு! உழவுக்கும் தொழிலுக்கும் வாழி பாடி வாழப் பிறந்தவன்தானே மனிதன்? நீ மண்ணைப் படைத்தாயா? அன்றி, உழவுக்கு உயிர் ஊட்டும் வான் மழையைப் படைத்தாயா?தொழிலுக்குத் தேவையான மூல வளத்தையும், பலத்தையும், ஆற்றலையும், நுட்பத்தையும் படைத்தாயா?

**நான்:** ஞானத்தின் பிரயோகமான யுக்தி என் சுதர்மம் என்றாயே!

**ஏகன்:** அருளினோம்! அதற்காக? மனித குலம் அறிந்து தெளிய வேண்டிய சத்தான தத்துவ வித்துவக் கருத்துகளை, முன்னரே ஞானியர்-யோகியர் மூலம் நான் வகுத்து வைத்துள்ளேன்.

www.padippakam.com



**நான்:** ஆனாலும், மாறி வரும் கால-தேச-வர்த்த மானங்களுக்கு ஏற்ப புதிய விளக்கங்கள் தேவைப் படுகின்றன.

**ஏகன்:** ஞானத்தின் தேடல் என்று சொல்லி, நான் கற்பிக்காத மானிட உருவங்களை ஆட வைத்தது ஏன்?

**நான்:** ஏகனே, அது உத்தி.

**ஏகன்:** மானிடா, உன் புத்தியை என் பக்தியிலே படியவை! உத்தி என்று தடுமாறாதே,

**நான்:** தடுமாற்றமா? உருவங்கள் என் சிந்தனைப் பாங்கங்களின் சில ஸ்திதிகளே... உருவங்களின் படைப்புக்கு யுக்தியைப் பயன் படுத்துதலே உத்தி.

**ஏகன்:** ஹே, மானிடா! என்னுடன் வழக்கா?

**நான்:** எல்லாம் அறிந்த ஏகனே! நான் சாதாரண மனிதன். விஸ்வாமித்ரனும் சண்டாளனும் மனிதர் களே. எனவே, மானிட வர்க்கத்தின் புதிய சிந்த னைகளும் அநுபவங்களும் யுக்தியின் போக்கினைப் பாதிக்கும் என்பதை அறியாயா?

**ஏகன்:** நான் படைத்துள்ள அநந்த கோடிகளுள் உன் யுக்தி மிக மிக அற்பம். அதன் பிரயோகம் படைப் பாகிவிடுமா? உனக்குச் செருக்கு மிஞ்சினால் உன்னையும் சோதனைக்குட்படுத்துவேன்.

**நான்:** படைப்புத் தோற்றிய செருக்கு உன் ஏக போகமா? வித்துவச் செருக்கு என்னுடையதும்.

**ஏகன்:** என்னுடன் போட்டியா? படைப்பிலும் செருக்கி லும் என்னுடன் போட்டியா?

**நான்:** ஆம்.

**ஏகன்:** ஆம்?

**நான்:** கலாசத்தியத்தை ஊன்ற என்னையே பலிப் பொருளாய் நியமித்துள்ள கலைஞன் நான்.

www.padippakam.com



சோதனைகளும் அக்னிப் பரீட்சைகளும் நான் எதிர் கொள்ளச் சித்தம் கொண்டவை...

**ஏகன்:** உன் வித்துவமும் படைப்பும் எவை?

**நான்:** ஏகன் ஒரு கருத்தினை நிலை நிறுத்த ஒரு மாமாங்க காலமாக நாடகம் ஆடினான். அப்போது எத்தனை ஆயிரம் ஆயிரம் மனிதர்கள் மாண்டார்கள்? எத்தனை கோடி உயிர்கள் பலியாயின? சத்தியம் பற்றிய ஓர் எண்ணக் கருவினை நிலை நிறுத்த இத்தகைய கோர சங்காரம் தேவை தானா? என் வித்துவமான 'முறுவல்' நாடகத்துக்கு நீயும் ஒரு சாட்சியல்லவா?

**ஏகன்:** ஏகன் எல்லாம் வல்லவன்; எல்லாம் அறிந்தவன்... மானிடா, பக்தர்கள் என்னிடம் தோற்றது மில்லை; நான் அவர்களை வெற்றி கொள்ள அவாவியதும் இல்லை.

[நாடகத்திலே பங்கு பற்றிய அனைவரும் கையைத் தட்டிக் கொண்டு மேடைக்கு வருகின்றனர். அவர்கள் அவைக்கு வணக்கம் செலுத்த, ஏகனின் கூற்றுத் தொடர்கின்றது.]

**ஏகன்:** நீயும், கூத்துக் கலையில் சிரத்தை ஊன்றும் எல்லோரும், கலாசத்தியத்திலே நித்திய பக்தி பூண்டு என்னிலே கலவுங்கள்... (ஏகன் சிரித்தல்) ஹஹ்ஹா...

**நான்:** (சிரித்தல்) ஹஹ்ஹா...

[ஏகனினதும், நானினதும் சிரிப்புகளுக்கு ஏற்ப நாடக மாந்தர் அனைவரும் கைதட்டிக் கொண்டே இருக்க, மேடையின் முகப்பாக அமைந்த பொருமுக எழினி பொருந்துகின்றது.] ☐

www.padippakam.com

அன்பார்ந்த நாடகச் சுவைஞ,

நாடகக் கலையிலே நீ பூண்டுள்ள அக்கறையை மதிக்கின்றேன். அது குறித்து நீ கொண்டிருக்கக்கூடிய கருத்துக்களை, அவை என்னுடன் முரண்பட்டவையாக இருந்தாலுங்கூட, கௌரவிக்கின்றேன்.

'முறுவல்' பற்றிய அறிவு நிலையும், பரம்பலும் விரும்பத்தக்கன.

இதுகுறித்த கருத்துப் பரிவர்த்தனைகள் வரவேற்கப்படுகின்றன.

கலை சமஸ்தமானது. முறுவலும் அவ்வாறே.

இந்த நாடகத்தினை, நாடகக் கலைஞர்கள், தங்களுக்குத் தோதுப்பட்ட மேடைகளிலே அரங்கேற்ற முன் வரலாம்.

இதன் மேடையேற்றம் பற்றிய தகவல்களை ஆக்கியோனுக்கு அறியத் தருதல், அறிவு நாகரிகமாகும்.

**எஸ்.பொ.**

**ESPO**
**(S. Ponnuthurai)**
**1/23 Munro Street**
**Eastwood 2122**
**AUSTRALIA**
**Phone: (02) 868 2567**

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

இலக்கியம், நிகழ்த்துதல் என்ற இருநிலைகளிலும் 'முறுவல்' நிலைத்து நிற்க வேண்டும் என்ற எஸ்.பொ.வின் கலா பிரக்ஞையை உணர முடிகிறது. அவரது அந்தரங்க நம்பிக்கையும் ஆத்மார்த்த முயற்சியையும் 'முறுவல்' ஆழமாக உட்கொண்டுள்ளது. புலம் பெயர்ந்த தமிழர்களை அடிமனதுக்குள் எங்கோ உறைந்து கிடக்கும் சுயமண்ணின் மனத்தை நினைவு மண்டலத்துட் கொண்டு வந்து மூச்சு சுவாசத்தோடு மரபு முகர்தலை உயிர்த்துடிப்பாக்கும் நம்பிக்கையும், முயற்சியும் இணைந்த ஒரு தேடல் இது... எஸ்.பொ. தற்காலப் பின்னணியில் மேலும் ஒரு ரூபத்தை ஆக்கித்தர முனைந்து முயற்சித்துள்ளார்.

பேராசிரியர் செ. இராமானுஜம்



படிப்பகம்